விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 23 வியாழக்கிழமை (07.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 201

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



## ‘2018இல் இராணுவமற்ற வடக்கு-கிழக்கு’

# குற்றத்தை தூண்டியோர் அடையாளம் காணப்படுவர்

## இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

2018ஆம் ஆண்டளவில் வடக்கு கிழக்கை இராணுவ சூன்ய பிரதேசமாக்க எண்ணம் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ள இலங்கை அரசாங்கம், போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான குற்றங்கள் இழைக்கப்படுவதற்கு உத்தரவுகளைப் பிறப்பித்தவர்களை அடையாளம் காணவேண்டியது மிகவும் அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....



## பஷிலின் இரு நாய்களை பராமரிக்க 5 கடற்படையினருக்கு பணி நியமனம்

### ஆணைக்குழுவின் விசாரணையில் தகவல்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பஷில் ராஜபக்ஷ இருந்த போது, அவர் வளர்த்த உயர்வகை நாய்களைப் பராமரிக்க ஐந்து கடற்படையினருக்கு முழுநேரப் பணி வழங்கப்பட்டிருந்ததாக பாரிய மோசடிகள், ஊழல்கள், அதிகார முறைகேடுகள் குறித்து விசாரிக்கும், ஜனாதிபதி ஆணைக்குழுவன் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

பஷில் ராஜபக்ஷ வளர்த்த இரண்டு கோல்டன் ரெட்ரிவேர்ஸ் நாய்களின் கூண்டைப் பராமரிப்பதற்கு ஐந்து கடற்படையினர் முழுநேரப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த உயர்ரக கலப்பு இன நாய்கள் வளர்க்கப்பட்ட கூண்டு முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதிகளை கொண்டிருந்தது.

இந்த இரண்டு நாய்களில் ஒன்று சென்னையில் இந்தியாவில் இருந்து இரண்டு இலட்சம் ரூபாயுக்கு வாங்கப்பட்டதாகும்.

பசில் ராஜபக்ஷவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற

24ஆம் பக்கம் பார்க்க....

## பொருளாதார மத்திய நிலையத்தை வடக்கில் எங்கே அமைப்பது?

### துறைசார் நிபுணர்களின் கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் அமையவுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை எங்கு அமைப்பது பொருத்தம் என்பது தொடர்பில் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களை தமிழ மக்கள் பேரவையின் பொருளாதார வலுவூட்டலுக்கான உப குழு கண்டறியவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை

24ஆம் பக்கம் பார்க்க....

## வெளிநாடுகளிலிருந்து சாட்சியமளிக்க முடியும்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து சாட்சியமளிக்கும் சட்டத்தில் திருத்தங்களுக்கு இடமளிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் கடந்த மே மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் பஸ் கட்டணம் மாற்றத் தீர்மானம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரே பஸ் கட்டண மாற்றம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி மைத்திரிபால சிறி

23ஆம் பக்கம் பார்க்க....



## ஜனாதிபதியாக மகிந்தவை மீண்டும் அமர வைப்போம்

### தடுக்க முடியாது என்கிறார் வெல்கம



(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பயணத்தை யாராலும் தடுக்க முடியாது. அப்பயணம், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவையும் கொண்டு முன்னகர்த்தப்படும் என்று தெரிவித்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, ஜனாதிபதி ஆசனத்தில் முன்னாள் ஜனா

23ஆம் பக்கம் பார்க்க....

## தாய்ப்பால் புரையேறியதால் 35 நாளான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால் புரையேறியதால் முப்பத்து ஐந்து நாட்களான குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை சுழிபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுழிபுரம் கல்விளானை சேர்ந்த கிருபாகரன் மேசாத் எனும ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று அதிகாலை குறித்த பகுதியை சேர்ந்த மேற்படி குழந்தை பாலுக்காக அழுதுள்ளது. அழுத

24ஆம் பக்கம் பார்க்க....




## இராணுவம் அருகே வசிப்பது அச்சத்தை ஏற்படுத்துகிறது

### மீள்குடியேறிய மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து மக்களின் மீள் குடியேற்றங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் மீண்டும் புதிப்பிக்கப்பட்டு மீள அமைக்கப்பட்டு வருவதனால் அங்கு தற்காலிகமாக குடியேறியிருந்த சில குடும்பங்கள் அங்கிருந்து அச்சம் காரணமாக வெளியேறி வருகின்றன.

இதனால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் மீள குடியேறாத நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினமும் இவ்வாறு ஒரு குடும்பம் அங்கிருந்து வெளியேறி மாற்று இடமொன்றில் தங்கியு

23ஆம் பக்கம் பார்க்க....

## வெட்டுக்காயத்துடன் கிணற்றில் சடலம்!

(யாழ்ப்பாணம்)

கழுத்தில் வெட்டுக்காயத்துடன் காணப்பட்ட ஆண் ஒருவரின் சடலம கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சங்கரத்தை தேவாலய வீதிப் பகுதியிலுள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து நேற்றிரவு 9 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் அதே

23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகளான தம்பதியர் நேற்றுக் கைது!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளான முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் சிவநகர் பிரதேசத்தில் வசித்து வந்த கணவனும் மனைவியும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைதுச் சம்பவம், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30க்கு இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதாக சம்பவத்தை நேரில கண்டவர்கள் தெரிவித்தனர்.

எனினும் குறித்த கைது நடவடி

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# “பெரும்பான்மையினர் உரிமை கோரலாம்”

(பரந்தன்)

ஐம்பது வருடங்களின் பின் கிளிநொச்சியை பெரும்பான்மை இனத்தவர்கள் உரிமை கோரும் அபாயம் இருப்பதாக வட மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை எச்சரித்துள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நகர அபிவிருத்தி தொடர்பான முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தில் கிளிநொச்சியில் உள்ள இராணுவ வெற்றிச் சின்னாங்கள் அகற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கிளிநொச்சியில் டிப்போ சந்தியில் முன்னர் சந்திரன் பூங்கா இருந்த வளாகத்தில் இராணுவ வெற்றிச் சின்னம் ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது. அதைவிட அவ் வளாகத்தில் பல வருடங்கள் பழமை வாய்ந்த செங்கற்களான சுவர் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் ஐம்பது வருடங்களுக்கு பின்னர் தென்பகுதியில் இருந்து வருகின்ற பெரும்பான்மை இனத்தவர்கள் இச்சுவரைக் காட்டி இது எமது இனத்தவர் வாழ்ந்த பூர்வீக இடங்கள் என உரிமை கோரும் அபாயம் உள்ளது.

மேலும் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னங்களை தினமும் பார்வையிடும் போது யுத்தத்தின் வலிகளை மறக்க எம்மவர்கள் முடியாதவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு வளர்ந்து வருகின்ற சிறுவர்கள் இச் சின்னம் ஏன் அமைக்கப்பட்டுள்ளது என கேள்வி எழுப்பும் போது யுத்தத்தின் வலிகள் பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும்.

எனவே கிளிநொச்சியில் உள்ள அனைத்து இராணுவ வெற்றிச் சின்னாங்களும் உடன் அகற்றப்பட வேண்டும் எனவும் அவா தெரிவித்தார். (செ-312)

# துன்னாலை கோஷ்டி மோதல்; அறுவர் கைது

(கரணவாய்)

துன்னாலை கிழக்கு பகுதியில் கடந்த மாதம் 29-ம் திகதி இடம்பெற்ற கோஷ்டி மோதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பெண் உட்பட 6 சந்தேக நபர்களை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று அப்பிரதேசத்தில் உள்ள இரண்டு பகுதியினருக்கு இடையில் கருத்து முரண்பாடு ஒன்று ஏற்பட்டு அம்முரண்பாடு சிறிது நேரத்தில் கத்தி, பொல்லுகள் கொண்டு நடத்தப்பட்ட பெரும் குழு மோதலாக மாறியது.

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையிலும் சிலர் அடிகாயங்களுக்கு உள்ளான நிலையிலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

இதன்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தோர் பொலிஸாரிடம் தமது வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

இதற்கமையவே பெண் உட்பட மேற்படி ஆறு சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் விடுமுறை என்பதால் இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லைஎன்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-5-60)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





நடராசா ராமதாஸ்
B.A (HONS), PGDE (Distinction), M.Ed (HONS)
SLPS III

கந்தையா கோடீஸ்வரன்
B.Sc (HONS), PGDE
SLPS III

எமது கல்லூரி ஆசிரியர்களாகிய திரு. ந.ராமதாஸ், திரு.க. கோடீஸ்வரன் ஆகிய இருவரும் அதிபர் சேவை தரம் III ஐ பெற்றமையையிட்டு நாம் மிகுந்த மன மகிழ்ச்சி கொள்வதுடன் அவர்களது பணி மேலும் சிறப்புற்று தொடர வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

விற்பனைக்குண்டு

முல்லைத்தீவு பகுதியில் ரெட் லேடி இன பப்பாசி கன்று விற்பனைக்கு உண்டு.
0772105322
(C-5119)

ஆட்டோ சேவை

பருத்தித்துறையில் இருக்கும் ஆட்டோ பாடசாலை சேவைக்கு ஓடுவதற்கு தயாராக இருக்கின்றோம். எந்தப் பாடசாலையாயினும் சேவை நடைபெறும்.

தொடர்பு :-
076 778 8288

SLEAS இறுதிக் கருத்தரங்கு

வெள்ளவத்தை
தமிழ்சங்க வளாகம் கல்வி நிலையத்தில் சனி காலை 9.00 மணிக்கு

அனுராதபுரத்தில்
விவேகானந்தக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கு
076 688 3394

உள்ளூராட்சி சபைத் தேர்தல்
வேட்பாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுவதில் ஆர்வமுள்ளவர்களை விண்ணப்பங்களின் ஊடாக உள்வாங்க இம்முறையும் கட்சி தீர்மானித்துள்ளது

இதற்கமைய சமூக முன்னேற்றத்தில் ஈடுபாட்டுடன் கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொண்டு மக்கள் சேவையாற்றக் கூடியவர்கள் தமது விண்ணப்பத்தை கீழ் வரும் விபரங்களுடன் எமக்கு சுயமாக தயாரித்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

போட்டியிட விரும்பும் உள்ளூராட்சி சபை - ( மாநகரசபை / நகரசபை / பிரதேச சபை ) ...

1. முதலெழுத்துக்களுடன் பெயர் ....
2. முதலெழுத்து குறிக்கும் பெயர் ....
3. முகவரி ....
4. தொலைபேசி இலக்கம் ....
5. பிரதேச செயலகம் ....
6. உள்ளூராட்சி சபை ....
7. கிராம அலுவலர் பிரிவு ....
8. வட்டார இலக்கம் ....
9. பிறந்த திகதி ....
10. தேசிய அடையாள அட்டை இலக்கம் ....
11. கல்வித் தகைமை ....
12. ஈடுபட்டுள்ள சமூகப் பணிகள் ....
13. தொழில் ....

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி -
செயலாளர் நாயகம்
ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சி
273, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
(5143)

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
அறநெறிப் பாடசாலை
நடாத்தும்
மாணிக்கவாசகர் குருபூசை
நிகழ்வு - 2016

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

காலம் : 2016.07.08. வெள்ளிக்கிழமை பி.ப 6.00 மணி

நிகழ்ச்சிகளாக கலாமன்ற ஆசிரியர்களும் மாணவர்களும் வழங்கும் புஷ்பாஞ்சலி, பேச்சு, திருவாசகத் தேனிசை, அரங்க ஆற்றுகை என்பவற்றுடன் “புகழில் திகழும் அழகன்” எனும் தலைப்பில் தமிழருவி. காரை. த. சிவகுமாரன் அவர்களின் சொற்பொழிவும் சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெறும்.

சிறப்பு பட்டிமன்றம்
தலைப்பு : “பெரியபுராணத்தில் விஞ்சி நிற்பது”
ஆண்டவன் சோதனையா! அடியவர் சாதனையா!

ஆண்டவன் சோதனையா!
1. திரு.வே.சிவராசா (சமூக சேவை உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்)
2. திரு.செ.சசீவன் (உத்தியோகத்தர், மக்கள் வங்கி, சுன்னாகம்)
3. திரு.இ.சர்வேஸ்வரா (உதவிப் பதிவாளர், மருத்துவபீடம் யாழ்.பல்கலைக்கழகம்)

அடியவர் சாதனையா!
1. “செந்தமிழ் சொல்லருவி” திரு.ச.லலீசன் (பிரதி அதிபர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
2. திரு.தெ.ஹர்ஷன் (உத்தியோகத்தர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
03. திரு.ந.ஜங்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

நடுவர்
தமிழருவி, காரை.த.சிவகுமாரன் அவர்கள்
(அமைப்பாளர், தமிழ்ச்சங்கம், வவுனியா)

குறிப்பு: இந் நிகழ்விற்கான இலவச போக்குவரத்துச் சேவை இல.11, கஸ்தூரியார் 1-வது ஒழுங்கை, (உதயன் பணிமனை அருகாமை ஒழுங்கையில் உள்ள) கலாமன்ற யாழ் கிளையில் இருந்து பி.ப. 5.15 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்
(சி-5123)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பை ஆராய குழு



அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்காக ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் அமைச்சர்கள் குழுவொன்று உருவாக்கப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அவர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க குறித்த குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தொடர்பில் வாரத்தில் இரண்டு தடவைகள் ஊடகங்கள் ஊடாக அறிவிக்கவும் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)



(கேலிச்சித்திரம்)

# இலங்கைக்கு ஜெனிவாவில் அனைத்து நாடுகளும் பாராட்டு

## அமைச்சர் மங்கள மகிழ்ச்சி

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஜெனிவாவில் அனைத்து நாடுகளும் பாராட்டு தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.**

அரசாங்கம் நிரபராதிகளுக்கு தண்டனை வழங்க முற்படுகின்றது என்ற பொய்யான கருத்துக்கள் பரவி வருவதாகவும், ஊடகங்களும் இதற்கு துணை போவதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். எனினும் அவை பொய்யான தகவல்கள் எனவும் உண்மையான தகவல்களை மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் தற்போது ஒற்றுமையாக வாழ்கின்றனர். ஆனால் இதை பொறுக்க முடியாத சிலர் நாட்டை பிளவுபடுத்துவதற்கு முயற்சிப்பதாகவும் மங்கள குற்றம் சுமத்தினார்.

இவ்வாறு பொய்யான தகவல்களை பரப்பும் அனைவருக்கும் எம்மால் பதிலளிக்க முடியும். அதற்கு காரணம் நாம் சரியான செயற்றிட்டங்களையே முன்னெடுத்து வருகின்றோம் எனவும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஜெனிவாவில் பேசிய அனைத்து நாடுகளும் பாராட்டியதோடு, இலங்கை தற்போது செல்லும் புதிய பாதை மிகவும் சிறந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கோப் குழுவிலிருந்து வேலுகுமார் விலகல்

பொது முயற்சியாண்மை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து (கோப்) நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பிலான கடிதம் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கட்சியின் சார்பில் கோப் குழுவில் அங்கம் வகித்து வந்தார்.

எனினும், தற்போது அவர் இந்தக்குழுவிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் விசாரணைகளுக்காக இவ்வாறு விலகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குமாரின் இடத்திற்கு சட்டத்தரணியான சுஜீவ சேனசிங்க நியமிக்கப்படுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## கஞ்சா விற்பனை; தந்தை, மகள் கைது

ஹற்றன் பிரதேசத்தில் கஞ்சாவை பொதி செய்து விற்றுவந்த தந்தையும், மகளும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன், குடாகம பிரதேச வீடொன்றில் இவர்கள் கஞ்சா விற்பனையில் மிக நீண்டநாட்களாக ஈடுபட்டு வந்துள்ளதாகவும் குறித்த தந்தை பல தடவைகள் கஞ்சா விற்பனை குற்றச்சாட்டின் கீழ் ஹற்றன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)

## காணாமற் போனோரை தேடும் அலுவலகம் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல்-ஜீ.எல்.பீரிஸ்

ஐ.நா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய இலங்கையில் ஸ்தாபிக்கப்பட உள்ள காணாமற்போனோரை தேடும் அலுவலகம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குபவர் என சிலர் சொல்லும் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார். (இ-10)

## ஹெரோயினுடன் பிக்கு உட்பட மூவர் கைது

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக நொச்சியாகமைக்கு கார் மூலம் ஹெரோயின் கடத்திய பிக்கு உட்பட மூவரை அநுராதபுர குற்றப் புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து 3.32 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பன்னிப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

# கஞ்சா கடத்தல்களைக் கட்டுப்படுத்த வடக்கில் விசேட பொலிஸ் குழுக்கள்

## மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் தகவல்

கஞ்சா கடத்தல்களை வடக்கில் கட்டுப்படுத்துவதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் உருவாக்கப்பட்டு இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார். நேற்று முன்தினம் கடல் வழியாக கடத்தப்பட்ட ஆறு மில்லியன் பெறுமதியான கேரளா கஞ்சாவுடன் நபர் ஒருவரை யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைதுசெய்திருந்தனர்.


பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த நபரே இதன் போது கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்.குருநகர் சவக்காலை சந்தியில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை துவிச்சக்கரவண்டியில் இருபது பொதிகளில் நாற்பது கிலோ கேரள கஞ்சாவினை கொண்டு பயணித்த வேளையிலேயே மேற்படி நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன் போது சுமார் 6 மில்லியன் ரூபா பெறுமதியான 40 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் இந்தியாவிலிருந்தே வடக்கிற்கு கஞ்சா கடத்தப்படுகின்றது. இந்த கடத்தலை தடுப்பதற்கு கரையோர இடங்களில் பொலிஸ் குழுக்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக யாழில் கஞ்சா கடத்தல்கள் குறைவுற்று காணப்பட்ட போதிலும் திடீர் திடீரென பெருமளவிலான கஞ்சா கடத்தப்படுகின்றது. இவ்வாறு கடத்தப் படுபவை அதிகமாக கேரள கஞ்சாவாகவே காணப்படுகின்றது. ஆகவே இது தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்தி உள்ளோம்.

இதற்கென ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் விசேட பொலிஸ் பிரிவுகள் உருவாக்கப்பட்டு அவற்றின் ஊடாக கணிகாணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பொலிஸ் பிரிவுகள் அனைத்தும் ஒருங்கிணைப்பை கொண்டு அவற்றின் மூலமாகவே கஞ்சா கடத்தல்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஆறுதல் வெற்றி கூட பெறாத நிலையில் இங்கிலாந்தில் இருந்து புறப்படும் இலங்கை



இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதிய இருபது-20 போட்டியில் இங்கிலாந்து அணி அசத்தல் வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டி இங்கிலாந்தில் உள்ள சௌத்தாம்டன் மாநகரில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணயசுழற்சியில் வென்று முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களே எடுத்தது.

இதில் அணியின் தொடக்க ஆட்டக்காரர் குஷால் பெரேரா 13 ஓட்டங்களில் பிலன்க்கிட் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார், அடுத்தபடியாக குணதிலக (26), குஷால் மென்டிஸ் (21), அணியின் தலைவர் சண்டிமால் (23), ரம்புக்வேலா (19), மகரூப் (10), அணியின் மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ஜோர்டன் 3 விக்கெட்டும், பிலன்கிட் 2 விக்கெட்டும், டாசன் 3 விக்கெட் வீழ்த்தினார்கள்.

எளிய இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஜாசன் ராய் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் மத்யூஸ் வீசிய முதல் ஓவரிலேயே போல்டாகி வெளியேறினார்.

அடுத்தபடியாக ஜேம்ஸ் வின்ஸ் 16 ஓட்டங்களில், மத்யூஸ் ஓவரிலியே ஸ்டம்பிங் செய்யப்பட்டார்.

மேலும் இங்கிலாந்து அணியின் விக்கெட கீப்பர் ஜேம்ஸ் பட்லர் மற்றும் அணியின் தலைவர் இயான் மோர்கன் ஆகியோர் அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர்.

அதிரடியாக ஆடிய பட்லர் 49 பந்தில் (73), மோர்கன் 39 பந்தில் (47) எடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர். இதனால் இங்கிலாந்து 17.3 ஓவரில் 144 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியின விக்கெட் கீப்பர் ஜோஸ் பட்லர் தெரிவு செய்யப்பட்டார்.

இங்கிலாந்து அணி (1-0) என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியுள்ளது, 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கையை வீழ்த்தி இங்கிலாந்து கிண்ணத்தை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (க)

# வரி ஏய்ப்பு வழக்கு தொடர்பில் மெஸ்ஸிக்கு 21 மாதம் சிறை



வரி ஏய்ப்பு வழக்கில், அர்ஜென்டினா கால்பந்து அணியின் தலைவர் மற்றும் பார்சிலோனா வீரர் மெஸ்சிக்கு 21 மாத சிறைத் தண்டனையும் 15 கோடி ரூபாய் அபராதமும் விதித்து பார்சிலோனா நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஸ்பெயினை சேர்ந்த பார்சிலோனா அணிக்காக நீண்ட காலமாக விளையாடி வரும் லயனல் மெஸ்சி, கடந்த 2007 முதல் 2009-ம் ஆண்டு வரை, வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

தனது விளம்பர வருவாயை , உள்ளதை விட குறைவாகக் காட்டி, சுமார் 4.1 மில்லியன் யூரோ (இலங்கை மதிப்பின்படி ரூ. 138 கோடி ரூபாய்) வரி ஏய்ப்பு செய்ததாக மெஸ்ஸி மீதும், அவரது தந்தை ஜார்ஜ் ஹார்ஷியோ மீதும் வழக்கு தொடரப்பட்டது.

ஸ்பெயின் நாட்டு நிறுவனங்களுக்கு மெஸ்சியின் படத்தை பயன்படுத்த அனுமதி வழங்கியதால் கிடைத்த வருமானத்தை சுவிட்சர்லாந்து, பிரிட்டன், உருகுவே உள்ளிட்ட நாடுகளில் உள்ள நிறுவனங்களில் இருந்து கிடைத்த வருவாயாக காட்டி, இந்த வரி ஏய்ப்பு நடைபெற்றிருப்பதாக மெஸ்சி மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கு பார்சிலோனா நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

நீதிமன்றத்தில் மெஸ்சி, தனக்கு எங்கிருந்து எப்படி வருவாய் வருகிறது என்று தெரியாது என்றும், தனது பணப் பரிவர்த்தனைகள் தொடர்பான அனைத்து விஷயங்களையும் தனது தந்தை ஜார்ஜ்தான் கவனித்து வருவதாக தெரிவித்தார்.

இந்த வழக்கில் குற்றச்சாட்டு நிரூப்பிக்கப்பட்டதையடுத்து, மெஸ்சிக்கு 21 மாத சிறைத் தண்டனையும் ரூபாய் 15 கோடி அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பளித்தது பார்சிலோனா நீதிமன்றம். மெஸ்சியின் தந்தை ஜார்ஜ் ஹார்ஷியோவுக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனினும், குறித்த தீர்ப்பை எதிர்த்து ஸ்பெயின் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# காதலியை கொலை செய்த ஒஸ்காருக்கு மீண்டும் சிறை



தென்னாபிரிக்காவின் ஒலிம்பிக் விளையாட்டு வீரர் ஒஸ்கார் பிஸ்டோரியஸ் தன் காதலியை கொலை செய்த குற்றத்திற்காக நீதிமன்றம் மீண்டும் 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே உயர் நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு காதலர் தினத்தன்று தன் காதலியான ரீவா ஸ்டீன்கேம்பை கொலை செய்த குற்றத்திற்கே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவர் காதலியை கொலை செய்த குற்றத்திற்காக 15 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# டி வில்லியர்ஸ் அதிரடி: ட்ரைடன்ஸ் வெற்றி



மேற்கிந்திய தீவுகளில் இடம்பெற்றுவரும் கரிபியன் பிரிமியர் லீக் தொடரின் நேற்றைய போட்ரியோட்ஸ் அணிக்கெதிரான போட்டியில் ட்ரைடன்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய போட்ரியோட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

போட்ரியோட்ஸ் அணி சார்பில் லிவிஸ் அதிகபட்சமாக 50 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் பார்னெல் மற்றும் வைஸ் தனா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

163 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய ட்ரைடன்ஸ் 18.4 ஓவர்களில 3 விக்கட்டுகளை இழந்து 166 ஓட்டங்களை பெற்று வெற்றிப்பெற்றது.

இதில் வில்லியர்ஸ் 33 பந்துகளில் 63 ஓட்டங்களையும், மலிக் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திசார பெரேரா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக டி வில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# யாழ்.போதனாவில் மரதன் ஓட்டம்




சுகாதார வாரத்தை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு மரதன் ஓட்டப்போட்டி நேற்றைய தினம் நடைபெற்றது.

சுகாதார வாரத்தை முன்னிட்டு கடந்த ஒரு வாரகாலமாக யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்கள் அனைவருக்கும் விளையாட்டுப்போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன.

இதன் இறுதி நாளான நேற்றைய தினம் நடைபெற்ற மரதன்ஓட்டப்போட்டி யாழ்பண்ணை கடற்கரையில் ஆரம்பித்து யாழ் போதனா வைத்தியசாலையில் முடிவுற்றது.

இந்த நிகழ்வில் யாழ் போதனா வைத்திய சாலை மருத்துவர்கள் தாதியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர். (செ-9)

# மாணவனின் புத்தகப்பையில் மதுபானப் போத்தல் சீரழியும் இளம் சமுதாயம்

கண்டி மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனின் புத்தகப்பையில் இருந்து மதுபான போத்தல் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த மாணவனின் புத்தகப் பையில் இருந்து இரண்டு போத்தல்கள் கீழே விழுந்துள்ளன, பின்னர் உடனேயே பையை மூடுவதற்காக சிறுவன் முயற்சித்துள்ளான்.

இதை அவதானித்த சிறுவனின் ஆசிரியரான பிக்கு ஒருவர், உனது பையில் இரண்டு போத்தல்களா? ஏன் நீ இரண்டு போத்தல் நீரை பாடசாலைக்கு எடுத்து வந்தாய்? என கேள்வி எழுப்பியுள்ளார்.

பின்னர் போத்தல்களை நன்கு அவதானித்த பிக்கு, ஒரு போத்தலில் நீர் இருந்ததையும் மற்றைய போத்தலில் மதுபானம் இருந்ததையும் அவதானித்துள்ளார்.

குறித்த மாணவனிடம் பிக்கு விசாரணைகள் மேற்கொண்டுள்ளார்,

இதன்போது பதிலளித்த சிறுவன், தனது அப்பா நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட மதுபானத்தின் அரைவாசியை தான் வீட்டிலிருந்து பாடசாலைக்கு கொண்டு வந்ததாக மாணவன் குறிப்பிட்டுள்ளான்.

மேலும், பாடசாலை அதிபர் மாணவனின் பெற்றோரை அழைத்து கடுமையாக கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஒரு சாதாரண விடயத்தில் கூட ஒருமித்த முடிவெடுக்கவில்லை

## தமிழ்க்கூட்டமைப்பு தலைவர்களின் இயலாமை குறித்து ஆனந்தசங்கரி

ஒரு சாதாரண விடயத்தில் கூட ஒருமித்த முடிவு எடுக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர்களால் முடியவில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு கருத்துக் கணிப்பு நடத்த முடிவு செய்திருப்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கையாலாகாததனத்தையே எடுத்துக் காட்டுகின்றது. முக்கிய தலைவர்கள் அதுவும் எதிர்க்கட்சித் தலைவர், வடமாகாண முதலமைச்சர் என இரண்டு தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இரு வேறுபட்ட முடிவுகளை மேற்கொள்வதென்பது வேடிக்கையாகத் தோன்றுகின்றது. ஒரு மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதென்ற ஒரு சாதாரண விடயத்தில் கூட ஒருமித்த முடிவு எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களால் முடியவில்லை என்ற போது இவர்கள் எவ்வாறு ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கு ஒரு நல்ல தீர்வை பெற்றுத் தருவார்கள்.

அரசாங்கம்தான் தமிழ் மக்கள் விடயத்தில் காலம் தாழ்த்துகின்றது என்று பார்த்தால் அரசாங்கம் தரும் நிதியைப் பெற்று வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் காலதாமதத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்துகின்றது. இவ்வாறு தான் கடந்த வருடம் வடமாகாண சபைக்கு செலவு செய்ய அரசாங்கம் கொடுத்த நிதியையைக் கூட காலதாமதப்படுத்தி திருப்பி அனுப்பி சாதனை படைத்தார்கள். இவ்வாறு காலம் தாழ்த்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு பின்பு மற்றவர்கள் மீது பழியைப் போட்டு மிக இலகுவாக மக்களை ஏமாற்றி அறிக்கையும் விடுவார்கள்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு கருத்துக் கணிப்பு என்று கூறி காலதாமதப்படுத்தாமல் எமது மக்களுக்கு உடனடியாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். கட்சியின் உயர் மட்டத்தலைவர்கள் ஒன்று கூடியும் ஒரு முடிவு எடுக்கமுடியாமல் வெளியில் வந்து தனிப்பட்ட முறையில் தத்தமது கருத்துக்களைக் கூறி மக்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றார்கள். அது அவர்களின் கூட்டுப் பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. தமிழ் மக்களின் தலை விதியை தாங்கள் தான் தீர்மானிப்போம் என்று கூறிக் கொள்ளும் இவர்கள் கையில் சிக்கித் தவிக்கும் எமது மக்களின் சாபக்கேட்டை என்னவென்று சொல்வது என்வும் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜி
076 725 6024
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.
(5039)





# இராசி பலன்

07.07.2016
(ஆனி 23, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00மணிக்கு
திருதியை பிற்பகல் 3.18 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 8.09 மணிவரை
சுபநேரம் 7.28-8.58 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | புத சந் |
| | பூராடம், உத்தராடம் இரவு 8.11 மணிக்கு சிங்-சந் | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்** தொட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**இடபம்** தொழில் போட்டிகள் மாறும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கலாம்.

**கும்பம்** கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** பயணங்களின் மூலம் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள், பிள்ளைகளால் சுப விரயங்கள் ஏற்படலாம், உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்து பேசாமல் செல்வீர்கள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** விருந்தினர்களின் வருகையால் கூடுதல் செலவுகளை எதிர்கொள்ளலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை, காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம்.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





புனித ரமழான் நோன்புப் பெருநாள் நாடெங்கும் முஸ்லிம் பெருமக்களால் கொண்டாடப்பட்ட நிலையில், யாழில் ஒஸ்மானியாக் கல்லூரி அருகே உள்ள ஜின்னா மைதானத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் சிறப்பு தொழுகை ஒன்று இடம்பெற்றது. இதன்போது பொம்மைவெளி அபூபக்கர் பிரதான இமாம் எம்.பரூஸ் தொழுகையை மேற்கொண்டார். இதன்போது பெருந்திரளான மக்கள் அதில் பங்கேற்றனர். (படங்கள்:- உ.சாளின்)

# மாணிக்கவாசகர் குருபூசை நாளை

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தில் மாணிக்கவாசகர் குரு பூசை நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இப் பாடசாலையின் சிறுவர் பாராளுமன்றத்தின் இந்து கலாசார அமைச்சர் தரங்கிணி சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி.புனிதகுமாரி ஈழ நேசனும் கலந்து கொள்ள வுள்ளதுடன் கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும், வட மாகாண கல்வி அமைச்சின் உத்தியோகத்தர் சி.நிசாக ரனும், விசேட விருந்தினராக விழாவின் அனுசரணையாளரான இராமலிங்கம் செகராஜசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணிக்கவாசகர் குரு பூசை குறித்த சிறப்பு சொற்பொழிவை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் நி.பாவுதரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5-254)

# முத்திரையிடப்படல்

வலி.கிழக்கு பிரதேச சபையில் நிறுவைகள் அளவுகள் நிறுக்கும் கருவிகளுக்கு பின் வரும் திகதிகளில் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் முத்திரையிடப்படவுள்ளது. சகல வர்த்தக நிலையங்கள், பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் நிறுத்தற்கருவிகளுக்கு இத் திகதிகளில் முத்திரையிடுமாறு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் யு.ஜெலீபன் கேட்டுக்கொண்டுள்ளார்.

7 ஆம் திகதி காலை 9 மணி முதல் வலி.கிழக்கு பிரதேச சபை, 8ஆம் திகதி மாலை 3 மணி வரை உப அலுவலகம் அச்சுவேலி, 14 ஆம் திகதி காலை 9மணி முதல் வலி கிழக்கு பிரதேச சபை, 15ஆம் திகதி மாலை 3மணி வரை உப அலுவலகம் கோப்பாய், 25 ஆம் திகதி காலை 9மணி முதல் வலி.கிழக்கு பிரதேச சபை, 26ஆம் திகதிமாலை 3மணி வரை உப அலுவலகம் உரும்பிராய் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கி, ஐ.எவ்.ஐ. தொண்டர் குழு என்பன இணைந்து நடத்தும இரத்ததானமுகாம் ஒன்று நாளை மறுதினம் சனிக் கிழமை நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைந் துள்ள நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 076 836 3684 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ-5-9)

# வானவில் நாட்டிய நாடகம்

நித்திய நிபுன் வெரோனிக்கா தசநாயக்கவின் நாட்டிய நிகழ்வினூடாக சமாதானத்தையும் சுபீட்சத்தையும் வெல்லும் பாதை அமைப்போம் எனும் தொனிப்பொருளினாலான வானவில் நாட்டிய நாடகம் இல, 286, பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ

# வருடாந்த மஹோற்சவம்

வடமராட்சி உபய கதிர்காம முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் 20 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும் 21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-5-19)

# மின்பொறிக்குள் சம்பூர் ஆவணப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் சம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையம் தொடர்பாக மின்பொறிக்குள் சம்பூர் என்ற பெயரில் ஜெராவின் இயக்கத்தில் வெளியிடப்பட்ட ஆவணப் படம் திரையிடலும் கலந்துரையாடலும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் இவ் ஆவணப்படம் தொடர்பான அறிமுக உரையை பசுமைத் தருமலை அமைப்பின் செயற பாட்டாளர் தி.கோபகன் ஆற்றுவதுடன், ஆவணப்படம் திரையிடலும் அதனைத் தொடர்ந்து பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், எஸ்.சிவாஜினி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் ஆகியோரின் கருத்துரைகளும், தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளதுடன் நிறைவாக இவ் ஆவணப்பட இயக்குநர் ஜெராவின் ஏற்புரையும் இடம்பெறவுள்ளது. சூழலியலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக் கொள்கின்றது. (இ-5)




# அமைச்சர் ராஜிதவை கௌரவிக்கும் விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ஜனரஜ சௌக்கிய சேவை சங்கத்தின் அனுசரணையில் சுகாதார அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் ராஜித சேனாரட்னவை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப 1.45 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெறும்.

இதில் யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்க அமைப்பாளர் இ.வசந்தராஜன் வரவேற்புரையினையும் நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஸ்ரீநாகவிகாரை விகாராதிபதி வண.கலைமாணி மீகஹ ஜந்துரே சிறிவிமல தேர மற்றும் அருட் தந்தை ச.பி.றஞ்சன்குமார் ஆகியோர் ஆசியுரையினையும் ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச்சங்க யாழ். கிளைத் தலைவர் கு.ரமேஷ் தலைமையுரையினையும் வழங்கவுள்ளனர்.

இதில் பிரதம விருந்தினர்களாக சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் விசேட வைத்திய நிபுணர் திருமதி சுஜாதா சேனாரட்ன ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் பாலித மகிபாலா மற்றும் கொழும்பு ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச்சங்க தலைவர் டபிள்யூ ஏ.டி.விமலரட்ண ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி யூட், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இ.தேவநேசன், யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஸ்ரீபவானந்தராசா, யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ ஏ.டி.வீரசிங்க, 512 இராணு கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.ஜெ.கொடிதுவக்கு, குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி எச்.ஆர். முதித ரூப பண்டார மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் வி.சண்முகராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# தென்னை பயிர்ச் செய்கைத் திட்டத்தினை வெளிப்படுத்தும் அங்குரார்ப்பண வைபவம்

வடக்கு மாகாணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை திட்டத்தினை வெளிப்படுத்தும் முகமாக வடக்கு மாகாணத்தின் தென்னைப் பயிர்ச் செய்கை திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் சிறுவர் விவகார இரா ஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகி யோர் பங்களிப்புடன் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தலைமையில் நாளை மறுதினம் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடை பெறும்.

அதனைத் தொடர்ந்து மு.ப 11.30 மணியளவில் பளை மாதிரித் தென்னந் தோட்டத்தில் வடக்கு மாகாணத்தின் வள மத்திய நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வும் பின்னர் பி.ப. 3 மணியளவில் 157/2, குடியிருப்பு வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் அமைந்துள்ள வவுனியா புதிய பிராந்திய காரியாலயத்தினை திறந்து வைத்தல் நிகழ்வும் நடைபெறும் என தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அறிவித்துள்ளார். (இ

# இசைப் பேரரங்கு இன்று




இதில் பாட்டு- அபிஷேக் ரகுராம், வயலின் - விட்டல் ராமமூர்த்தி, மிருதங்கம் - நெய்வேலி ஆர். நாராயணன், கஞ்சிரா- கே.வி. கோபாலகிருஷ்ணனும் வழங்கவுள்ளனர். பி.எஸ். பாலமுருகன், ப.குமரன் குழுவினரின் நாதஸ்வர அரங் கும் இடம்பெறும். இதில் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவல்லறி தொழிலதிபர் ஏ.பி. ஜெயராசா தலைமையுரையை நிகழ்த்தவுள்ளார். (இ-7)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீ ராம நாம கானாமிர்தம் இசைவேள்வி - 2016 இசைப்பேரரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

# தடகள விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய தடகள விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யூ.டி.ஆர். குமரசிறி, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் மற்றும் கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை உத்தியோகத்தர் திருமதி சாரதா லீலா சிவபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-7)

# பொதுக்கூட்டம்

நாரந்தனை சைவ மகா சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் சபைத் தலைவர் வே.துரைராசா தலைமையில் நடைபெறும். சபை அங்கத்தவர்கள், அடியார்கள் யாவரையும் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு நாரந்தனை சைவ மகா சபையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

# விசேட கல்வி அலகு அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரியின் விசேட கல்வி அலகும் விளையாட்டு முற்ற அங்குரார்ப்பணநிகழ்வும்நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.45மணியளவில்நடைபெறும்.

அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.இளங்கோகலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி நோபேட் உதயகுமார், வலி.மேற்கு பிரதேச செயலக சமூக சேவை நிர்வாக அதிகாரி வி.அருந்தவராசா, வேள்ட் விசன்(World vision)திட்ட இணைப்பாளர் அலெக்ஸ் றொச் வேள்ட் விசன் சங்கானை கிளை முகாமையாளர்ஜி.அனு ராஜ், வேள்ட் விசன் திட்ட வளவாளர்விவெஞ்சஸ்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவவிருந்தினர்களாக வட்டு இந்து வாலிபர் சங்கத்தலைவர்கேடசிரதன்,வட்டுக்கோட்டை சமூக சேவையாளர் ந.வல்லிபுரம்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-19

### (06.07.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) B | 11) 3 | 21) 1 | 31) 2 |
| 02) C | 12) 1 | 22) 1 | 32) 2 |
| 03) 3 | 13) 2 | 23) 3 | 33) 2 |
| 04) 1 | 14) 3 | 24) 2 | 34) 2 |
| 05) 1 | 15) 1 | 25) 3 | 35) 3 |
| 06) 3 | 16) 4 | 26) 3 | 36) 4 |
| 07) 3 | 17) 3 | 27) 2 | 37) 1 |
| 08) 3 | 18) 3 | 28) 3 | 38) 2 |
| 09) 12,2 | 19) 3 | 29) 3 | 39) 3 |
| 10) 3 | 20) 3 | 30) 1 | 40) 3 |

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை. ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 04
ஆதன இல:- 175 (புதிய பதிவு)
வீதி:- மானிப்பாய் வீதி
கிராம சேவையாளர் பிரிவு :- J/132

வட்டாரம் 04, மானிப்பாய் வீதி, ஆதன இல.175 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம்,வலிகாமம் மேற்கு பகுதி,மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "நளவன் காடும் நளவன் சாட்டியும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 1.74 கொண்ட இவ்வாதனம் 04 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னையா சக்திவேல் கைம்பெண் கனகபூஷனி, சின்னையா சக்திவேல் மகள் ஜெயசாந்தினி ஆகிய இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த சந்தியோகு டிஸ்ரன் பெண் ஹெலன் கலைவாணி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.J. S.A.மதுரநாயகம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 2575 ஆம் இலக்க 17.04. 2016 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.T. தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 8614 ஆம் இலக்க 2016.03.20 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "நளவன் காடும் நளவன் சாட்டியும்" நிலப்பரப்பு 01 குளி 1.74 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவதுஇருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சந்தியோகு டிஸ்ரன் பெண் ஹெலன் கலைவாணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன். (5138)

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## கும்பாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு ஈழத்து இராமேஸ்வரம் எனப் போற்றப் படும் பாணாவிடை சிவன் பர்வதவர்த் தனி அம்பாள் சமேத ஸ்ரீமத் இராமலிங்க சுவாமி திருக்கோவிலின் பாலஸ் தாபன கும்பாபிஷேகம் இன்று காலை 7.30 மணி தொடக்கம் காலை 8.46 மணி வரை இடம் பெறும். (இ-7)

திருவருள் மிகு புராதன குருநாதர் கோயில்
தென்மராட்சி, வரணி, மாசேரி.
மகா பொங்கல் திருவிழா விஞ்ஞாபனம் - 2016

குருநாதர் மெய்யடியார்களே!

❖07.07.2016 (துர்முகி, ஆனி 23) வியாழக்கிழமை இன்று முற்பகல் 7 மணி பண்டமரவடிப் பூஜை, 10 மணிக்கு கொடிகாமம் சந்தையிலிருந்து பண்டமெடுத்தல் மாலை 6 மணி பண்டமரவடியை அடைதல், பூஜை, அன்னதானம்.

❖08.07.2016 (ஆனி 24) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கோயிலில் விசேட அபிடேகம், பூஜைகள், மாலை 6 மணிக்கு குருநாதர் கலை கொள்ளல், கோவிலுக்கு பண்டமெடுத்தல்.

❖09.07.2016 (ஆனி 25) சனிக்கிழமை அதிகாலை கும்பம் வைத்தல், மடை பரவுதல், 4 மணிக்கு வளர்ந்து நேருதல், படையல்கள், ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்ப சுவாமி சமாதிக்கு அபிடேகம் பூசை, கத்திமடை, மூலஸ்தான பரிவார பூசைகள், குருநாதர் கலை கொள்ளல், வீதியுலா, பரிகலம் வழிவிடல், ஆஞ்சநேய சண்டேஸ்வர பூசை, விபூதி பிரசாதம் , அன்னதானம் வழங்கல் யாவும் பாரம்பரிய மரபு முறைப்படி நடைபெறும்.

அனைவரும் வருக! குருநாதர் திருவருள் பெறுக.

(5142)

சிவத்திரு நா. முருகேசபிள்ளை,
பரம்பரை சிவகலைப் பூசகர்.

சைவப்புலவர், திருவருள் வாசகர் சிவத்திரு
சி.கா.கமலநாதன் ஐயா,
பரம்பரை தர்மகர்த்தா, பிரதம பூசகர்.

## கதிர்காம கந்தனை தரிசிக்கும்

# பக்த அடியார்களுக்கான விசேட பேருந்து சேவை

கதிர்காம கந்தன் ஆலய கொடியேற்ற திருவிழாவின் தேர் திருவிழாவிற்கு செல்லும் பக்த அடியார்களுக்காக 18,19, 20 ஆகிய மூன்று தினங்களும்யாழ்மத்தியபேருந்து நிலையத்தில் இருந்து கதிர்காமம் நோக்கி பயணிகளின் வருகைக்கு ஏற்ப விசேட பேருந்து சேவைகள்செயலாற்றப்படஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கிராமப் புறங்களில் இருந்து கதிர்காமம் செல்லும் அடியவர்கள் தாம் ஒரு குழுவாக ஒன்றிணைந்து இ.போ.ச. சாலைகளில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களது இடத்திற்கு எமது பேருந்தினை அனுப்பி கதிர்காமம் சென்று மீண்டும் அவர்களது உரிய இடத்தில் சேர்க்கப்படுவார்கள்.

மேலதிகவிபரங்களை அறிந்து கொள்வதற்கு பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

யாழ்சாலை:021 222 2207, 077 105 8150, பருத்தித்துறை சாலை: 021 226 32 66,077 105 8130, காரைநகர் சாலை: 021 320 75 93, 077 105 8120, கிளிநொச்சி சாலை: 021 228 3737, 077 105 8170 மன்னார் சாலை: 023 222 22 81,077 105 8140

வவுனியா சாலை:024 222 3449, 077 105 8160 என இ.போ.ச. யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபால செல்வம் அறிவித்துள்ளார். (இ-7)

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை. ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 04
ஆதன இல:- 173 (புதிய பதிவு)
வீதி:- மானிப்பாய் வீதி
கிராம சேவையாளர் பிரிவு :- J/132

வட்டாரம் 04, மானிப்பாய் வீதி, ஆதன இல.173 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம்,யாழ்ப்பாணம்,வலிகாமம் மேற்கு பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "நளவன் காடும் நளவன் சாட்டியும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 1.74 கொண்ட இவ்வாதனம் 04 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னையா சக்திவேல் கைம்பெண் கனகபூஷனி, சின்னையா சக்திவேல் மகள் ஜெயசாந்தினி ஆகிய இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை தேவராசா செல்வ நாயகம் கைம்பெண் இராஜேஸ்வரி, என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.J.S.A. மதுரநாயகம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 2574 ஆம் இலக்க 17.04.2016 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.T. தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 8613 ஆம் இலக்க 2016.03.20 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "நளவன் காடும் நளவன் சாட்டியும்" நிலப்பரப்பு 01 குளி 1.74 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்தியாம்பிள்ளை தேவராசா செல்வநாயகம் கைம்பெண் இராஜேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன். (5139)

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:26<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில் : BSc/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/6043 | பிறப்பு: 1973RC<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/6094 |
| பிறப்பு: 1990NON RC<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A சொந்ததொழில<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6044 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 4'2"<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6099 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:லண்டன் PR<br>தொ.இ: B/6045 | பிறப்பு: 1987RC<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 63 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/2472 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:Chartered/டுபாய்<br>தொ.இ: B/6046 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/2422 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## மலையாளபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் நிறுத்தம்; மக்கள் அவதி



(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட மலையாளபுரம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் ஒரு மாதத்திற்குள் நிறுத்தப்பட்டமையால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த மே மாதம் வடக்கு மாகாண முதலமைச்சரால் உத்தியோக பூர்வமாக மலையாளபுரம் மக்களுக்கான குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் குறித்த நீர் விநியோகம் ஆரம்பித்து சுமார் பத்து நாட்கள் மட்டுமே நடைபெற்றுள்ளது. அதன் பின்னர் இன்று வரை நீர் விநியோகம் இடம்பெறவில்லை. இதனால் இதனை நம்பியிருந்த பல குடும்பங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே கிராமத்தில் உள்ள கிணறு ஒன்றிற்கு அருகில் நீரத் தாங்கி அமைக்கப்பட்டு 650 குடும்பங்கள் வாழ்கின்ற மலையாளபுரத்தில் முப்பது குடும்பங்கள் மட்டும் பயன்பெறுகின்ற வகையில் மேற்குறித்த குடிநீர்த் திட்டம் இருபது இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் அதனால் எந்த நன்மையும் தங்களுக்கு ஏற்படவில்லை.குறித்த முப்பது குடும்பங்களும் கூட குறித்த திட்டத்தின் நன்மையை பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டது என கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக மலையாளபுரம் கிராமத்தில் மக்கள் குடிநீருக்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என நாம் கிராமம் சார்பில் அதிகாரிகளிடம் கோருகின்ற போது அவர்கள் சொல்கின்றார்கள் மலையாளபுரத்திற்கான குடிநீர் விநியோகத் திட்டம் முதலமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுதானே. ஏன் திரும்பவும் கேட்கின்றீர்கள் என கூறுகின்றனர்.

எனவே நிலைமையினை கருத்தில் கொண்டு சீரான குடிநீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு உரிய தரப்புக்களை கோருவதாக மலையாளபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதனிடம் வினவிய போது.

மலையாளபுரம் கிராமத்தில் குறித்த நீர் விநியோகத் திட்டம் சீராக தற்போதும் இடம்பெறுகிறது எனத் தெரிவித்தார். ஆனால் அங்கு நீர்விநியோகம் தடைப்பட்டிருக்கிறது. நீர்த்தாங்கிவரண்டுபோயுள்ளது. இதனை நாம் நேரில் சென்று அவதானித்தோம் எனக் கூறிய போது அது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது. குறித்த நீர் விநியோகத்தை மேற்பார்வை செய்ய கிராமத்தில் ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எனது கவனத்திற்கு இதனை கொண்டுவரவில்லை.

எனவே இன்றே ஒரு உத்தியோகத்தரை அனுப்பி நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் மேலும் தெரிவித்தார். (2-312)




## வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்று; முல்லைத்தீவில் கையெழுத்துப் போராட்டம்




வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் மாபெரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் முல்லைத் தீவு நகரில் முன்னெடுக்கப்பட்டது.

சம உரிமை இயக்கம் என்ற அமைப்பு இராணுவம் கையகப் படுத்தியுள்ள தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம்ஒப்படைத்து வெளியேற வேண்டுமெனவும் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு கோரியும் 15 ஆயிரம் கையெழுத்துக்களை பெறும் நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் காலை முதல் முல்லைத்தீவு நகரில் கையெழுத்துக்களை சேகரித்தனர். இதில் மக்கள் தமது கையெழுத்துக்களை ஆர்வத்துடன் பதிவுசெய்தனர். (2-281)

## பாலன்குளம் புனரமைப்பு

## 150ஏக்கருக்கு மேலதிகமான வயல் காணிகளுக்கு நீர் பாய்ச்ச முடியும்

(பனிக்கன்குளம்)

துணுக்காய் ஆரோக்கியபுரம் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப பாலன்குளம் புனரமைக்கப்படுவது முக்கியமானதொன்றாகும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தின் எல்லைக் கிராமமான ஆரோக்கியபுரத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்குரிய நிலங்கள் இன்னும் சீர்செய்யப்படவில்லை. பாலன்குளத்தை நம்பியே அவர்களின் வாழ்வாதாரம் உள்ளது. மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் குளத்தின் புனரமைப்போ, அந்த மக்களின் வாழ்வாதாரக் காணிகளோ இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

கடந்தாண்டு ஆரோக்கியபுரம் மக்களின் குறைகேள் சந்திப்பின் போது அங்குள்ள 120 குடும்பங்களும்தங்களுடைய வாழ்க்கையை இந்தக்குளத்தின் மூலமாகவே விவசாய நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாகவும் இதனை விடுவித்துத் தரும்படியும் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

அன்றிலிருந்து மாகாண விவசாய அமைச்சிடமும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் தொடர்ச்சியாக இக்குளத்தின் விடுவிப்பு தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது.

இதன் பலனாக இக்குளம் தொடர்பான முன்னேற்றமான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுத்து வருகின்றார்கள். இக்குளத்தின் புனரமைப்புக்காக இவ்வாண்டின் ஒதுக்கீடாக ஆறு மில்லியன் ரூபா முக்கிய வேலைகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. மேலும் இக்குளத்தை முழுமையான புனரமைப்பு செய்வதற்கு 18 மில்லியன் அண்ணளவாக தேவை என நீர்ப்பாசன பொறியியலாளர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது.

இக்குளமானது துணுக்காய் ஆரோக்கியபுரம் மக்களுடைய வாழ்வாதாரத்திற்குரியதாக இருந்தாலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் கமநல சேவைத் திணைக்களத்தின் பராமரிப்பில் இருந்து வருகின்றது. 8 அடி உயரத்திற்கு நீரைக்கொள்ளக் கூடியதும் 150 ஏக்கருக்கு மேலதிகமாக காணிகளுக்கு நீரை வழங்கக்கூடியதுமான இக்குளத்தினூடாக பெரும்போகம், சிறுபோகம் என தொடர்ச்சியாக செய்கை பண்ணக்கூடிய வளம் நிறைந்த குளமாக காணப்படுகிறது.

இக்கிராமத்திலுள்ள மக்களின் முக்கிய தேவையாகவுள்ள இக்குளத்தை புனரமைப்பு செய்து இந்த மக்களுக்கு கூடிய விரைவில் வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (2-281)




கிளிநொச்சி இலக்கிய நண்பர்களின் ஏற்பாட்டில் வேதநாயகம் தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 3 நூலின் அறிமுக விழா கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 .07 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற போது... (படம்:சிவநகர் செய்தியாளர்)

## இராணுவ வாகனம் மோதி மூவர் வைத்தியசாலையில்



(பனிக்கன்குளம்)

இராணுவ பிக்கப் ரக வாகனம் மோதிய விபத்தில் மூன்று பேர் படுகாயம் அடைந்தனர்.

இதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றன.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.20 மணியளவில் புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் கைவேலிப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் குமாரசுவாமிபுரம் விசுவமடுவைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது-23), கைவேலியைச் சேர்ந்தவர்களான மோகன் (வயது-21) மற்றும் வெற்றிவேல் பெருமாள் (வயது-35) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பில் வேலை முடித்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர்களை பின்னால் வேகமாக வந்த இராணுவ பிக்கப் ரக வாகனமொன்று மோதித் தள்ளி 50 மீற்றர் தூரம் வரை இழுத்துச்சென்று விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு - ஒதியமலை பிரதான வீதி பற்றைகள் சூழ்ந்து மூடியமையால் பயணிக்க முடியவில்லை

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு–ஒதியமலை செல்லும் பிரதான வீதி பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால்பயணிப்போர்பல்வேறுசிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். குறித்த பிரதான வீதி வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச சபைக்குச் சொந்தமானது.

பொதுமக்கள் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதிலும் 5 வருடங்கள் கடந்த நிலையில் பல தடவைகள் இதனைத் துப்புரவு செய்து தரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரைக்கும் எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கற்குளம் சந்தியிலிருந்து பட்டிக் குடியிருப்புக்குச் செல்லும் பிரதான வீதியும் இரண்டுபக்கமும் பற்றைகள் மூடிக் காணப்படுவதனால் வீதியூடாகச் செல்லும் பேருந்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் மக்களுக்கான சேவையினை மேற்கொண்டு வருகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு கற்குளம் சந்தியிலிருந்து ஒதிய மலை வரை இவ் வீதியினை பிரதேச சபையின் இயந்திர வலுக்களைக் கொண்டு இதனை துப்புரவு செய்து மக்களின் பாவனைக்கு பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக செய்து தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

### பாடசாலையை விட்டு இடைவிலகிய

# மாணவர்கள் நீதிமன்றின் ஊடாக எச்சரிக்கப்பட்டு மீண்டும் பாடசாலை கல்வியைத் தொடர ஏற்பாடு

## எதிர்வரும் நாட்களில் ஏனைய கிராமங்களிலும் இந்த நடவடிக்கை தொடரும்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகள் இணைந்து நேற்று முன்தினம் கிளிநொச்சியிலுள்ள சாந்தபுரம் கிராமத்தில் பாடசாலைக்கு செல்லாமல் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் கல்வி கற்க ஏற்பாடு செய்யும் நோக்குடன் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் பாடசாலைக்கு செல்லாத 15 மாணவர்கள் மாவட்ட நீதிமன்றிற்கு அழைத்து வரபட்டனர். குறித்த மாணவர்களின் பெற்றோரும் மன்றிற்கு அழைக்கப்பட்டனர். மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமை தொடர்பில் கேட்டறிந்த நீதவான், குறித்த மாணவர்களில் 6 பேரை கடும் எச்சரிக்கை செய்து பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தார். குறித்த மாணவர்கள் பாடசாலை செல்வதை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானிக்குமாறும் சிறுவர் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகளிற்கு உத்தரவிட்டார்.

ஏனைய மாணவர்களில் 7 பேரை சிறுவர் இல்லங்களில் தங்கி நின்று கல்வியை தொடருமாறும், மது அருந்துபவர்களுடன் சேர்ந்து திரிந்த 2 சிறுவர்களை சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் தங்க வைப்பதற்கும் உத்தரவிடப்பட்டதுடன், குறித்த சிறுவர்கள் தொடர்பில் கண்காணிக்குமாறும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளிற்கு உத்தரவிட்டார். இதேபோன்ற நடவடிக்கை தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கபடும் என சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (2-15)

# 100வழக்குகள் நீதிமன்றில் பதிவு ரூ.3,89,000 அபராதம் விதிப்பு

## கிளி. மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை


சட்டத்துக்கு முரணான விதத்தில் செயற்பட்டமைக்காக கிளிநொச்சி மாவட்டததிலுள்ள வியாபார நிலையங்களுக்கு எதிராக கடந்த 6மோதங்களில் 100 வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டு 3 இலட்சத்து 89 ஆயிரத்து 500ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளால், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வியாபார நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையின் போது காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, இலத்திரனியல் சாதனங்களுக்கு உத்தரவாதகாலம் வழங்கப்படாமை, விற்பனை முடிவுத்திகதி காட்சிப்படுத்தாமை, முத்திரையிடப்படாத தராசு பயன்படுத்தாமை, இறக்குமதியாளர்களின் தரவுகள் இன்றி பொருட்கள் விற்பனை செய்தமை உள்ளிட்ட 111 குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதில் 100 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 6 மாதங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினரால் பொதுமக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் 18 விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன எனஅவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-9)

## 4 பிரதான கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சியில் கையெழுத்து போராட்டம்



(பரந்தன்)

சம உரிமை இயக்கம் நான்கு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சியில் கனகபுரம் வீதிடிப்போசந்தி ,பரந்தன் போன்ற பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் கையெழுத்து பெறும் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள். இதில் பல மக்கள் கலந்து கொண்டு கையெழுத்திட்டு தமது ஆதரவை வழங்கி இருந்தனர்.

இப்போதாவது யுத்தப் பாதிப்புகளுக்கு இழப்பீடு கொடு, இராணுவத்தை முகாமகளுக்குள் மட்டுப்படுத்து, சகல காணாமலாக்கப்பட்டவர்கள் சம்பந்தமான தகவல்களை உடன் வெளிப்படுதது, சகல அரசியல் சிறைகைதிகளையும் உடன் விடுதலைசெய் போன்ற கோரிக்கைகளுடன் இக் கையெழுத்து பெறும் போராட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

புதிய ஜனாதிபதி பதவியேற்று ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்டன. இதுவரைக்கும் எதுவும் நடக்கவில்லை எனத் தெரிவித்துள்ள சம உரிமை இயக்கம் இன்னும் ஏன் பார்த்திருக்க வேண்டும். மக்கள் தங்களது நியாயமான உரிமைகளை வென்றெடுக்க முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

உரிமைகளை வென்றெடுக்க போராட்டமின்றிவேறு வழி கிடையாது. (2-312)

# பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கு ஓமந்தை சிறந்த இடம்

## மக்களின் விருப்பத்தை நாமும் ஆதரிக்கின்றோம் என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலேயே அமைய வேண்டும். அதுவே பொருத்தமான இடமாகவும் விளங்குகின்றது. எமது மக்களின் விருப்பமாகவும் அது இருப்பதுடன் அதனாலேயே மக்களுக்கு பல்வேறு நன்மைகளும் ஏற்படும். இதனை விடுத்து சிலர் எங்கள் மக்கள் மீது அக்கறை கொள்வது போன்று நடிப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது என புளொட் அமைப்பின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சிததார்த்தன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மத்திய நிலையம் அமைவது தொடர்பில் ஏற்பட்டிருக்கின்ற இழுபறி நிலைமை தொடர்பாக வினவிய போதே சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது. அது ஓமந்தையிலேயே அமைய வேண்டுமென்பதே எமது விருப்பமாகவும் எமது மக்களுக்கும் நல்லதாகவும் அமையும்.

அதுவே எங்களில் பலரதும் நிலைப்பாடாகவும் இருக்கின்ற நிலையில் இதனை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் சிலர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள கின்றனர்.

ஆனாலும் இதனை மாற்றுவதற்கு இடமளிக்காது ஓமந்தையிலேயே அமைக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளையே நாம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு நாங்கள் ஓமந்தையில் அமைக்கப்பட வேண்டுமெனக் கூறுகின்ற போது இதனை அங்கிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்ல முற்படுகின்ற தரப்பினர்கள் ஓமந்தையில் அமையாவிட்டால் இத்திட்டம் கைவிடப்படுமென்றும் மிரட்டி அடிபணிய வைக்கப்பார்க்கின்றனர்.

பொருளாதார மத்திய நிலையமானது ஓமந்தையில் அமைவதே நல்லது, சிறந்தது என்று எமது மக்கள் விரும்புகின்ற அல்லது கோருகின்ற போது அந்த மக்கள் பிரதிநிதிகளான நாமும் அவர்களது விருப்பத்திற்கமைய அதனையே மேற்கொள்வோம்.

இந்த நிலையம் எங்கு அமைக்கப்பட வேண்டுமென்பதனை முதலமைச்சர் தெளிவாகக் கூறிவிட்டார்.

ஓமந்தையில் அமைய வேண்டுமென நான் கூறுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மக்களும் முதலமைச்சரும் தீர்மானித்திருக்கின்றனர். இதைவிட தாண்டிக்குளமானது சிறிய பிரதேசம். வவுனியா, மாநகர சபையாக வரவுள்ள நிலையில் அந்த எல்லைக்குள் பொருளாதார மத்திய நிலையம் வந்தால் அது பெரிய இடைஞ்சலாக இருக்கும். இவ்வாறு பலவற்றையும் குறிப்பிட்டுக் கொண்டே செல்லலாம்.

ஆகவே இனியும் காலம் தாழ்த்தாது நாம் கூறியது போன்று எமது மக்கள் விரும்புகின்றதன் அடிப்படையில் நல்லதோர் முடிவை எடுக்க வேண்டும். அது ஓமந்தையிலாக அமைய வேண்டும்.

இதே வேளை எங்களுக்கு கிடைக்கின்ற இவ்வாறான சந்தர்ப்பங்களை நாங்கள் தவற விடக்கூடாது. குறிப்பாக, இரணைமடுத் திட்டம் எங்களிடமிருந்து கைநழுவிப் போயிருக்கின்றது. ஆகையால் அதே போன்று இதனையும் விட முடியாது.

தாங்கள் கூறுகின்ற இடத்தில் அமைக்காவிட்டால் திட்டத்தை மாற்றுவோம் என்று கூறுகின்ற அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய முடியாது. எமது மக்களின் விருப்பமும் எமது மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் திட்டங்களை சரியான நேரத்தில், சரியான இடத்தில் நாம் மேற்கொள்வோம். அத்தகையதொரு நிலைப்பாட்டையே இந்த பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதிலும் எடுத்திருப்பதாகத் தெரிவித்தார். (2-250)




# ஆயிரத்து 470 போத்தல்கள் கசிப்பு கோடா கைப்பற்று

### சந்தேக நபர் கைதானார்



(பரந்தன்)

கிளிநொச்சியில் சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப் படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தர்மபுரம் குமாரசாமிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் 5 மணியளவில் கிளிநொச்சி விசேட அதிரடிப்படை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரோஹான் கருணாரத்ன, பொலிஸ் பரிசோதகர் பல்லியகுரு ஆகியோரைக் கொண்ட விசேட அதிரடிப்படைக் குழுவும் மற்றும் தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். சத்துரங்க தலைமையிலான குழுவும் இணைந்து நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில் ஆறு பரல்களில் இருந்த 1470 போத்தல் கசிப்புக் கோடாவுடன் ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக குறித்த குழுவினர் தெரிவிக்கின்றனர.

குறித்த சந்தேக நபரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் கசிப்பினை ஒழிப்பதற்கு அதன் முதற் கட்ட உற்பத்தி பொருளான கோடாவினை ஒழிக்க வேணடும் அதனையே இலக்கு வைத்து ஒழிப்பு நடவடிக்கையை செய்து கொணடிருப்பதாக தர்மபுரம் பொலிஸ நிலைய வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-312)



முஸ்லிம்கள் புனித ரமழான் பெருநாளை நேற்றைய தினம் முல்லைத்தீவிலுள்ள பள்ளி வாசலில் கொண்டாடியபோது...
(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நாட்டில் அளவுக்கதிகமாக பணம் அச்சிடப்படுகின்றது

## பந்துல எம்.பி.குற்றச்சாட்டு



பொருளாதார வீழ்ச்சி மற்றும் மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல் காரணமாக நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், இதை சமாளிப்பதற்கு அளவுக்கதிகமாக பணம்அச்சிடப்படுவதாகவும்நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, கடந்த காலங்களில் பெரும் சர்ச்சையை தோற்றுவித்த எட்கா உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்டவர் என குற்றம் சுமத்தி னார்.

அரசியலுடன் தொடர்புபடாமல் புதிய பொருளாதார கொள்கையுடன் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு புதிய ஆளுநர் செயற்பட்டால் நாட்டை வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல முடியும்எனவும்நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

### குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| 01 | திருவையாறு வைத்தியசாலை வீதி | 9 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.90,000.00 வங்கி பிணை 31/10/2016 வரை |
| 02 | மீனாட்சி அம்மன் கோவில் வீதி | 2.07 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Highway | ரூபா.21,000.00 வங்கி பிணை 31/10/2016 வரை |
| 03 | உருத்திரபுரம் வைத்தியசாலை வீதி | 10 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.100,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 04 | இந்துக் கல்லூரி மனையியல் விருத்தி அறை | 2.7 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா.27,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 05 | ஜெயந்திநகர் GHC நிர்மாணம் | 1.92 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா.20,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 06 | திருத்தம் தர்மபுரம் 3ம் யுனிற் புளியம்பொக்கணை வீதி, கண்டாவளை | 10 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.100,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 07 | புதிய கட்டட நிர்மாணம் முருகானந்தா கல்லூரி | 5 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Building | ரூபா.50,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 08. | விளையாட்டு மைதான வீதி, தம்பாகமம், பளை | 3 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Highway | ரூபா.30,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 09 | சோரன்பற்று மத்திய வீதி | 9.15 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.92,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 10 | உள்ளக வீதி நிர்மாணம் தம்பாகமம் | 5 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.50,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 11 | தம்பாகமம் GHC நிர்மாணம் | 1.93 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா.20,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 12 | கிளாலி GHC நிர்மாணம் | 1.93 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா.20,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 13 | பயிற்சி நிலையத்திற்கான உள்ளக வீதி, தெளிகரை, பூநகரி | 8 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.80,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 14 | நாச்சிக்குடா பிரதான வீதி | 9 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Highway | ரூபா.90,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |
| 15 | வகுப்பறை நிர்மாணம், வினாசியோடை GTMS, பூநகரி | 5 மில்லியன் (வற் ஏனைய நீங்கலாக) | C7 or above Building | ரூபா.50,000.00 வங்கிபிணை 31/10/2016 வரை |

1.பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.

I.நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/ CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II.இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்கவேண்டும்.

III.ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல: 021 228 5357, பக்ஸ் இல: 021 228 3966)

3.கேள்வி ஆவணங்களை 11.07.2016 ஆம் திகதியிலிருந்து 01.08.2016ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

4.இரு அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5.அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 01.08.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

6.கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

7.தாமதமாகக் கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/ 2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படும்.

சுந்தரம் அருமைநாயகம்
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-5121)


## தந்தையின் பிரிவை தாங்க முடியாததால் உயிரை மாய்த்த மகன்

தனது தந்தையின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியாமல் மகன் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் எப்பாவல - கண்டக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

49 வயதான இரு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபரின் தந்தை கடந்த 30ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இந்நிலையில் கருமகாரிய நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றிருந்தன.

இதற்கான அனைத்து பொருட்களையும் அவர் வாங்கிக்கொடுத்துள்ளார். எனினும், தந்தையின் இழப்பை தாங்கிக்கொள்ள முடியாத அவர், நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். முன்னதாக குறித்த நபர் ஒரு வகை உரத்தினை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். எனினும், அது பயனளிக்கவில்லை.

இந்நிலையில், தனது தந்தையின் கல்லறைக்கு அருகிலேயே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தண்டப்பணம் செலுத்தும் கால எல்லை நீடிக்கப்பட்டது

போக்குவரத்து சமிக்ஞைகளை மீறும், அனுமதிப்பத்திரங்கள் இன்றி வாகனங்கள் செலுத்துவோருக்கு எதிராக போக்குவரத்துப் பொலிஸாரால் வழங்கப்படும் தண்டப்பணம் செலுத்துவதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 14 நாட்களே வழங்கப்படுவதாகவும் அதனை 30 நாட்களாக அதிகரிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் ஜீ.டீ.ஏ.சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலிருந்து புறக்கோட்டை வரை பேருந்துகள் பயணிப்பதற்கு தனியான பாதை ஒன்றை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் இதன்மூலம் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## போலி விசா மூலம் இத்தாலி செல்ல முற்பட்டவர் சிக்கினார்

போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்கு செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.


குறித்த நபர் மஸ்கட் ஊடாக இத்தாலி நாட்டிற்கு தப்பிச் செல்ல முற்பட்ட வேளையிலேயே விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 36 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர், நீர்கொழும்பைச் சேர்ந்த தரகர் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை கொடுத்து இத்தாலிக்கு செல்வதற்கான போலி விசா தயாரித்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

# ஆசிரிய தலைமைத்துவத்தின் தேவையும் அதன் பின்னணியும்



கலாநிதி த.கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(கடந்த வார தொடர்ச்சி)

**ஆசிரிய வகிபாகமும் கட்டளைக்கோள் மாற்றமும்**

இன்று பாடசாலைக்கல்வியில் கட்டளைக்கோள் மாற்றம் ஒன்று (Paradigm shift) நிகழவேண்டும் என எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிடுவர். இவ்வகையில் பாடசாலைக் கலைத்திட்டமானது தெரிந்தவற்றைப் பேணும் நிலையை விடுத்து தெரிந்தவற்றை மீள்நோக்குச் செய்யும் வகையிலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டவற்றைக் கற்பதை விடுத்து தீர்மானிக்கப்படாதவற்றைத் தேடும் வகையிலும் நிகழ்காலத்துக்கானவற்றை கட்டியெழுப்புவதை விடுத்து எதிர்காலத்துக்குத் தேவையானவற்றைக் கட்டியெழுப்பும் வகையிலும் மாற்றம் பெற வேண்டும். இதேபோல் வந்தபின் செயற்படும் அணுகுமுறையைத் (Reactive Approach) தவிர்த்து வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் (Proactive Approach) கடைப் பிடிப்பதும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளுக்குப் பதிலாக விரும்பத்தகு கற்றல் தேர்ச்சிகளை மாணவரிடையே விருத்தி செய்தலும் இக் கட்டளைக்கோள் மாற்றத்தின் வழியேயான சிந்தனைகளே ஆகும். இதனாலேதான் ஆசிரியர் வகிபாகம் கூட முன்னைய கடத்தும் வகிபாகம்,பரிமாற்றம் செய்யும் வகிபாகம் என்பவற்றுக்கும் அப்பால் நிலை மாற்றம்(Transformation) செய்யும் வகிபாகமாக மாற்றம் பெற வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது ஆசிரியர் ஒருவர் அறிவை வழங்குநர் ,வசதி ஏற்பாட்டாளர் என்ற நிலைகளுக்கும் அப்பால் சிறந்த வளவாளராகவும் விளங்க வேண்டும்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி(SBTD)**

உலகியல் மாற்றங்கள் பற்றிய அறிநிலையுடன் வழங்கப்படும் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சியில் தொடருறு பயிற்சியானது தளமட்டப் பயிற்சியாக (Site-based training) அமைதலே விரும்பத்தக்கது. இதற்காக இன்று பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் குறிக்கோள்கள் தெளிவாக வரையறை செய்யப் பட்டுள்ளன. அவையாவன,

- ➢ மாணவர்களதும் ஆசிரியர்களதும் தனித்தன்மை வாய்ந்த தேவைகளை நிறைவேற்றல்.
- ➢ பாடசாலையினுள் வாண்மைத்துவக் கலாசாரத்தை உருவாக்குதல்.
- ➢ பாடசாலை வளங்களைப் பயனுறுதி உள்ள வகையில் பயன்படுத்துதல்.
- ➢ பாடசாலையிலுள்ள எல்லோரிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்துதல்.
- ➢ பாடசாலையின் கொள்கைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் ஆதரவளித்தல்.
- ➢ பாடசாலை மட்டத்தில் தேசிய மட்டக்கொள்கைகளையும் கலைத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தல்.
- ➢ தொடர்ச்சியான ஆதரவு வழங்குதல்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஆசிரியர்களுக்குள்ள சவால்களையும் நோக்க வேண்டியது அவசியமாகும்.

**இருபத்தோராம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய பல பணிகள் உள்ளன. விரைவான மாற்றம் கண்டு கொண்டிருக்கும் இவ்வுலகில் உலகோடு ஒட்ட ஒழுகுவதற்கு மாணவர்களில் வேண் டிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய பிரதான முகவர்கள் ஆசிரியர்களே. ஆனால் இன்று ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலைகள், அன்று அவர்கள் படித்த பாடசாலைகள் போல இல்லை.

இன்று பாடசாலைகளில் காணப்படும் மூன்று முக்கியமான யதார்த்த நிலைமைகள் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களாகும். அவையாவன,




1.தராதரங்களுக்கும் வகை கூறுதலுக்குமான சமூக அழுத்தம்

2.அதிகரித்த வகையிலான மாணவர் பல்வகைமை

3.தொழில்நுட்பத்திலும் கோளமயமாக்கலிலும் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றங்கள்

இன்று எமது பெற்றோர் எதிர்பார்ப்பது தராதரங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வியே அகும். எல்லோருக்கும் கல்வி என்ற இலக்கின் அடுத்த கட்டமாக எல்லோருக்கும் தராதரமான கல்வி என்பதே இன்றைய இலக்காக உள்ளது. இந்த இலக்கு எய்தப்படக்கூடியதுதான் என்பதனை நிறுவும் வகையில் இது தொடர்பாக பிரதான நம்பிக்கைகள் சில கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அவையாவன,

1.கற்றல்-கற்பித்தற் செயன்முறையை வழிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தராதரங்களின் தொகுதி உருவாக்கப்படலாம்.

2.இத்தராதரங்களை எய்துவதற்காக உயர் எதிர்பார்ப்புகளை பிள்ளையிடம் உருவாக்கலாம்.

3.சான்று-அடிப்படையிலான நடைமுறைகள் மூலம் ஆசிரியர்கள் உயர் தராதரத்தை அடையலாம்.

4.மாணவர் கற்றலுக்குப் பொறுப்பாக ஆசிரியர்கள் விளங்கலாம்.

அடுத்து வகுப்பறைகளில் அதிகரித்த அளவில் மாணவர்கள் பல்வகைமை(Student diversity) காணப்படுவதும் ஆசிரியர்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு அதிகரித்த அளவில் மாணவர் பல்வகைமை காணப்படுதல் ஆசிரியர்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய பல உட்கிடைகளைக் கொண்டுள்ளது.

வகுப்பிலே பல்வகை ஆற்றல்களைக் கொண்ட தனியாள் வேறுபாடுகளுள்ள மாணவர்கள் காணப்படுதல் பல்வேறுபட்ட போதனை முறைகளை ஆசிரியர்கள் கையாள்வதற்கு வழிவகுக்கின்றது. சராசரி மாணவர்களுக்கான கற்பித்தல் முறையிலமைந்த வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுக்குமான கற்பித்தல் இன்று வேண்டப்படுவதன்று. தனியாள் வேறுபாடுகளைக் கவனத்திற்கொண்டு அந்த மாணவ திறமைகளுக்கு ஏற்ற வகையில் கற்பித்தல் மேற்கொள்வதற்கு திட்டமிட வேண்டியது ஆசிரியர் கடமைகளில் ஒன்றாகும்.

அத்தோடு இயலாமைகளுடன் கூடிய மாணவர்களையும் உட்படுத்திக் கற்பிக்க வேண்டும் என்பது இன்று அப்பிள்ளைகளினதும் பெற்றோர்களினதும் பராமரிப்பாளர்களினதும் குரலாக ஒலிக்கின்றது. அப்பிள்ளைகளை இயலாமை உள்ளவர்களாக கருதிப் புறம்தள்ளாமல் அவர்களை மாற்று வலுவுள்ளவர்களாகக் கொண்டு சாதாரண வகுப்பறையில் உள்ளடக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று ஆழ வேர் கொண்டுள்ளதோடு அதற்கான நடைமுறைகளும் திட்டமிடப்படுகின்றன.

அதேவேளை தனியாள் வேறுபாடுகளுள்ள மாணவர்களின் அடைவுகளிலுள்ள இடைவெளிகளை இல்லாமல் செய்வதற்கு பாடசாலை மட்டுமே தனியாக முயற்சிப்பது போதாததாகும். இதனால் பாடசாலைக்கு வெளியேயான மாணவ வாழ்க்கையையும் வளப்படுத்தக்கூடியதாக ஆசிரியர்கள் கல்வியாளர்களுடனும் வேறு பலருடனும் இணைந்து தொழிற்பட வேண்டியுள்ளனர். புலமை சார்ந்த, அறிகை சார்ந்த விடயங்களில் மாத்திரம் கவனம் கொள்ளாமல், பாடசாலைகளுக்கும் குடும்பங்களுக்கும் உள்ளூர் சமுதாயங்களுக்குமிடையே வலிமையான இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கும் இணைந்து தொழிற்படுவதற்குமான கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டியதும் இன்று அவசியமாகி உள்ளது.

இவற்றை எல்லாம் நோக்கும்போது மாணவர்களின் பல்வகைமையானது கல்வியாளர்களுக்கான ஒரு சவால் மாத்திரமன்று அது ஒரு சந்தர்ப்பமும் ஆகும்.

மூன்றாவது நிலைமையானது தொழில்நுட்பத்திலும் கோளமயமாக்கலிலும் ஏற்பட்டுள்ள அடிப்படையான மாற்றங்கள் குறித்த நிலைமையாகும். இந்நிலைமையை தோமஸ் ஃபிரீட்மன்(Thomas freedman_) என்பவர் ஒற்றைப் படையான உலகில் கற்பித்தல் (Teaching in flat world) எனக் குறிப்பிடுகின்றார்.

**ஒற்றைப்படை உலகில் கற்பித்தல்**

தொழில்நுட்பவியலும் பூகோளப் பொருளியலும் எவ்வாறு உலகை ஒற்றைப் படையாக்கி உள்ளன என்பதையும் எவ்வாறு எமது வாழ்க்கைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதையும் விபரிக்கும் வகையில் தோமஸ் ஃபிரீட்மன் தமது கருத்துகளை முன்வைத்துள்ளார். ஒற்றைப்படை உலகில் கற்பித்தல் என்பது இவரது சிந்தனையின் முக்கியகருப் பொருளாகும். இச்சிந்தனை தொடர்பான பிரதான அம்சங்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1.பூகோளமானது இன்று சுருங்கி வருவதோடு போட்டி நிலையும் அதிகரித்து வருகிறது.

2.உலகின் எப்பாகத்திலுமுள்ள தகவல்களையும் தொழில்களையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளைத் தொழில்நுட்பவியல் முன்னேற்றங்கள் ஏற்படுத்தியிருப்பதோடு தொடர்பாடலை உடனடியாக மேற்கொள்ளக்கூடியதாகவும் மாற்றியுள்ளன.

3. துடிப்பான,விரைவூக்கமுடைய எவரும் உலகின் எப்பாகத்தில் உள்ளவர்க்கும் இணையத் தளத்தினூடாக சேவைகளையும் உற்பத்திப் பொருட்களையும் வழங்கக்கூடியதாக உள்ளது.

4.ஒற்றைப்படை உலகில் கற்றல் என்பது இலகுவானதாகவும் அதேவேளை கற்றல் சிக்கலாகியுள்ளது எனவும் குறிப்பிடலாம். ஏனெனில் ஒரு குறித்த விடயம் தொடர்பாகப் பெருமளவு தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளதெனினும் இப்பெருந்தொகையான தகவல்களிலிருந்து வேண்டியவற்றைத் தெரிவுசெய்தல் சிக்கலானதாகும்.

5.இன்று இணையத்தளத்தில் எந்த விடயத்தையும் கண்டறிந்து கொள்ள முடியும்.

ஆயினும் பரந்த தகவல்களிலிருந்து வேண்டியவற்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வதும் அவ்வாறு தெரிந்தெடுத்துக் கொண்டவற்றின் தரம்,துல்லியம்,நம்பகம் என்பவற்றைத் தீர்மானிப்பதும் பிரச்சினைக்குரியனவாகும்.

6.தொடர்பாடல் ஊடகங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மாணவர்களை ஈர்த்து கற்றலில் ஈடுபாடு கொள்ளலை அதிகரிக்கச் செய்துள்ளன. ஆயினும் இம்முன்னேற்றங்கள் காரணமாக கற்றலுக்கான மரபார்ந்த அணுகுமுறைகளிலமைந்த கற்பித்தலில் நாட்டம் குறைந்தவராக அமைதி குன்றியும் மாணவர்கள் வகுப்பறையில் காணப்படுகின்றனர்.

7.அண்மைக்காலங்களில் சர்வதேச ரீதியான ஆய்வுகள் மூலமும் சோதனைகள் மூலமும் உலகின் சிறந்த பாடசாலை முறைமைகளை இனங்காணக்கூடியதாக இருப்பதோடு அவற்றை ஒப்பிடக்கூடியதாகவும் உள்ளது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலுள்ள மாணவர்களுக்கு கல்வி ஊட்டுதலின் பிரச்சினைகளையும் சாத்தியப்பாடுகளையும்இந்த ஆய்வுகள் முதன்மைப்படுத்துகின்றன.

8.இந்த ஒப்பீடுகளில் அதி முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குவன ஆசிரிய விளைதிறனுக்கும் ஆசிரிய தலைமைத்துவத்துக்கும் வழங்கப்படும் முதன்மையும் தொடர்ச்சியான கற்றலினூடாக இவை எவ்வாறு விருத்தி செய்யப்படலாம் என்ற கரிசனையும் ஆகும்.

# சிரியா, ஈராக்கில் 30 ஆயிரம் வெளிநாட்டு தீவிரவாதிகள்

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

(ஜெனிவா)

**சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் சுமார் 30 ஆயிரம் வெளிநாட்டு தீவிரவாதிகள் தற்போது உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**

சிரியா மற்றும் ஈராக் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஐ.எஸ். தீவரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக தாக்குதல் நடத்தப்பட்டு வரும் நிலையில், அங்கிருந்து தீவிரவாதிகள் வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில், இது குறித்து ஐ.நாவின் பயங்கரவாத எதிர்ப்பு குழு தலைவர் ஜீன் பவுல் லபோர்ட் தெரிவிக்கையில்,

போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியா மற்றும் அதன் அயல் நாடான ஈரான் ஆகியவற்றில் அயல்நாட்டு தீவிரவாதிகள் அதிக அளவில் உள்ளனர். சுமார் 30 ஆயிரம் பேர் உள்ளனர்.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த பகுதி விடுவிக்கப்பட்டு வருகிறது.


அவர்கள் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமல்லாது அவர்களது சொந்த நாடுகளான துனிஷியா, மொராக்கோ உள்ளிட்டவற்றிற்கும் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அந்த நாடுகளில் தாக்குதல் நடத்துவது மிகவும் ஆபத்தானது ஆகும்.

திரும்பக் கூடியவர்களில் அபாயமற்ற தீவிரவாதிகளை மற்றவர்களிடம் இருந்து பிரிக்க வேண்டும். கருத்து சுதந்திரம் பாதிக்காமல் செய்ய வேண்டும்.

இல்லையென்றால் மீண்டும் தீவிரவாதிகள் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## ஒன்றரை வயதில் 22 கிலோ; உயிருக்கு போராடும் குழந்தை



(மும்பை)

இந்திய மராட்டிய மாநிலத்தில் மிகவும் அரிய நோயால் ஒன்றரை வயது குழந்தை 22 கிலோ எடை அளவுக்கு வளர்ச்சியடைந்து வரும் ஆபத்தான தகவல் வெளியாகியுள்ளது.

மராட்டிய மாநிலம், புனே மாவட்டம், போசாரி பகுதியை சேர்ந்த ஒரு தம்பதியரின் ஒன்றரை வயது ஆண் குழந்தை, 'லெப்டின்' எனப்படும் ஓமோன் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு, நாளுக்குநாள் அதீதமான உடல் எடையுடன் வளர்ந்து வருகிறது.

இந்த பாதிப்பு ஏற்படுபவர்களுக்கு வயிற்றுக்கு வேண்டிய அளவுக்கு சாப்பிட்டால் போதும் என்ற மனநிறைவு' ஏற்படாது. அதற்கு மூளையில் இருக்கும் பகுதி இடமளிக்காது. மேலும், மேலும் பசிப்பது போன்ற உணர்வே தொடர்ந்து ஏற்படும். இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஸ்ரீஜித் என்ற ஒன்றரை வயது ஆண் குழந்தை பிறக்கும் போது இரண்டரை கிலோ எடை மட்டுமே இருந்தது.

பின்னர், ஆறு மாதத்தில் 4 கிலோவாகவும், பத்து மாதத்தில் 17 கிலோவாகவும், தற்போது பதினெட்டு மாதத்தில் 22 கிலோவாகவும் அபரிமிதமான உடல் எடையுடன் இந்த குழந்தை வளர்ந்து வருகிறது. இதே நிலை நீடித்தால் மூன்று வயதுக்குள் சுமார் 40 கிலோ எடையை இந்த குழந்தை அடைந்துவிடும்.

எனவே, ஸ்ரீஜித்துக்கு மும்பையில் உள்ள ஜச்லோக் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நோயை குணப்படுத்துவதற்கான சிகிச்சை முறைகளும், மருந்துகளும் இந்தியாவில் இல்லை என்பதால் இங்கிலாந்தில் இருந்து மிகுந்த பணச்செலவின் மூலம் வரவழைக்கப்படும் விலையுயர்ந்த ஊசி மருந்தை ஒருநாளைக்கு இருவேளை செலுத்துவதன் மூலம் அந்த குழந்தையின் பசி நோயை டாக்டர்கள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தி வருகின்றனர்.

சாப்பிட ஏதாவது தராவிட்டால் தொடர்ந்து அழுது, அடம்பிடித்து, வயிற்றை நிரப்பிக் கொள்ளும் ஸ்ரீஜித் மூச்சுத் திணறலால் அடிக்கடி சிரமப்படுவதாகவும், சுயமாக உட்காரவோ, எழுந்து நிற்கவோ சிரமப்படுவதாகவும் குழந்தையின் தாயார் ரூபாலி கூறுகிறார்.

இதற்கு முறையான சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் தற்போது இரத்தக் கொதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள இந்த குழந்தைக்கு பல்வேறு நோய்களுக்கான பக்கவிளைவுகளும் தோன்றி, உயிருக்கே ஆபத்தாக அமைந்துவிடும் என கருதப்படுகிறது. (இ-10)

## மின்னல் தாக்கி 7 பேர் மரணம்

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் உள்ள கயை நகரில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதில் 7 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

கயை நகரில் தொடர்ந்து பலத்த மழை பெய்து கொண்டிருந்தபோது, திறந்த வெளியில் கூடியிருந்தவர்கள் மீது மின்னல் தாக்கியது. இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அவர்களின் உயிரிழப்புக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் நிதீஷ் குமார், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 இலட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார். (இ-10)

## துருக்கி இராணுவ உயரதிகாரிகள் சென்ற ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியது

### 7 பேர் உயிரிழப்பு



(அங்காரா)

துருக்கி நாட்டில் இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் கருங்கடல் பகுதியில் விழுந்து நொறுங்கிய விபத்தில் 7 பேர் பலியாகியுள்ளனர்.

ரமழான் பண்டிகையையொட்டி துருக்கி நாட்டின் எல்லைப்பகுதியை காவல் காக்கும் படைவீரர்களை சந்தித்து வாழ்த்து தெரிவிப்பதற்காக லெப்டினண்ட் ஜெனரல், கேர்னல், மேஜர்கள் உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஒரு ஹெலிகொப்டரில் நேற்றுக்காலை சென்றனர்.


வாழ்த்து தெரிவித்துவிட்டு திரும்பியபோது துருக்கியின் வடகிழக்கு பகுதியான கருங்கடல் பிரதேசத்தில் உள்ள கிரேசன் மாகாணத்தின் வான் எல்லை அருகே வந்த ஹெலிகொப்டர் திடீரென கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் 7 பேர் பலியானதாகவும், 8 பேர் காயமடைந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

மோசமான வானிலை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாக துருக்கி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

## ஏமன் விமான நிலையம் அருகே இரட்டை கார்க்குண்டு தாக்குதல்

### 6 பேர் பலி




(சனா)

ஏமன் நாட்டின் கடற்கரை நகரமான ஏடனில் உள்ள விமான நிலையம் அருகே நேற்று தீவிரவாதிகள் நடத்திய இரட்டைக் கார்க் குண்டு தாக்குதல்களில் 6 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. ஏடன் விமான நிலையத்தை ஒட்டியுள்ள இராணுவ முகாமை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

முதலில் வெடிகுண்டுகளை ஏற்றிவந்த ஒருகார் இராணுவ முகாமின் வாயில் பகுதியின்மீது பயங்கரமாக மோதியது.

இந்த திடீர் தாக்குதலால் அங்கு காவலுக்கு நின்ற வீரர்கள் நிலைகுலைந்து நின்றபோது, வேகமாக இராணுவ முகாமுக்குள் புகுந்த இன்னொரு காரும் பயங்கரமாக வெடித்துச் சிதறியது. இந்த தாக்குதலில் 6 பேர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (இ-10)

## சாதனையாளர்களாக மாற்ற குழந்தைகளுக்கு கொடூர பயிற்சி



ஒலிம்பிக் உள்ளிட்ட உலகின் அதி முக்கிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கப் பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் வெறியில் பிஞ்சுக் குழந்தைகளை கொடூரமான முறையில் சித்திரவதைப்படுத்திவரும் சீன தடகள பயிற்சியாளர்களின் கோரமுகம் தற்போது வீடியோ வடிவில் வெளியாகியுள்ளது.

இத்தகைய மனிதநேயமற்ற மனித உரிமை மீறல்களின் மூலம் பதக்கங்களையும் விருதுகளையும் வாங்கிக் குவித்து வரும் சீனா, இந்த ஆண்டு ரியோடி ஜெனிரே ஒலிம்பிக் போட்டியிலும் ஏராளமான பதக்கங்களை எதிர்பார்த்துள்ளது. (இ-10)

## பாலியல் வதை,போதைப்பொருள் விற்பனை குற்றம் சாட்டப்படும்

# தனியார் கல்வி நிறுவனங்கள்

# உடன் இழுத்து மூடப்படும்!

## நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**பாலியல் வதை,போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை குற்றம் சாட்டப்படுகின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் உடனடியாக இழுத்து மூடப்படும். அந்த நிறுவனங்களின் பொறுப்பாளர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இத்தகைய வழக்கு விசாரணைகள் முடியும் வரையில் சம்பந்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதைவஸ்து வழக்கு தொடர்பிலான பிணை மனு ஒன்றை ஆய்வு செய்தபோதே இவ்வாறு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் ரியூசன் வகுப்புக்கள் நடததும்போது மிகவும் பொறுப்போடு செயற்பட வேண்டும் என்றும்பாலியல்வதை, போதைவஸ்து பாவனை, போதைப் பொருள் விற்பனை போன்ற குற்றச்சாட்டுக்கள் எழாத வகையில் ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடந்து கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார்.அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் பலவற்றில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. சில தனியார் கல்வி நிலையங்கள் மாட்டுக் கொட்டகைகளைப் போன்று காணப்படுகின்றன. இத்தகைய கல்வி நிறுவனங்களை அவற்றின் பொறுப்பாளர்களும் நிர்வாகிகளும் உடனடியாக சீரமைக்க வேண்டும்.

காற்றோட்டமுள்ள சுத்தமான மலசல கூட வசதி கொண்ட சுகாதாரத்திற்குப் பாதிப்பில்லாத வகையில் தனியார் கல்வி நிலையங்கள் நடை பெறுகின்றனவா? என தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குகின்ற மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஏதேனும் வசதி குறைபாடுகள், சுகாதாரப் பாதிப்புகள் தனியார் கல்வி நிறுவனங்களில் காணப்படுமேயானால் அவற்றுக்கு எதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவ,மாணவிகள்ஒன்று கூடுகின்ற தனியார் கல்வி நிலையங்கள் பாலியல் வதை, போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை போன்ற குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பான இடங்களாகக் கருதப்படுகின்றன.

போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கூடுகின்ற மாணவர்களை இலக்கு வைத்து தமது போதைப்பொருள் வர்த்தகத்தை முன்னெடுக்கும் சந்தர்ப்பங்கள் அவதானிக் கப்பட்டிருக்கின்றன.

எனவே, தனியார் கல்வி நிலையங்களில் பாலியல்வதை குற்றம் இடம்பெறறதாகவோ அல்லது போதைப் பொருள பாவனை மற்றும் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டால், அந்தக் கல்வி நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

பாலியல் வதை மற்றும் போதைப் பொருள் குற்றம் தொடர்பில் எவரேனும் தனியார் கல்வி நிலைய வளாகத்தினுள் கைது செய்யப்பட்டால், அது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தனியார் கல்வி நிலையத்தின் பொறுப்பதிகாரி அதற்கான பொறுப்பை ஏற்று பதிலளிக்க வேண்டும்.

இலங்கையில் வைத்திய சாலை தாதியர், சிறைச்சாலை பெண் உத்தியோகத்தர் போன்ற பெண்கள் தவிர வேறு பெண்கள் மாலை 6 மணியில் இருந்து அதிகாலை 6 மணிவரை இரவு நேர கடமையில் ஈடுபட முடியாது. தொழில்பார்க்கவும் முடியாது. ஆடைத் தொழிற்சாலை பெண்கள் கூட மாலை 6 மணியின் பின்னர் வேலை செய்ய முடியாது.

எனவே தனியார் கல்வி நிலையங்கள் சூரியோதயத்தின் பின்னர் சூரியன் மறைவதறகிடையிலான பகல்வேளைகளில் மாத்திரமே வகுப்புக்களை நடத்த வேண்டும். அதிகாலை வேளைகளிலும், இரவு வேளைகளிலும் வகுப்புக்கள் நடத்துவதைத் தனியார் கல்வி நிலையங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலும் போதை விற்பனையும் அதிகரிக்கின்ற நேரங்களாக, இரவு நேரங்களே அமைந்திருக்கின்றன. எனவே, தனியார் கல்வி நிலையங்கள், அதிகாலை வேளையிலும் இரவிலும் வகுப்புக்களை நடத்தி பாலியல் வதை மற்றும் போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகாமல் இருப்பது அவசியமாகும்.

மாணவிகள் அதிகாலையில் தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புகளுக்கு வரும்போதும், இரவு நேரத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் வகுப்புக்கள் முடிந்து வீடு செல்லும்போதும், அவர்களுக்கு வீதிகளில் ஆபத்து வந்தால்கூட, தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புக்கள் நடத்திய ஆசிரியரும் அந்த நிறுவனங்களின் பொறுப்பதிகாரியும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே அவற்றைத் தவிர்த்து, மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, தனியார் கல்வி நிறுவனங்களை, போதைவஸ்து பாவனை மற்றும் போதைவஸ்து விற்பனை இல்லாத பிரதேசமாக மாற்றியமைக்க வேண்டியது அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளினதும் பொறுப்பாகும்.

முக்கியமாக பெண்கள் மீதான வன்செயல்களுக்கு, போதைவஸ்தே முக்கிய காரணியாக அமைந்துள்ளது என்பதை தனியார் கல்வி நிறுவனங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களுக்கு முன்னால் உள்ள வீதியோரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்கு வரும் மாணவர்கள் கூடி நின்று கதைப்பதையும், அதனால், வீதியில் செல்பவர்களுக்கு அவர்கள் இடைஞ்சல் ஏற்படுத்துவதையும், தனியார் கல்வி நிலையங்கள் கவனித்து, மாணவர்கள் அவ்வாறு கூடி நிற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாணவர்கள் வீதியோரங்களில் கூடி நிற்கும் சந்தர்ப்பங்களில், மாணவர்களுக்கு போதைவஸ்துக்களை இலகுவில் விற்பனை செய்வதற்கான வாய்ப்பாக போதைவஸ்து வியாபாரிகள் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே, போதைவஸ்து வியாபாரிகள் மாணவர்களை அணுக முடியாத வகையில், வகுப்புக்கள் முடிந்த பின்னர், மாணவர்களை கல்வி நிலைய வளாகத்தில் நிறுத்தி வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேணடும்.

யாழ்ப்பாண சமூகத்திலிருந்து, போதைவஸ்துக்களை ஒழிப்பதற்கு அனைத்துத் தரப்பும் தமக்குரிய கடமைகளில் இருந்து தவற முடியாது என்ற அடிப்படையிலேயே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்று நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல்களை மாநகர சபை மற்றும் நகர சபை ஆணையாளர்கள், பிரதேச சபை செயலாளர்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்பிவைக்குமாறு யாழ். நீதிமன்ற பதிவாளருக்கு நீதிபதி பணித்துள்ளார். (இ-10)

## அமரர் எஸ்.பொ.ஞாபகார்த்த அனைத்துலக குறுநாவல் போட்டி



அவுஸ்திரேலியாவில் இருந்து செயற்படும் அக்கினிக்குஞ்சு இணையத் தளத்தினால் மறைந்த மாபெரும் எழுத்தாளரும், அக்கினிக் குஞ்சு இணையத்தளத்தின் பிரதம இலக்கிய ஆலோசகராக இருந்தவருமான எஸ்பொ. அவர்களின் இரண்டாவது நினைவினையொட்டி அனைத்துலக ரீதியாக குறுநாவல் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.போட்டிகள் பற்றிய பொது விதிகள்

1. உலகெங்கும் வாழும் தமிழ் பேசும், எழுதும் எவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம்.

2. ஒருவர் ஒரேயொரு குறுநாவலை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்.

3. குறுநாவல் யுனிகோட் (Unicode) எழுத்துருவில் - மின்னஞ்சல் இணைப்பாக Microsoft Word வடிவத்தில் அனுப்பப்படல் வேண்டும். மின்னஞ்சலின் subject இல் “எஸ்.பொ நினைவுக் குறுநாவல் போட்டி- 2016’ எனக் குறிப்பிட்டு, அஞ்சலின் உட்பகுதியில் குறுநாவலின் தலைப்பு, போடடியாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் தரப்படல் வேண்டும். போட்டியாளரின் புகைப்படம் மற்றும் சிறு குறிப்பு இணைத்தல் வேண்டும்.

4. போட்டியாளரின் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். அனுப்பப்படும் குறுநாவல் ஏற்கனவே வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டதாகவோ, பிரசுரிக்கப்பட்டதாகவோ அல்லது வெளியிடப்பட்டதாகவோ இருத்தல்கூடாது.

5. போட்டிக்கு அனுப்பப்படும்குறுநாவல்களைஇணையத்தளங்களில் பிரசுரிக்கவும், நூலாக வெளியிடவும் அக்கினிக்குஞ்சு நிர்வாகத்தினருக்கு உரித்துண்டு.

6. குறுநாவல் 4,000 வார்த்தைகளுக்குக் குறையாமலும் 8,000 வார்த்தைகளுக்குக் கூடாமலும் அமைதல் வேண்டும்.

7. அக்கினிக்குஞ்சு நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

இப்போட்டிகளுக்கான பரிசு விபரங்கள் பின்வருமாறு:

முதலாம் பரிசு - 400 அவுஸ்திரேலிய வெள்ளிகள்

இரண்டாம் பரிசு- 350 அவுஸ்திரேலிய வெள்ளிகள்

மூன்றாம் பரிசு - 250 அவுஸ்திரேலிய வெள்ளிகள்

சிறப்புப் பரிசு - தேர்வு பெறும் ஐந்து படைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 அவுஸ்திரேலிய வெள்ளிகள்.

முடிவுத்திகதி: 30.09. 2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

போட்டி முடிவுகள் 2016 கார்த்திகை மாதம் அக்கினிக்குஞ்சு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:- real 24 news @hotmail.com

மேலதிக விபரங்களுக்கு: www.akkinikkunchu. com இணையத்தினைப் பார்க்கவும். (இ)

## கொழும்புக்கு சவால் விடுக்கும் வகையில் தமிழகத்தில் துறைமுகம் அமைக்க ஒப்புதல்

கொழும்புக்கு இணையாக தமிழகத்தில் துறைமுகம ஒன்றை அமைப்பதற்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் கூடிய இந்திய மத்திய அமைச்சரவை இதற்கான ஒப்புதலை வழங்கியது. இதன்படி தமிழகம், கொலாச்சலில் இந்த துறைமுகம் அமைக்கப்படவுள்ளது.

இதன்மூலம் உலகத்தின் கிழக்கு- மேற்கு வர்த்தக பாதையின் ஊடாக சிறந்த வருமானத்தை ஈட்டமுடியும் எனறு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த துறைமுகத்தை அமைக்க 27 ஆயிரம் கோடி ரூபாய்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் முதற்கட்ட பணிகளுக்காக 6575 கோடி ரூபாய்களுக்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த துறைமுக கடல் பகுதி கொழும்புடன் ஒப்பிடுகையில் 2 மீற்றர் அதிக ஆழத்தை கொண்டிருக்கிறது.

கொழும்பு 18 மீற்றர் ஆழத்தை கொண்டிருக்கும் நிலையில் கொலாச்சல் கடல் பகுதி 20 மீற்றர் ஆழத்தைக் கொண்டிருக்கிறது.

எனவே பாரிய கப்பல்களையும் இந்த துறைமுகத்துக்குள் உள்வாங்க முடியும.

தென்னாசியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை பொறுத்த வரையில் அதில் 66.6 வீத வர்த்தகத்தை கொழும்பின் துறைமுகம் கையாள்கிறது.

இதன் காரணமாக இந்திய துறைமுகங்களுக்கு வருடம் ஒன்றுக்கு 1500 கோடி ரூபாய்கள் வரை நட்டமேற்படுகின்றன என்ற விடயமும் இந்த புதிய துறைமுக அமைப்புக்கான ஏதுவாக அமைந்துள்ளது. (இ-10)

## சிலாபத்தில் ஒருவர் கடத்தி விடுவிப்பு; ஒருவர் கைதானர்

(கொழும்பு)

இத்தாலியிலிருந்து கடந்த 23ஆம் திகதியன்று நாடு திரும்பி வீட்டிலிருந்தவரை கடத்திச் சென்ற மூவரடங்கிய குழுவினர், அவர் மீது தாக்குதல் நடத்தி, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி விடுவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சிலாபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கடத்தி, விடுவிக்கப்பட்டவர், சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும், நபரொருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலும் இருவரை தேடி வருவதாகவும் தெரிவித்தனர்.

இத்தாலியில், இடம்பெற்றதாகக் கூறப்படும் கொடுக்கல்,வாங்கலில் ஏற்பட்ட முரண்பாடே இந்த கடத்தலுக்கு காரணமென தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பல் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். (இ-10)




# முரட்டுக்குதிரை

"வழக்கமாக குதிரையுடன் பழகும் வீரர்களாலேயே இந்தக்குதிரையை அடக்க முடியவில்லை என்றால், உன்னால் மட்டும் அடக்க இயலுமா?"

"நமது வீரர்களைவிட உயர்ந்தவன் என்று நான் கூறிக் கொள்ளவில்லை. ஒரு தடவை முயற்சி செய்து பார்க்கிறேன் என்று தான் கூறுகிறேன்" என்றான்.

மகனால் அந்த குதிரையை அடக்க முடியும் என்ற நம்பிக்கை மன்னருக்கு இல்லாவிட்டாலும், மகனின் ஆசையை ஏன் தடுக்க வேண்டும் என்று எண்ணி அனுமதி கொடுத்தான்.

இளவரசன் அந்தக் குதிரையை நோக்கி, அதன் தோற்றத்தையும் அது நின்றிருந்த நிலையையும் ஒரு தடவை கண்ணோட்டம் விட்டான். பிறகு அந்தக் குதிரையை நெருங்கி, அதன் கடிவாளத்தைப் பற்றி சூரியன் இருக்கும் பக்கம் அதன் முகம் இருக்குமாறு திருப்பி நிறுத்தினான்.

பிறகு சட்டென்று குதிரை மீது பாய்ந்து ஏறினான். குதிரை சற்று அதிர்ச்சியடைந்தது போலத் தடுமாறியது. இளவரசன் கடிவாளத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அது நின்றிருந்த நிலையிலிருந்து திரும்பாமல் இருக்குமாறு எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டான்.

குதிரை இரண்டொரு தடவை துள்ளிக் குதித்தது. ஆனால் மற்றவரிடம் நடந்து கொண்டதைப்போல அவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொள்ளவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு குதிரை அமைதியடைந்து விட்டது.


பிறகு இளவரசன் குதிரையைச் செலுத்தி அந்த மைதானத்தை ஒரு தடவை வலம் வந்து பிறகு குதிரையை விட்டுக் கீழிறங்கினான். மன்னன் மட்டுமன்றி, அங்கிருந்த அனைவருமே அந்தக் காட்சியைக் கண்டு பிரமிப்பு அடைந்தனர். வலிமையும், வீரமும் மிக்க வீரர்களாலேயே முடியாத சாதனையை இளவரசன் மட்டும் எவ்வாறு சாதித்தான்! என்று எல்லோரும் அதிசயப்பட்டனர்.

மன்னன் அந்த குதிரைக்குத் தக்க விலை கொடுத்துவிட்டான்.

அன்று மாலையில் அரண்மனைப் பூந்தோட்டத்தில் மன்னன் தமது குடும்பத்தினருடன் உலாவிக் கொண்டிருந்தான்.

அப்போது இளவரசனை நோக்கி, "மகனே! மற்ற வீரர்கள் அடக்க மிகவும் சிரமப்பட்ட குதிரையை உன்னால் மட்டும் எவ்வாறு அடக்க முடிந்தது?" என்று வினவினான்.

இளவரசன் மன்னனை நோக்கி, "தந்தையே! அந்தக் குதிரையின் செயற்பாட்டை கூர்ந்து பார்த்ததில் ஓர் உண்மையைக் கண்டு கொண்டேன். அந்தக் குதிரை



இயல்பாகவே சற்று முரடாக இருந்தாலும், அது தரையில் விழும் தனது நிழலைக் கண்டு ஒரு வித மிரட்சியும் வெறியும் அடைந்து விடுகிறது."

அதைக் கண்டு கொண்ட காரணத்தால் தான், நான் குதிரையைச் சூரியன் இருக்கும் திசைப்பக்கம் அதன் முகம் இருக்கும் விதத்தில் திருப்பி நிறுத்தினேன். நான் நினைததது சரியாக ஆகி விட்டது. குதிரைக்கு தன் நிழலைக்காண வாய்ப்புக் கிடைக்காததால், அது மிரட்சி அடைவதிலிருந்தும் தடுக்கப்பட்டது. அதன் பிறகு அதை அடக்குவது எளிதாயிற்று. குதிரைக்காரன் வேண்டுமென்றே தான் குதிரையைத் திருப்பி நிறுத்தியிருந்தான்.

"அவன் தந்திரத்தை முறியடித்த காரணத்தால்தான் எனக்கு வெற்றி கிடைத்தது!" என்று கூறினான் இளவரசன். உடல் வலிமையைவிட மனவலிமையே உயர்ந்தது என்பதை நிரூபித்துக் காண்பித்த தமது புதல்வனை பிலிப் மன்னன் பெரிதும் பாராட்டினான்.

இவ்வாறு சின்ன வயதிலேயே தன் அறிவுப் பலத்தையும் உடல் வலிமையையும் நிரூபித்துக் காண்பித்த அந்த சிறுவன்தான் பிற்காலத்தில் மகா அலெக்சாண்டர் என்ற பெயரில் உலகப்புகழ் பெற்றான். மிகவும் இளம் வயதிலேயே நாட்டின் மன்னனாகப் பொறுப்பேற்ற அலெக்சாண்டர் எகிப்து, பாரசீகம் போன்ற பெரிய நாடுகளை வென்று அந்த வெற்றிப் பெருமையோடு பாரதம் வந்தான். பாரதத்தில் அவனால் முழுவெற்றி காண முடியா விட்டாலும் தனது வீரதீர பராக்கிரமத்தை நிலைநாட்டிவிட்டுத் தன் தாயகம் திரும்பிச் சென்றான். (முற்றும்)

## 07.2016 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1456 - ஜோன் ஆஃப் ஆர்க் குற்றமற்றவள் என அவள் தூக்கிலிடப்பட்டு 25 ஆண்டுகளின் பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டது.
- 1543 - பிரான்ஸ் லக்சம்பேர்க்கை முற்றுகையிட்டது.
- 1799 - பஞ்சாப் மன்னன் ரஞ்சித் சிங்கின் படையினர் லாகூரை அடுத்துள்ள பகுதிகளைப் பிடித்தனர்.
- 1807 - பிரான்சின் நெப்போலியனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி உடன்பாடு ரஷ்யாவின் டில்சிட் என்ற இடத்தில் எட்டப்பட்டது.
- 1865 - ஆபிரகாம் லிங்கன் கொலையில் குற்றவாளிகளான நான்கு பேர் துக்கிலிடப்பட்டனர்.
- 1896 - இந்தியாவில் முதற் தடவையாக பம்பாயில் திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1898 - ஹவாய் தீவை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் முடிவில் அதிபர் வில்லியம் மக்கின்லி கைச்சாத்திட்டார்.
- 1917 - ரஷ்யப் புரட்சி: ரஷ்யாவின் இடைக்கால அரசின் பிரதமர் இளவரசர் கியோர்கி லுவோவ் பதவியைத் துறந்தார். அலெக்சாண்டர் கெரென்ஸ்கி பிரதமரானார்.
- 1937 - பசிபிக் போர்: ஜப்பானியப் படைகள் சீனாவின் பெய்ஜிங் நகரை அடைந்தனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் தலையீட்டைத் தடுப்பதற்காக அமெரிக்கப் படைகள் ஐஸ்லாந்தில் தரையிறங்கினர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: பெய்ரூட் நகரம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.
- 1953 - பொலிவியா ஊடாக பெரு, நிக்கராகுவா போன்ற நாடுகளுக்கான தனது பயணத்தை சேகுவேரா ஆரம்பித்தார்.
- 1959 - வெள்ளிக் கோள் ரெகூலஸ் என்ற விண்மீனை மறைத்தது. இந்நிகழ்வு வெள்ளியின் விட்டம் மற்றும் அதன் வளிமண்டலம் போன்றவற்றை அளக்க உதவியது.
- 1967 - பயாபிராவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1969 - கனடாவில் பிரெஞ்சு மொழியும் ஆங்கிலத்துடன் இணைந்து அதிகாரபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.
- 1978 - சொலமன் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2005 - லண்டனில் 4 சுரங்கத் தொடருந்து நிலையங்களில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளில் 56 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - சீனாவில் சுரங்கம் தோண்டுவதற்காக வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடித்ததில் 43 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - புதிய ஏழு உலக அதிசயங்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்தியாவின் தாஜ் மகால் புதிய 7 உலக அதிசயங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### பிறப்புகள

- 1947 - ஞானேந்திரா, நேபாளத்தின் கடைசி மன்னர்.
- 1981 - மகேந்திரசிங் டோனி, இந்தியத் துடுப்பாளர்.

### இறப்புகள்

- 1930 - ஆர்தர் கொனன் டொயில், துப்பறியும் புனைகதை எழுத்தாளர். (பி. 1859)
- 2014 - எதுவார்து செவர்துநாத்சே, ஜார்ஜியாவின் முன்னாள் அரசுத் தலைவர். (பி. 1928)

### சிறப்பு நாள்

- சொலமன் தீவுகள் - விடுதலை நாள். (1978)

## மகேந்திரசிங் டோனி



சிலநேரங்களில் எம்எஸ் டோனி என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற மகேந்திரசிங் டோனி 1981ஆம் ஆண்டு ஜூலை 7இல் பிறந்தார். இந்திய துடுப்பாட்ட வீரரும் தற்போது இந்திய அணிக்கு ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு தலைவராக இருப்பவரும் ஆவார். துவக்கத்தில் மிகுந்த ஆரவாரமான அதிரடியான மட்டையாளராக அறியப்பட்டிருந்த டோனி இந்திய ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு தலைமையேற்றதிலிருந்து மென்மையான தலைவர்களுள் ஒருவராக குறிப்பிடப்படுகிறார். இவரது தலைமையின்கீழ் இந்தியா 2007 ஐசிசி டி20 உலகக்கோப்பை, 2007 ஆம் ஆண்டு சிபி தொடர் மற்றும் 2008இல் அவர்கள் 2க்கு 0 என்ற வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய பார்டர்-கவாஸ்கர் டிராபி ஆகியவற்றை வென்றது. இலங்கையிலும் நியூசிலாந்திலும் அவர்களது முதலாவது இரு அணி ஒருநாள் சர்வதேச தொடருக்கும் இவர் தலைமையேற்றார். 2008 மற்றும் 2009ஆம் ஆண்டிற்கான ஐசிசி ஒருநாள் சர்வதேச போட்டிகள் விளையாட்டு வீரர் விருது (இந்த விருதைப் பெற்ற முதலாவது இந்திய விளையாட்டு வீரர்), ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது மற்றும் 2009ஆம் ஆண்டில் குடிமகனுக்கான மிக உயரிய நான்காவது கௌரவமாக கருதப்படும் பத்மஸ்ரீ விருது உள்ளிட்ட பல விருதுகளையும் டோனி பெற்றிருக்கிறார். 2009ஆம் ஆண்டு நவம்பர்வரை ஐசிசி தரவரிசைப் பட்டியலில் டோனி அதிக மதிப்பெண் பெற்ற மட்டையாளராக இருக்கிறார். 2009ஆம் ஆண்டில் விஸ்டமின் முதலாவது டிரீம் டெஸ்ட் அணிக்கான தலைவராகவும் இடம்பெற்றிருக்கிறார். ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையால் தொகுக்கப்பட்ட உலகின் முதல் 10 அதிக வருமானம் ஈட்டும் துடுப்பாட்ட வீரர்களில் மகேந்திரசிங் டோனி முதலாவதாக இருக்கிறார். டோனி தலைமையிலான இந்திய அணி 2011 துடுப்பாட்ட உலகக்கோப்பையை வென்றது.

# இலங்கைப் படைகளுக்கு நவீன போர்த்தளபாடங்களை வழங்குகின்றது ரஷ்யா

இலங்கைப் படைகளுக்கு சில நவீன போர்த்தளபாடங்களை ரஷ்யா வழங்கவுள்ளதாக, இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் அலெக்சாண்டர் கர்சாவா தெரிவிததுள்ளார்.


ரஷ்யாவின் தேசிய தினக் கொண்டாட்டம் அண்மையில், கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்தில் கொண்டாடப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதன் விளைவாகவே இலங்கை படைகளுக்கு சில நவீன இராணுவத் தளபாடங்களை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கையுடன் பல முக்கியமான இருதரப்பு உடன்பாடுகளில் ரஷ்யா கையெழுத்திட்டுள்ளது. இதில், ரஷ்யாவின் தனித்துவ வடிவமைப்பிலான, சில முன்னோடி போர்த்தளபாடங்களை வழங்கும் உடன்பாடுகளும் அடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# போரில் ஈடுபட்ட இராணுவத்தினரை விசேட நீதிமன்றில் நிறுத்த முடியாது

## டெஸ்மன் டி சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

**வன்னிப் போரில் ஈடுபட்ட இரா ணுவத்தினரை விசேட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாது என பிரிட்டனின் சிரேஷ்ட சட்டத்தரணி டெஸ்மன் டி சில்வா கூறியதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு குறித்து டெஸ்மன் டி சில்வாவிடம் வினவிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினர் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை. இதனால் நீதிமன்ற விசாரணைகளை நடத்த முடியாது என தெரிவித்தார்.சர்வதேச நீதிமன்றின் வழக்குப் பணிப்பாளராக டெஸ்மன் டி சில்வா கடமையாற்றியுள்ளார்.30 ஆண்டுகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிரயோகிக்கப்பட்ட அச்சுறுத்தலையே படையினர் இல்லா தொழித்தனர்என்பது உறுதியாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

டெஸ்மன் டி சில்வாவின் இந்தக் கருத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரின் குற்றச்சாட்டை முறியடிக்கும் வகையில் அமைந்துள்ளதாக சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் சிவிலியன்கள் மீது பல்வேறு தாக்குதல்களை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சட்டத்தரணி டெஸ்மன் டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையரான டெஸ்மன் டி சில்வா, பிரான்ஸிற்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றியுள்ளார். இவர் கண்டி திரித்துவ கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த அரசாங்கத்தினால் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழுவிலும் டெஸ்மன் டி சில்வா இடம் பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அனுமதிப்பத்திரம் தபாலில் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் தற்போது தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மூலம் தோற்றுபவர்களுக்கு பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவர்களின் முகவரிக்கும் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அனுமதி அட்டைகள் கிடைத்த பின்னர் அதில் ஏதும் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, உரிய தினத்துக்கு முன்னர் அனுமதிப் பத்திரம் கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 011 278 4208 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் ஒகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பமாகி 27 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இலங்கை விமானப்படையிடம் இருந்து கைமாறியது மட்டு.விமான நிலையம்

இலங்கை விமானப்படையின் வசம் இருந்து வந்த மட்டக்களப்பு விமான நிலையம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகவே, இலங்கை விமானப்படையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த மட்டக்களப்பு விமான நிலையத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்புப்பணிகளை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த மே 31 ஆம் திகதி வெளியிடப்பட்டதாக, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்தை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு விமான நிலையத்தின் ஓடுபாதை, இலங்கை விமானப் படையின் உதவியுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால், 1400 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் விமான சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க, மத்தள உள்ளிட்ட இலங்கையில் உள்ள 16 விமான நிலையங்களில், 4 விமான நிலையங்கள் மாத்திரமே தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் ஏனைய 12 விமான நிலையங்களும், இலங்கை விமானப்படையின் கட்டுப்பாட்டிலேயே இயங்குவதாகவும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நிமலசிறி தெரிவித்தார்.

அதேவேளை, மட்டக்களப்பு விமான நிலையம் தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த இலங்கை விமானப்படைப் பேச்சாளர் சந்திம அல்விஸ், இந்த விமான நிலையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் விமான நிலைய சுற்றாடலின் பாதுகாப்பு இலங்கை விமானப்படை வசமே இருப்பதாகவும், தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### பச்சோந்தித்தனம்

கொள்கைப் பிடிப்பற்றவர்களும் சுயநலப் பேர்வழிகளும்தான் நேரத்திற்கு ஏற்றாற் போல் தங்கள் செயல்களை, வார்த்தைகளை மாற்றிக் கொள்கிறார்கள்.

இவர்களைச் சந்தர்ப்பவாதிகள் என்றும் சொல்லலாம்.

புயலுக்கு வளைந்து கொடுக்கும் நாணல் புல் வாழ்கிறது; வளைந்து கொடுக்காத மரங்கள் வேரோடு சாய்கின்றன. ஆகவே நாமும் சூழ்நிலைக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்வதில் தவறில்லை என்று வாதிடவும் செய்வார்கள் இவர்கள்.

வளைந்து கொடுத்து வாழ்வது வேறு;அற்ப இலாபங்களுக்காக அந்தர் பல்டி அடிப்பது வேறு.

நாம் ஒன்றைச் சொல்லியிருக்கலாம். அல்லது செய்திருக்கலாம். பிறகு அதற்கு நேர்மாறான ஒன்றைச் சொல்ல நேரிடலாம். அல்லது செய்ய நேரிடலாம்.

அப்படி நடக்கும்போது அதற்குத் தகுந்த - நியாயமான காரணங்களைச் சொல்லாவிட்டால் அது பச்சோந்தித்தனம்.

அத்தகைய காரணங்கள் நம் மனம் மட்டும் ஏற்கும்படியாக இல்லாமல் எதிராளியும் கேள்விப்படும்போது நாம் அவனுடைய நிலையில் இருந்திருந்தால் அப்படித்தான் நடந்து கொண்டிருப்போம் என்று எண்ணும்படியாகவும் ஏற்கும்படியாகவும் இருக்க வேண்டும்.

சொன்னதற்கு-செய்வதற்கு நேர்மாறான ஒன்றைச் செய்யும் போது அதன் மூலம் பாதிப்பு அடைபவர்களைச் சமாதானப்படுத்துவதோ இந்த முடிவைத் தவிர வேறு நல்ல முடிவு இருக்கமுடியாது என்று கூறித் தெரியப்படுத்துவதோ இன்றிமையாதது.

இந்தச் செயலைச் செய்யத்தவறும் போது தான் அது கடுமையாக விமர்சிக்கப்பட்டு நம்மைச் சுற்றியுள்ளவர்களிடையே அவப்பெயரைச் சம்பாதித்துக் கொள்ள ஏதுவாகிறது.

சொன்னால் சொன்னது தான் என்று உறுதியாக இருந்து அப்படி உறுதியாக இருப்பதனால் நஷ்டங்களையும் மனக் கஷ்டங்களையும் அடைந்து இறுதியில் இடையூறுகளை வென்று சொன்னதைச் சொன்னவாறு செய்து முடிப்பதில் மனநிறைவும் பெருமையும் கிடைக்குமே அதற்கு இணையாக எதையும் குறிப்பிட முடியாது.

கொள்கைப் பிடிப்புக்காகச் சிரமங்களை ஏற்பதில் ஒரு சுகம் இருக்கவே செய்கிறது. இதை அனுபவித்தவர்கள் மட்டுமே ஏற்கக் கூடிய வாதம்.

பேச்சை மாற்றி நாம் அடையும் இலாபங்கள், பேச்சை மாற்றாமல் நடப்பதால் வரும் இலாபங்களைவிடச் சிறியது. மேலும் ஆபத்தானது.

எதையும் குறுகிய வட்டமாகப் போட்டுக் கொண்டு அதன்படியே செயற்படுவது, சிறுசிறு சாதனங்களுக்காக நாக்குப் பிறழ்வது ஆகியவை மற்றவர்கள் நடுவே வெறுப்பைச் சம்பாதித்து நம்மை அவர்களிடமிருந்து வெகுவாக விலக்கி வைத்துவிடும்.கேலிப் பேச்சுக்கும் ஆளாக நேரிடும்.

உலகத்தவர் ஏசும்படியான வாழ்க்கை ஒரு போதும் நமக்குத் தேவையில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# சுங்க கட்டளைகள் சட்டம் வெளிப்படையானது-ரவி

(கொழும்பு)

**சுங்க கட்டளைகள் சட்டமூலம் கொண்டுவரப்படுவது வெளிப்படையானது எனவும், இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை எனவும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**



எக்ஸ்ரே இயந்திரம் பொருத்துவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன நேற்று முன்தினம் வாய்மூலம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை சுங்க திணைக்களத்தை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் குறித்த இயந்திரம் ஜந்தினை கொள் வனவு செய்ய அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் வெளிப்படையான கேள்வி அறிவிப்பு மூலமே புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய் யப்படவுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

குறித்த இயந்திர கொள்வனுவுக்காக 2800 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# கட்டாக் காலிகளின் தொல்லை வைத்தியசாலையிலும் அதிகரிப்பு

யாழ்.பருத்துதுறை ஆதார வைத்தியசாலை வளாகத்திற்குள் கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை விடுதிக்குள் இவற்றின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறு அதிகரித்துக் காணப்படும் கட்டாக்காளி நாய்கள் மற்றும் பூனைகள் என்பவற்றால் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் தமது உணவுகளை வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளர்கள் பயன்படுத்துகின்ற சாப்பாட்டு அறைக்குள் இரவு, பகலாக இவற்றின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

விடுதி கவனிப்பாளர்கள் மணித்தியாலத்திற்கு ஒரு தடவை வந்து அகற்றி விட்டுச் சென்றாலும் அவை மீண்டும் வந்து நோயாளர்களைச் சிரமப்படுத்துகின்றன என மேலும் தெரியவருகிறது. (இ-5-60)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 80 | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 300 | 500 | 600 | 600 | 800 | 500 |
| தக்காளி | 260 | 300 | 220 | 280 | 240 | 280 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 80 | 80 | 100 |
| கோவா | 140 | 200 | 10 | 160 | 140 | 160 | 150 |
| கரட் | 200 | 400 | 150 | 240 | 200 | 240 | 200 |
| பூசணி | 120 | 200 | 110 | 140 | 120 | 160 | 70 |
| புடோல் | 100 | 100 | 50 | 180 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 120 | 150 | 90 | 120 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 130 | 140 | 160 | 150 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 60 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 400 | 160 | 320 | 180 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 120 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 100 | 200 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 100 | 200 | 50 | 120 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 200 | 130 | 180 | 140 | 160 | 140 |
| பீற்றூட் | 160 | 200 | 100 | 120 | 120 | 160 | 120 |
| கறிமிளகாய் | 420 | 400 | 30 | 400 | 320 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 250 | 400 | 500 | 320 | 400 |
| போஞ்சி | 200 | 300 | 150 | 180 | 180 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 50 | 80 | — | 80 | — |
| கீரை - 1பிடி | 20 | 20 | 15 | 20 | 30 | 20 | 15 |
| தேசிக்காய் | 140 | 200 | 120 | 160 | 160 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-20 | 40 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 400 | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 240 | — | 400 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 60 | 120 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 120 | 40 | 60 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ வெற்றி 222

சில பொது அமைப்புக்களும் மக்கள் படையும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டிருந்தன. அதில் மக்கள் அனைவரும் வீடுகளுக்குள்ளேயே இருந்து தங்களது வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றி தென்பகுதி சிங்கள அரசியல் தலைவர்களுக்கிடையே உள்ள அதிகார சண்டையில் எங்களுக்கு ஆர்வம் இல்லை என்பதை தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. புலிகளின் தேர்தல் புறக்கணிப்பையொட்டி வட கிழக்குப் பிராந்தியத்தில் வாக்குப்பதிவு மந்தமாக இருந்தது.

### குண்டு வீச்சில் 6 பேர் பலி

அமைதியாக தேர்தல் நடந்து கொண்டிருந்த போது கிழக்குப் பகுதியில் சக்தி வாய்ந்த வெடி குண்டுகளை வீசித் தாக்குதல் நடந்தது. இதில் 6 பேர் பலியானார்கள். ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்தார்கள்.

இதனால் மக்கள் வாக்குப் போட தயங்குவார்களோ என்று தேர்தல் அதிகாரிகள் பயந்தார்கள். குண்டு வீசி தாக்குதல் நடந்ததால் கிழக்கு பகுதியில் வாக்கு பதிவு மிகவும் மந்தமாக இருந்தது. நோர்வே தூதர்கள் அமைதி பேச்சுக்கு ரணில் விக்ரமசிங்க உதவியதால் அவருக்கு ஆதரவாக தமிழர்கள் வாக்குப் போட்டார்கள் என்று அங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

### ராஜபக்ஷ வெற்றி

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் 18.11.2015 அன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மொத்தத்தில் பதிவான ஒரு கோடி வாக்குகளில் 50.3 சதவீத வாக்குகளைப்பெற்று ஆளும் கட்சி வேட்பாளர் ராஜபக்ஷ வெற்றி பெற்றார்.

ராஜபக்ஷவுக்கு 48 இலட்சத்து 80 ஆயிரம் வாக்குகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 46 இலட்சத்து 90 ஆயிரம் வாக்குகளும் கிடைத்திருந்தன. ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 786 வாக்குகள் வித்தியாசத்தில் ராஜபக்ஷ வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையாளர் திஸாநாயக்க அதிகார பூர்வமாக அறிவித்தார்.

### மறுதேர்தல் தவிர்ப்பு

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுகின்றவர்கள் 50 சதவீத வாக்குகளைப் பெறாவிட்டால் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டியது இருக்கும். ஆனால் ராஜபக்ஷ 50 சதவீதத்தை விட 22 ஆயிரத்து 632 வாக்குகள் கூடுதலாகப் பெற்றிருப்பதால் மறுதேர்தல் தவிர்க்கப்பட்டதாக திஸாநாயக்க தெரிவித்தார்.

### தலா 11 மாவட்டங்களில்

நாடு மொத்தம் 22 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு வாக்குப் பதிவு நடைபெற்றது. இதில் ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க இருவரும் தலா 11 மாவட்டங்களில் அதிக வாக்குப் பெற்றுள்ளனர்.

ராஜபக்ஷவுக்கு மாதரா, கலுதரா, அநுராதபுரம், ஹம்பன் தொடா, கல்லி, பொலநறுவை, இரத்தினபுரி, கேல்லி, கருனேக்கலா, மொனராகலை, ஹம்பகா ஆகிய மாவட்டங்களிலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதுளை, கண்டி, மாத்தளை, நுவரேலியா, திகமடுல்ல, புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வன்னி, கெழும்பு ஆகிய மாவட்டங்களிலும் அதிக வாக்குகள் கிடைத்தன.

### தோல்விக்கு காரணம்

புறக்கணிப்புக் காரணமாக தமிழ்ப்பகுதியில் மிகக் குறைவான வாக்குகளே பதிவான போதிலும் அங்கு ரணில் விக்கிரமசிங்க கூடுதல் வாக்குக்ளைப்பெற்றிருந்தார். 7 இலட்சம் வாக்குகள் உள்ள யாழ்ப்பாணப் பகுதியில் 0.01 வீத வாக்குகள்தான் பதிவாகியிருந்தன.

தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்தது ரணில் விக்கிரமசிங்கவின் தோல்விக்கு முக்கிய காரணம் என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

### பிறந்தநாள் பரிசு

பிரதமர் ராஜபக்ஷவுக்கு 18.11.2005 அன்று 60 ஆவது பிறந்தநாள் ஆகும். பிறந்த நாள் பரிசாக அவருக்கு இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி கிடைத்துள்ளது. ராஜபக்ஷ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட அதிகார பூர்வமான அரசு நிகழ்ச்சியில் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவில்லை.

புதிய ஜனாதிபதியாக ராஜபக்ஷ பதவி ஏற்றுக் கொண்டார். இதன் மூலம் சந்திரிகாவின் 11 ஆண்டு ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்தது.

### நடிகர்-சட்டத்தரணி


நடிகராக இருந்து அரசியலுக்கு வந்த ராஜபக்ஷ சட்டத்தரணி பட்டம் பெற்றார். வெற்றி பொற்றதாக அறிவிக்கப்பட்டதுடன் நிருபர்களுக்குப் பேட்டியளித்த ராஜபக்ஷ பிறந்தநாளில் வெற்றி கிடைத்திருப்பதில் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி தமிழர் பிரச்சினைக்கு அமைதியான முறையில் கௌரவமான தீர்வு காணப்படும் என்றும் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சந்திரிகாவின் தந்தை பண்டார நாயக்கவும் மகிந்த ராஜபக்ஷவின் தந்தை டி.ஏ. ராஜபக்ஷவும் தான் தொடங்கினார்கள். இருந்த போதிலும் பண்டாரநாயக்க குடும்பமே கட்சியை மொத்தமாக ஆக்கிரமித்தது.

பிற்காலத்தில் கட்சி, ஆட்சி இரண்டையும் மகிந்த ராஜ பக்ஷவின் குடும்பம் கைப்பற்றிக் கொண்டது.

ராஜபக்ஷவின் மனைவி பெயர் ஷிராந்தி. இவர் வனிதா என்ற தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறார். இவர்களுக்கு மூன்று மகன்கள். மூத்தமகன் நாமல், லண்டனில் சட்டம் படித்தவர்.



சிறு வயதில் தந்தையுடன் ராஜபக்ஷ சகோதரர்கள்.
1.சமல் ராஜபக்ஷ 2. மகிந்த ராஜபக்ஷ
3.கோத்தபாய ராஜபக்ஷ 4. பசில் ராஜபக்ஷ

(தொடரும்)

# வெளிநாடுகளில் பணத்தை பதுக்கிய இலங்கையர்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

**உலக நாடுகளில் பேணப்பட்டுவரும் இலங்கை நாட்டவர்களுக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நிதிப் புலனாய்வு பிரிவுக்கு அதிகாரமளிக்கும் வகையில் 2006ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி கொடுக்கல் -வாங்கல் அறிக்கையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது என்று அரசாங்கம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது வாசுதேவ நாணயக்கார எம்.பி. எழுப்பியிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரான நிரோசன் பெரேராவும் மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி கொடுக்கல்-வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் துய்தாக்கல் தடைச் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயஙகரவாத நிதியளிப்பு தடுப்பு சமவாய சட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிதி புலனாய்வு பிரிவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்று பிரதியமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அதேவேளை, வெளிநாட்டில் நிதிகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கடந்த காலங்களில் பரவலாக கூறப்பட்டு வந்த நிலையில், அவை பற்றிய தகவல்களை பெறுவதற்கு இராஜதந்திர ரீதியில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? என்று வாசுதேச நாணயக்கார வினா தொடுத்தார்.

இதன்போது பதிலளித்த பிரதி அமைச்சர் நிரோசன் பெரேரா, பனாமா அரசாங்கத்திடம் இது தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (இ-10)

## பீஜிங்கில் இருந்து கொழும்பிற்கான விமானசேவை அட்டவணை நீக்கம்

(கொழும்பு)

பீஜிங் நகரில் இருந்து கொழும்பு வரையான சீன வமான சேவை அட்டவணை அண்மையில் நீக்கப்பட்டுள்ளதாக ரொயிட்டர் ஊடகங்கம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வருடம் நவம்பர் முதலாம் திகதியில் இருந்து, கொழும்புக்கான மூன்று விமானங்களை வாரத்திற்கு ஒரு முறை பீஜிங்கில் இருந்து அனுப்புவதற்கு முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும் A 330 என்ற விமான சேவை ஜூன் மாதம் நிறுத்தப்பட்டதாகவும், அட்டவணை இந்த திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை Chengdu வில் இருந்து கொழும்பிற்



கான சீன விமான சேவைகள் ஒரு வாரத்திற்கு நான்கு முறை இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இலஞ்சம் வாங்கிய கான்ஸ்டபிள் கைது

(கொழும்பு)

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் பியகம பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினருக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவரை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்காக சந்தேக நபரிடம் இருந்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் பத்தாயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரியதாகவும், இதன்போது சந்தேக நபர் 5 ஆயிரம் ரூபாவை முற்பணமாக வழங்கியுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன் மிகுதிப்பணமான 5 ஆயிரம் ரூபாவை பியகம பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து பெறும் சந்தர்ப்பத்திலேயே குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 771

Search for people, places and things   Nagendram   Home

**லிங்கா ரூபன்**



ஒவ்வொரு கணவனும் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கும் போது தான் தெரிந்து கொள்கிறான் தான் தாலி கட்டியது ஒரு தெய்வத்துக்கு என்று.

**அச்சு**




எங்கம்மா
காசு கொடுத்து
செத்துப்போன
மீனை
வாங்கிட்டு
வந்திருக்கா..
பாவம்
ஏமாத்திட்
டானுங்க...

**தனு**

TEACHER

| | |
|---|---|
| TACT | - சாமர்த்தியம் |
| EDUCATION | - கல்வியறிவு |
| ABILITY | - திறமை |
| CHARACTER | - நன்நடத்தை |
| HEALTH | - ஆரோக்கியம் |
| ENTHUSIASM | - ஊக்கம் |
| REGULARITY | - ஒழுங்குமுறை |

**உஷாந்தன் நெய்மார்**




**சர்மி சர்மிளா**




**சந்திரன் சிந்து**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீதியை மறுக்கும் இலங்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 32ஆவது கூட்டத் தொடர், நீதியை எதிர்பார்த்த தமிழினத்திற்கு வழமை போன்றதொரு கூட்டத் தொடராகவே நடந்து முடிந்துள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஐ.நா. வெளிப்படுத்தியிருக்கும் அதிருப்தி என்பது தமிழ் மக்கள் தொடர்பில் இலங்கை அரசு முன்னெடுக்க தயங்கும் செயற்பாடுகளின் பெறுபேறே. இலங்கை அரசு, நீதி, ஜனநாயகம், சமத்துவம், வெளிப்படைதன்மை, பொறுப்புக்கூறுதல் முதலியவற்றில் தன்னைப் புதுப்பிக்க மறுக்கும் செயற்பாடே. தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் பலவற்றிலும் இலங்கையின் புதிய அரசு, பழைய அரசின் மனநிலையிலிருந்து விலக மறுத்துள்ளமையும் இங்கு புலப்படுகிறது.

ஈழத் தமிழ் மக்கள் சந்தித்த மாபெரும் இனப்படுகொலையை ஐ.நா. மனித உரிமைப் பேரவை இம்முறையும் நீதியாக அணுகவில்லை. வெறுமனே போர்க்குற்றம் என்றும் மனித உரிமை மீறல் என்றும் இப்பிரச்சினையை அணுகும்வரையில் இலங்கையின் செயற்பாடுகள் இப்படியே அமையப்போகின்றன. ஏற்கனவே ஒரு சர்வதேச விசாரணையை நடத்தி, அதில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பிலும் அவர்கள் அழிக்கப்பட்ட விதம் தொடர்பிலும் தகவல்களைப் பெற்ற ஐ.நா. அதன் உண்மையான கோரத்திலிருந்து இந்தப் பிரச்சினையை அணுகுவதில் விலகியுள்ளது. பாதிக்கப்பட்ட தமிழ மக்கள் தொடர்ந்தும் நீதி மறுக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கை அரசு குறித்து மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்ட பின்னர், அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட அந்த தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியது. தம்மால் அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு எந்தளவுக்கு நடை முறைப்படுத்தியது என்றால், அதற்கு ஏமாற்றம் தரக்கூடிய பதிலையே நடைமுறையில் காணமுடிந்தது. முக்கியமாக இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும், சித்திரவதைகளும் கைதுகளும் தொடர்வதாக 32 ஆவது கூட்டத் தொடரில் ஐ.நா. மனித உரிமை பேரவை ஆணையாளர் தன் வாய்மொழிமூல அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காணிகளை மீளளித்தல், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான திருத்தம், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களின் விடுதலை ஆகிய விடயங்களில் இலங்கை அரசு போதிய முன்னேற்றத்தை அடையவில்லை என்றும் ஆணையாளரின் ஒன்பது பக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கை அரசு அகற்றுவதாக கூறியபோதும் அதனை இதுவரையில் நீக்கவில்லை என்பதையும் அது தொடர்பில் அரசு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க மாட்டோம் என்றும்



அதனை வேறு பெயரில் திருத்தப் போகிறோம் என்றும் அரசு கூறினாலும் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் கைது செய்யப்படும் நிலை நிலவுகிறது.

போர்க்காலத்திற்கு பிந்தைய நீதி, அரசியல் சட்ட சீர்திருத்தம், பாதுகாப்புச் சீர்திருத்தம் என்பவற்றையும் மனித உரிமை பேரவை ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். சர்வதேச தரமான அரசியல் சட்டம் உருவாக்கப்படும் என்று இலங்கை அரசு கூறியதாகவும் அதனை நிறைவேற்றவில்லை என்றும் மனித உரிமை பேரவை ஆணையாளர் அறிக்கை தெரிவித்துள்ளது. ஆனால் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் அரசின் செயற்பாடு மந்தமடைந்துள்ளது. இனப்பிரச்சினைக்கு அடிப்படையான, ஏற்கனவே இருந்த அரசியல் அமைப்பினை திருத்தி உருவாக்கும் முயற்சியிலேயே இலங்கை அரசு ஆர்வம் காட்டுகிறது. அத்துடன் கருத்தறியும் அமர்வுகள் மூலம் வடக்கு-கிழக்கில் தமிழ மக்கள் முன்வைத்த எதிர்பார்ப்புக்கள் அதில் பலவும் கருத்தில் கொள்ளப்படாத நிலையில் உள்ளது.




இதேவேளை பாலியல் வன்முறைகள் தொடர்வதாகவும், இராணுவத்தினரின் கண்காணிப்பு மற்றும் தொந்தரவுகள் தொடர்வதாகவும் அவரது அறிக்கை குறிப்பிடுகிறது. இதற்கான அரச கட்டமைப்புக்களும் நிறுவன்பட்ட கலாசாரங்களும் அகற்றப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான மனப்போக்கை கொண்ட அரசியல் அமைப்பு மற்றும் பெரும்பான்மை மனப்போக்கு என்பன தொடர்ந்தும் பேணப்படும் விதத்திலேயே இலங்கையின் இராணுவக் கட்டமைப்பும், அரசியல் கட்டமைப்பும், புதிய அரசியல் சட்டமுனைப்புக்களும் காணப்படுகின்றன. இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான அடிப்படை புள்ளியை தொட மறுப்பதுவே இந்தச் செயலாகும்.

தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்திய இராணுவத்தினர் அவற்றை மீளளிப்பதில் போதிய செயற்பாடு காணாது என்று மனித உரிமை ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கை குறிப்பிடுகிறது. ஐ.நா. மனித உரிமை பேரவையை எதிர்கொள்வதற்காக, குறிப்பிட்டளவு காணிகளை இலங்கை அரசு விடுவித்தாலும இன்னொரு புறத்தில் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் செயற்பாடும் தொடர்கிறது. வலி. வடக்கில் காணிகளை விடுவித்தபடி முல்லைத்தீவில் அரசு காணிகளை அபகரிக்கிறது என்று வடக்கு மனித உரிமை அமைப்பு ஜெனீவாவில் தெரிவித்திருக்கிறது. இவ்வாறான அணுகு முறைகள் பழைய மன நிலையை தந்திரமாக பேணும் செயற்பாடே ஆகும்.

இதேவேளை கலப்பு விசாரணை ஒன்றை பரிந்துரைத்த ஐ.நா தீர்மானத்தை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய இலங்கை சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என்று கூறி வருகிறது. இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்த நிலைப்பாட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டதை அவர்கள் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விசாரணையை நிராகரித்து, உள்ளக விசாரணையை வலியுறுத்திய ஒரு நிலைப்பாட்டுக்கே புதிய அரசும் வந்திருக்கிறது. ஆனால் தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் அவர்கள் உள்ளக விசாரணையை நிராகரித்து வருகிறார்கள். காலம் காலமாக தமிழருக்கான நீதி மறுக்கப்பட்ட இலங்கையின் நீதித்துறையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஆனால் உள்ளக விசாரணை என்பதன் மூலம் குற்றவாளிகளை பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கவே இலங்கையின் புதிய அரசும் முனைகிறது. தமிழ் மக்கள் முழுமையான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வரும் நிலையில் கலப்பு விசாரணை ஒன்றுக்குகூட இலங்கை அரசு தயாரில்லை என்று கூறியிருப்பதும் இலங்கை அரசின் பழைய மனநிலையின் வெளிப்பாடே. இது பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பின் குரலுக்கு செவிசாய்க்க இலங்கை அரசு தயாரில்லை என்பதைத்தான் காட்டுகிறது.



அத்துடன் பாதிப்பை ஏற்படுத்திய தரப்பினரின் நலன்களை கருத்தில் கொள்ளும் செயற்பாடு என்பது மீண்டும் மீண்டும் இன மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதாகவும் அதனை ஊக்குவிப்பதாகவுமே அமைகிறது.

போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் மீண்டும் தனது வாய்மொழி மூல அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் முள்ளிவாய்க்காலில் மாத்திரமின்றி வரலாறு முழுவதும் நடந்தது இனப்படுகொலை என்றும் அதனை தடுத்து நிறுத்தும் விதமாக சர்வதேச விசாரணை ஒன்றே தேவை என்றும் வலியுறுத்தி வரும் தமிழ் மக்களின் குரலுக்கு ஐ.நா எப்படிச் செவிசாய்க்கவில்லையோ அப்படியே ஐ.நாவின் கலப்பு விசாரணைக்கு இலங்கையும் செவிசாய்க்காமல் இருக்கிறது.

இலங்கையில் நிலவும் தீவிர இனப்பிரச்சினை தொடர்பிலும் இலங்கையில் நடந்த இனப்படுகொலை தொடர்பிலும் வெளிப்படையான, உண்மையான, அவசியமான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதில் இலங்கையும் ஐ.நாவும் ஒரு அணுகுமுறையையே கொணடிருக்கின்றன. இதன் காரணமாகவே காணிகளை விடுவித்தல், இராணுவக் குறைப்பு, புதிய அரசியல் சட்டம், நீதி விசாரணை, பயங்கரவாதத் தடைச்சட்டம், காணாமல் போனோர் விவகாரம் என்று இனப்பிரச்சினையின் அடிப்படை விடயங்கள் அனைத்தையும் பழைய மனநிலை மாறாத விதத்தில், திருத்தப்படாத விதத்தில் இலங்கை அரசு கையாள்கிறது. இது, இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அழிக்கப்படவும், உரிமை மறுக்கப்படவும் தொடர்ந்தும் இடமளிக்கும் என்பதே கவலைக்குரிய விடயம்.

போர் நடந்து ஏழு வருடங்கள். ஆட்சி மாறி இரண்டு வருடங்கள். இந்நிலையில் தன்னை சர்வதேச நெருக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சிறு சிறு திருத்தங்களையும் சிறு சிறு பேச்சுக்களையும் இலங்கை அரசு நிகழ்த்தியிருந்தாலும் உக்கிரமாயிருக்கும் தமிழர் பிரச்சினைகள் இன்னும் நெருக்கடிக்குள் தள்ளியபடியே இருக்கின்றன. பிரச்சினைகளுக்கான மூல வேர்களை கண்டறிவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதிலும் தான் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கும் வழிகள் திறக்கப்படும். ஆனால் நீதியை மறுத்து பிரச்சினையின் வேர்களை பாதுகாக்கும் செயலே அனைத்து மட்டத்திலும் மறைந்திருக்கிறது. இது இலங்கை தன்னை புதுப்பிக்க மறுக்கும் செயல். தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கி அவர்களின் தேசத்தை அங்கீகரித்து தன்னை புதுப்பிக்காத வகையிலேயே இலங்கைப் போக்கு காணப்படுகிறது.

தீபச்செல்வன்

# தமிழர் வாழ்வு மீட்சி பெறவில்லை

## மாகாண சபை உறுப்பினர் விந்தன் விசனம்

(யாழ்ப்பாணம்)

**மகிந்த ஆட்சியில் மண்ணோடு சங்கமமாகிய தமிழர் வாழ்வு மைத்திரி ஆட்சியிலும் மீட்சி பெறவில்லை என வட மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.**



யாழ்மாவட்டத்தில் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி மூலம் உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மகிந்த அரசில் எங்கள் வாழ்வு மண்ணாகிப் போனது! மைத்திரியின் நல்லாட்சி அரசிலும் எம் இனம் நலிவுற்றே இருக்கின்றது. போரிலே அழிவுண்ட எம் தேசம் மணணிலே சங்கமமாகிய எம் வாழ்வு இத்தனைக்கும் மத்தியிலும் மீண்டும் எம் இனம் தலைதூக்க வேண்டும் என்றால் எமக்குள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை தீர்த்து வைக்க நல்லாட்சி அரசு முன்வர வேண்டும்.

நாட்டில் ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் தங்கள் வாக்குச் சீட்டினை ஆயுதமாக மாற்றி தக்க பதிலடி கொடுத்தார்கள். சிறுபான்மை இன வாக்குகளால் ஆட்சி மாறியது. பின்பு தேசிய அரசாக, நல்லாட்சி அரசாக அது மாறியது. ஆட்சியில் அமர்ந்த அரசின் காட்சி மாறும் என தமிழர்கள் முழுமையாக நம்பினர். ஆனால் ஆட்சி மாறி வருடங்கள் கழிகின்றனவே தவிர, எம்மவர் வாழ்வில் அமைதி, சமாதானம், சந்தோசம் இன்னும் பிறக்க வில்லை. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் இன்னும் நலன்புரி நிலையம், நண்பர்கள் வீடு, வாடகை வீடு, உறவினர் வீடு என தஞ்சம் புகுந்துள்ளனர்.

வலி. வடக்கிலே சில 100 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்கிறார்கள். வன்னியிலோ பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்து அத்துமீறல் குடியேற்றங்களை அரங்கேற்றி வருகின்றார்கள்.

தமிழர் தேசத்தில் புத்தரின் பெயரால் சிலைகள் ஆங்காங்கே முளைக்கின்றன. முப்பது வருடப் போரில் அடித்து நொறுக்கப்பட்ட இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் பல நூறு இன்னும் அழிந்தே கிடக்கின்றன. அவை இன்னும் கட்டி யெழுப்பப்படவில்லை. காணாமற்போனோர் கண்டறியப் படவில்லை. சிறையில் வாடுவோருக்கு பொது மன்னிப்பு இல்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு முழுமை யான நவாரண உதவியில்லை. நிரந்தர அரசியல் தீர்வு இல்லை. இத்தனைக்கும் மத்தியில் சவால்களை எதிர்கொண்டு எம் இனம் மீண்டெழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# 10மாதக்குழந்தையாக தவழும் சமகால அரசு

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

அரசாங்கம் இன்னும் பத்து மாத குழந்தை என்றும், அதனிடம் பெரிய அளவில் எதையும் எதிர்பார்க்க முடியாது எனவும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வரி அதிகரிப்பானது எங்கள் அரசாங்கத்தால் திட்டமிட்டு செய்த ஒன்றல்ல. இந்த நாட்டை தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கும் போது இலங்கையானது எதியோப்பியா, உகண்டா போன்று இருந்ததாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரி அதிகரிப்பானது தற்காலிகமானது என்றும் அவர் தெரிவித்துள்ளதுடன், எமது அரசாங்கத்தால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதி தடையை அகற்றி தற்போது மீன் ஏற்றுமதி செய்கிறோம். அதன்மூலம் எமது நாட்டிற்கு அதிகளவு வருமானம்கிடைக்கிறது. ஜீஎஸ்.பி. வரிச்சலுகை மூலம் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இதன் நன்மைகள் எதிர்காலத்தில் பொதுமக்களைச் சென்றடையும் என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் குழந்தையான இந்த அரசாங்கத்திற்கு 2,3, 4,5 வயதுகள் செல்லும் வரை பொறுத்திருக்க வேண்டும். இந்த குழந்தையிடம் உடனடியாக பெரிய செயற்பாடுகளை எதிர்பார்க்க வேண்டாம் என்றும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இன்று உள்ள அமைச்சர்கள் அனைவரும் தியாக மனப்பான்மையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றார்கள். அவ்வாறே தானும் செயற்படுவதாக குறிப்பிட்ட அவர் கடந்த காலத்தில் திருடர்கள் கொள்ளையடித்த பொருட்களை அவர்களிடம் இருந்து பெற்று அதனை பொதுமக்களிடம் கையளிக்கும் செயற்பாடானது கண்டிப்பாக நடக்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (இ-10)

# நான் 13நாட்கள் சிறைவாசம் அனுபவித்தமை சந்தோசமே

## உதய கம்மன்பில கூறுகிறார்

அரசாங்கத்தின் ஹோட்டலான சிறையில் 13 நாட்கள் ஓய்வு எடுத்தமை தொடர்பில் தான் சந்தோசம் அடைவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன் அநேகர் கூறுகின்றனர் வயிறு குறைந்து வட்டதாகவும், அழகாகிவிட்டதாகவும், விடுமுறையை சந்தோசமாக கழித்து விட்டு வந்துள்ளதாகவும் தெரிவிப்பதாக கம்மன்பில கூறினார்.

சிறையில் தனக்கு ஒரு சதம்கூட செலவு ஏற்படவில்லை என்றும், சாப்பாடு, போக்குவரத்து அதைவிட பாதுகாப்பு கிடைத்ததாகவும் தெரிவித்துள்ள அவர் தன்னை மிகவும் சிறந்த முறையில் 2 வாரங்களாக பார்த்துக் கொண்டமைக்கு அரசாங்கத்திற்கு புண்ணியம் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறையில் கழித்த 13 நாட்களிலும் வாழ்க்கைக்கு பதிய அர்த்தம் கிடைத்ததாகவும், 99 வீதமான போதை மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை சந்திக்க கிடைத்ததாகவும், 57 விடுதலைப் புலி உறுப்பினர்களை சந்தித்ததாகவும் குறிப்பிட்டுள்ள அவர் கோத்தபாயவை குண்டு வைத்து கொலை செய்ய முயற்சித்த நபர்களையும், கூலிக்கு கொலை செய்யும் நபர்களையும் சிறையில் சந்திக்க கிடைத்ததாகவும், அவர்கள் உலகம் மற்றும் சமூகத்தை எவ்வகையான கண்ணோட்டத்தில் பார்க்கின்றார்கள் என்ற படிப்பினையும் அவர்கள் மூலம் கறறுக்கொண்டதாக உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்துடன் அர்ஜுன் மகேந்திரனை வீட்டுக்கு அனுப்பியது கூட்டு எதிர்கட்சியின் வெற்றி என்றும், தற்போதைய ஆளுநரின் கல்வி, அனுபவம், தகுதி தொடர்பில் அனைவரது கவனமும் திரும்பியுள்ள நிலையில், பதவி வழங்கப்படும் போது இயலுமை, நேர்மை மற்றும் விசுவாசம் ஆகியவற்றை முதலில் பார்க்க வேண்டும். திறன் தொடர்பில் எவ்வித பிரச்சினையும் புதிய ஆளுநரிடம் இல்லை. ஆனால் நேர்மை மற்றும் விசுவாசம் தொடர்பில தமக்கு சந்தேகம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் புதிய ஆளுநருக்கு எதிராக நேரடியாக குற்றம் சுமத்தப்படவில்லை. ஆயினும், அவர் தவறான நேரத்தில் தவறான இடத்தில் இருநதுள்ளார். எனவே இவரது விசுவாசம் தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது. காரணம் இவருக் கும், ராஜரத்தினத் துக்குமான தொடர்பு. இவர் ராஜரத்தினத்தின் பணியாள் என் றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

# செய்தித்துளிகள்

## பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த பெற்றோர் கைது!

மதுகம மீகாதென்ன பாடசாலைக்குள் அத்துமீறி உள்நுழைந்த 10 மாணவர்களின் பெற்றோர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பெற்றோர்களின் பிள்ளைகளான மாணவர்களை பாடசாலையின் முதலாம் தரத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரியே பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும அண்மையில் உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## களுபோவில வைத்தியசாலையில் டெங்கால் தாதியொருவர் மரணம்

களுபோவில வைத்தியசாலையில் அலுவலக பணியாளர்கள் 30 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இதில் தாதி ஒருவர் நேற்று முன்தினம் மாலை பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. களுபோவில வைத்தியசாலையில் 7ஆம் இலக்க வாட்டில் பணியாற்றி வந்த 33 வயதான தாதி ஒருவரே டெங்கு நோயினால் உயிரிழந்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு அணிகள் விண்ணப்பிக்க முடியும்

யாழ்.அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது. இந்த சுற்றுப்போட்டியில் பங்கு கொள்ள விரும்புகின்ற யாழ். மாவட்டத்திற்குட்பட்ட அணிகள் தங்கள் பதிவுகளை - க. ஜெயதர்சன் - 077 460 4349, க. றுபேஷ் - 076 530 1742 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அல்வாய் ம்னோகரா விளையாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை

யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.குகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் வே.ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# வளமான எதிர்காலத்தை நோக்கி இலங்கை அரசாங்கம் பயணிக்கிறது



ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மீட்கவும், வெளிப்படையான ஆட்சிமுறையை உருவாக்கவும், ஊழலை ஒழிப்பதற்குமான ஆணையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் மக்கள் அளித்தனர். பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையின் கீழ் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி முறைக்கு உறுதி பகரும் பாராளுமன்ற கூட்டணியை அவர்கள் தெரிவு செய்த போது, இந்த சீர்பட்ட நிகழ்ச்சி நிரலை இலங்கை மக்கள் மீண்டுமொருமுறை உறுதி செய்தனர்.

இலங்கை அரசாங்கமானது உள்ளடக்கமான, சாதாரணமான, சமாதானமான மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கின்றது. இந்த நேர்நிலையான தொலைநோக்குப் பார்வையினை சர்வதேச சமூகம் அரவணைத்துக் கொண்டு, இலங்கை மக்களுக்கு மகத்தான ஆதரவுகளை வழங்கி குறிப்பிடத்தக்களவு உதவியினை விஸ்தரித்துள்ளது.

இன்று இலங்கையுடனான அமெரிக்க உறவுகள் வரலாற்றிலேயே மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

தேவையான அரசியலமைப்புத் திருத்தம், தேசிய நல்லிணக்கம், மற்றும் ஐக்கிய நாடுகளிற்கான தமது வாக்குறுதிகளைப் பூர்த்தி செய்தல் என்பவற்றை நோக்கி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செல்கின்ற வேளையில் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பல், நல்லாட்சியை முன்னிறுத்தல், மற்றும் இலங்கையர்கள் அனைவரும் சமமான உரிமைகள், இன அல்லது பூர்வீகம் குறித்த பாரபட்சமின்றி மோதலுக்குப் பின்னரான அபிவிருத்தியின், வளத்தின் முழுமையான பயன்களை அனுபவிப்பதனை உறுதி செய்வதற்கான முயற்சிகள் சார்ந்த ஆதரவில் அமெரிக்கா தொடர்ந்தும் உறுதியாக உள்ளது.

60வருடங்களாக இலங்கைக்கு அபிவிருத்தி மற்றும் மனிதநேய உதவிகளை அமெரிக்கா வழங்கி வருகின்றது. விவசாயம் , தொழிற்றுறை அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், சக்தி மற்றும் இயற்கை வளங்கள், நல்லாட்சிமுறை , மனிதநேய நடவடிக்கைகள் என அனைத்துத் துறைகளிலும் நாம் குறிப்பிடத்தக்க அளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த வருடத்திற்கான அமெரிக்க உதவியானது 40 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும். அடுத்து வரும் வருடங்களிலும் இதற்கு இணையான தொகையை நாம் கோரியுள்ளோம். நல்லாட்சிக்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் விளைவாக, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருளாதாரத் திருத்தங்களுக்கு வசதியளிக்கும் மேலதிக உதவியில் மில்லியன் கணக்கான டொலர்களைக் கொண்டு வரும் வாய்ப்பு கொண்ட தொடக்க நிலை நிகழ்ச்சிக்கு மில்லேனியம் சாலஞ்ஜ் கோப்பரேஷன் இலங்கையை மதிப்பீடு செய்கின்றது.

**இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 177ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கையின் பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் எமது முயற்சிகள் நிதி உதவிகளுடன் மாத்திரம் மட்டுப்பட்டதல்ல. இந்த வருடத்தில் இதுவரை விரிவடைவதற்கு அதிக வாய்ப்புக் கொண்ட இரண்டு துறைகளான சுற்றுலாத்துறை மற்றும் சக்தி தொழிற்றுறையில் சிறந்த பயிற்சிகள் தொடர்பில் 50 வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை அமெரிக்கா பயிற்றுவித்துள்ளது.

உலக வர்த்தக நிலையை இசைவு மற்றும் சம்பந்தப்பட்ட வர்த்தக விடயங்கள் தொடர்பில் இலங்கைச் சுங்கம் மற்றும் வேறு நிறுவனங்களைச் சேர்ந்த நூறிற்கும் மேற்பட்ட அதிகாரிகள் பயிற்சி பெற்றுள்ளனர். பொது நிதி முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்க நிபுணத்துவத்தை ஊக்குவிக்கவும் நாம் பணியாற்றி வருகின்றோம்.

தொழில் முனைவு திறனை முன்னிறுத்துவதற்கு மற்றும் தொழில் வழங்குனர்களின் தேவைகளுக்குப் பொருந்தும் தொழில் திறன்களை கட்டியெழுப்புவதற்கு செயலமர்வுகளை நடத்துவதற்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை கொண்டு வருகின்றோம்.

இந்த தொலைநோக்கினை எட்டுவதற்கு இலங்கையானது பல தடைகளை கடக்க வேண்டும். வெளிநாட்டு முதலீட்டில் பற்றாக்குறை என்பது அவற்றில் மிகவும் சிக்கலானதாகும். இலங்கையின் பொருளாதாரத்தை நிலைமாற்றுவதற்கான வழிகாட்டிக்கான 10 கோட்பாடுகளில் இலங்கை வர்த்தக சம்மேளனம் வலியுறுத்தியுள்ளதைப் போன்று, "வெளிநாட்டில் இருந்து மூலதனத்தை கவர்வது தொடர்பில் இலங்கையின் துரித வளர்ச்சியானது முக்கியமாக தொக்கி நிற்கின்றது".

வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்வதற்கு இலங்கையான்து கடுமையான பிராந்திய போட்டியைக் கடக்க வேண்டும். இந்தோ-பசுபிக் பிராந்தியத்தைச் சேர்நத இந்தியா, பங்களாதேஷ், வியட்நாம், மியன்மார், கம்போடியா மற்றும் ஏனையோரும் இதே முதலீட்டாளர்களில் தங்கியுள்ளனர். முதலீட்டு டொலர்களை வெல்வதற்கு, வரி குறியீடுகள் மற்றும் வரிச்சலுகைகள் முதல் கொள்வனவு மற்றும் ஊழலை தடுப்பது வரை பொருளாதாரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தெளிவான மற்றும் சீரான கொள்கைகளை உருவாக்குவதன மூலம் இலங்கை போடடியை ஏற்படுத்த வேணடும்.

உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான கவர்ச்சியான சூழல் ஒன்றிற்கு தெளிவான, சீரான கொள்கைகளே மைலகற்களாகும். தெளிவான மற்றும் சீரான கொள்கையானது களத்தினை சமப்படுத்துவதுடன், வெளிப்படைத்தன்மையை உருவாக்கி, எதிர்வுகூறலை வழங்கும். இவையே முதலீட்டாளர்கள் எதிர்பார்ப்பதாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## 200 சிவாஜிகணேசன் அமெரிக்காவில் மார்லன் பிராண்டோவை சந்திப்பு

...உண்மையில் சிவாஜிக்கு ஒரு திருஷ்டிப் பாரிகாரம் ஶ்ரீவள்ளி. அமெரிக்க ஜனாதிபதியாக கென்னடி இருந்தபோது (1962 இல்) அமெரிக்க குழந்தைகளுக்கு யானைக்குட்டி ஒன்றை சிவாஜிகணேசன் பரிசாக வழங்கினார். அமெரிக்காவில் இந்தியானா பொலிஸ் என்ற இடத்தில் உள்ள பூங்காவுக்கு அந்த யானைக் குட்டி அனுப்பப்பட்டது.

இது பற்றி தகவல் தெரிந்ததும் சிவாஜிகணேசன் பற்றி விபரங்களை கென்னடி விசாரித்தார்.


சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் சிவாஜி பற்றி முழு விபரங்களையும் அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது.

அவற்றைப் படித்துப் பார்த்த கென்னடி கலாசாரப் பரிமாற்றத்திட்டத்தின்கீழ் சிவாஜிகணேசனை அமெரிக்க அரசின் விருந்தினராக அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்வதற்கு அழைக்குமாறு அதிகாரிகளுக்கு கட்டளையிட்டார். அதன்படி சிவாஜிக்கு அழைப்பு வந்தது.

இந்தியாவில் இருந்து நடிகர் ஒருவர் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டது அதுவே முதல் தடவை.

பலே பாண்டியா

அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்பாக பலே பாண்டியா படத்தை சிவாஜி முடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. 11 நாட்கள் அந்தப் படத்தில் தன்னுடைய வேலை முழுவதையும் சிவாஜி நடித்து முடித்தார்.



மார்லன் பிராண்டோவுடன்.

இப்படத்தில் சிவாஜி கணேசன் மூன்று வேடங்களிலும் எம்.ஆர்.ராதா இரு வேடங்களிலும் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மும்பை வழியாக உரோமாபுரிக்குச் சென்றார் சிவாஜி. பின்னர் பாரீஸ், லண்டன் ஆகிய நகரங்களில் சில நாட்கள் தங்கிவிட்டு அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகருக்குப்போய் சேர்ந்தார்.

2மாதம் சுற்றுப்பயணம்

அமெரிக்காவில் 2 மாத காலம் சிவாஜி சுற்றுப்பயணம் செய்தார். அவருக்கு அமெரிக்க அரசாங்கம் இரு கார்களையும் இரு செயலாளர்களையும் கொடுத்தது. ஒரு நாள் செலவுக்கு 160 டொலர் கொடுத்தது.

அமெரிக்க நடிகர்-நடிகைகளை சந்திப்பதற்கு ஸ்டுடியோக்களைப் பார்வையிடுவதற்கும் ஏற்பாடு செய்திருந்தது.

மார்லன் பிராண்டோவுடன் சந்திப்பு

உலகின் தலை சிறந்த நடிகர் என்ற புகழ் பெற்றிருந்தவர் மார்லண்ட பிராண்டோ. ஜீலியஸ் சீசர், ஆன் தி வாட்டர் பிரண்ட், சயோனரா, ஆகிய படங்களில் நடித்தவர். ஆன் தி வாட்டர் பிரண்ட் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக ஆஸ்கார் பரிசு பெற்றார்.

அறிஞர் அண்ணா ஒரு கூட்டத்தில் பேசும்போது சிவாஜிகணேசனைப்போல் இன்னொருவர் நடிப்பது சிரமம் ஒருவேளை மார்லன் பிராண்டோ முயற்சி செய்தால் சிவாஜிக்கு இணையாக நடிக்க கூடும் என்ற குறிப்பிட்டிருந்தார்.

அத்தகைய மார்லன் பிராண்டோ சிவாஜிகணேசனை வரவேற்று விருந்து கொடுத்தார்.

அப்போது அக்லி அமெரிக்கன் என்ற படத்தில் மார்லன் பிராண்டோ நடித்துக் கொண்டிருந்தார்.

சிவாஜியுடன் நீண்ட நேரம் மார்லண்ட் பிராண்டோ பேசிக் கொண்டிருந்தார். இந்திய சினிமா படங்களை பார்த்திருக்கிறீர்களா? என்று சிவாஜி கேட்டார்.

சத்தியஜித்ரே எடுத்த படத்தை பார்த்தேன். கண்ணீர் வந்து விட்டது என்றார் பிராண்டோ.

இந்திய கிராமங்களில் தெருக்களில் சாக்கடை ஒடுவது... அங்கு குழந்தைகள் விளையாடுவது... வறுமை காரணமாக நடக்கும் விபசாரம்... இத்தகைய காட்சிகள் வெறும் இயற்கையாக எடுக்கப்பட்டிருந்தன. இதனால் அக்காட்சிகள் என் மனதைத் தொட்டு கண்ணீர் வரச் செய்தன. சத்தியஜித்ரே அப்படத்தைச் சிறப்பாக எடுத்திருந்தார் என்று கூறிய மார்லன் பிராண்டோ இறுதியில் அது நல்ல பொழுது போக்கு படம் என்று குறிப்பிட்டார். (தொடரும்)

பாவியார் போற இடம் பள்ளமும் திட்டியும்...
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தளர்ந்தேன் எம்பிரான் எனைத் தாங்கிக் கொள்ளேன்

இனி முடியாது என்றொரு நிலையில் இறைவனை சிக்கனப் பிடித்தலை சரணாகதி என்று கூறுவர்.

இப்போது சரணாகதி அரசியல் என்றொரு சொற்பதமும் நம்மிடையே பரவியுள்ளது.

எதுவாயினும் சரணாகதி என்பது இறைவனை சிக்கனப் பிடித்தலோடு தொடர்புபட்டது.

துரியோதனனின் சபையில் திரௌபதியின் துகில் உரியப்படுகிறது. ஒரு கையால் தன் சேலையைப் பற்றிக் கொண்டு மறு கையை உயர்த்தி பரந்தாமா... என்று அவலக் குரல் இடுகிறாள்.

பரந்தாமனின் உதவி கிடைக்கவில்லை. காரணம் தன் ஒரு கையால் தன் சேலையைப் பற்றிப்பிடித்து விடுவேன் என்ற நம்பிக்கை திரௌபதியிடம் இருந்தது.

இனி தன்னால் முடியாது என்றவுடன் இரு கையையும் உயர்த்தி ஆபத்பாந்தவா காத்தருள் என்று திரௌபதி ஓலமிட, அக்கணமே பார்த்தீபன் அவளுக்கு உதவி புரிகிறான்.

ஆக, முடியாது என்ற நிலையில் முற்றுமுழுதாக இறைவனிடம் சரணாகதி அடைவதே இறுதி வழியாக பலருக்கு இருந்துள்ளது. இந்த நிலைமை ஆளுக்காள் வேறுபடலாம்.

தந்தை செல்வநாயகம் ஒரு கட்டத்தில் தமிழ் மக்களை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார்.

அக்காலத்து அரசியல் சூழ்நிலைகள்; தன்னோடு இருந்த அரசியல்வாதிகளின் போக்குகள் என்பவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து இனி முடியாது என்ற கட்டத்தில் கடவுள்தான் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என அவர் கூறினார். இது தந்தை செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனம்.

தந்தை செல்வநாயகத்துடன் இருந்தவர்கள் சிலர் இப்போதும் அரசியலில் இருக்கின்றனர். இவர்கள் அரசியலில் இருந்தால் நிலைமை என்னாகும் என்பதை அன்று உணர்ந்த தந்தை செல்வநாயகம், கடவுளிடம் தமிழ் மக்களை ஒப்படைத்துவிட்டு இவ்வுலகை விட்டு ஏகினார் என்று கூறுவதில் தவறேதும் இருக்க முடியாது.

ஆம்! தமிழ் மக்களின் இன்றைய நிலைமை அவ்வாறுதான் உள்ளது. தீயவை எதுவோ அவையெல்லாம் எங்கள் வடபுலத்தில் முதன்மை பெற்றுள்ளன.

மதுபான விற்பனையில் வடபுலத்துக்கு முதலிடம், தேவையற்ற தொலைபேசிப் பாவனையிலும் நாமே முதலிடத்தைப் பெற்றுள்ளோம். போதைப்பொருள் பாவனை, மாணவர்களின் குழப்பங்கள், பாடசாலையில் நடக்கும் விரசமான சம்பவங்கள் என்பவற்றிலும் முதலிடம் காத்திருக்கிறது. இதற்கு மேலாக கல்வி வீழ்ச்சியிலும் நமக்குத்தான் தனியிடம்.

என்ன செய்வது? இவை போர்க்கால சூழலில் இருந்து மீளும்போது வரக்கூடிய நிலைமைகள்தான் அவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்று யாரேனும் ஆறுதலும் அறிவுரையும் கூறினால் யார் கட்டுப்படுத்துவது? எங்கள் அரசியல் என்பது படுகுழியில் வீழ்ந்து பாவப்பழியில் உச்சமடைகிறது.

பதவியாசை அவர்களைப் பக்கம் பிரித்து பாதகம் செய்ய வைக்கிறது. யுத்தத்தின் கொடூரத்தால் உறவுகளை இழந்தவர்கள்; அங்கவீனப்பட்டவர்கள்; காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தாங்கமுடியாத வேதனையில் காலங்கழிக்கின்றனர்.

இதுதவிர ஏழ்மையின் கொடுமையும் குடும்பச் சுமையைத் தாங்கும் விதவைப் பெண்களின் ஏக்கமும் எங்கள் மண்ணில் தீராத் துன்பமாயிற்று.

இந்நிலையிலும் எங்கள் அரசியல்வாதிகள் திருந்தவில்லை எனும்போது தளர்ந்துபோய், இறைவா! என்னைத் தாங்கிக்கொள்ளேன் என்று இறைவனை இறைஞ்சுவதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்?

# கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை, நாவலடி பகுதியில் 40 கிலோ கிராமுக்கு அதிகமான கேரள கஞ்சாவுடன் கைதான சந்தேக நபரை, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் கே. அரியநாயகம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை யாழ் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபரின் நேரடி கண்காணிப்பின் கீழ் விசேட குற்றத்தடுப்பு பொலிஸார், 40 கிலோ கிராம் கேரள கஞ்சாவை சந்தேக நபர் வீட்டில் மறைத்து வைதிருந்த போது கைது செய்திருந்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை பதில் நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய போது வழக்கினை விசாரித்த நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-11)

# 17 இந்திய மீனவர்களுக்கு 20-ம் திகதி வரை மறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றபதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம்மாலை பருத்தித்துறை கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்டத்தை சேர்ந்த 17 இந்திய மீனவர்களை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் பயணித்த இரண்டு படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளதுடன் 17 பேரும் கடற்படைக்காவலில் வைக்கப்பட்டு நேற்றையதினம் யாழ் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றையதினம் இவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது பதில் நீதவான் இந்திய மீனவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (செ-9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** டச்சு வீதி, மீசாலை, வாகையடி, மயிலங்காடு, குப்பிளான், பொன்னாலை, காரைநகர், காரைநகர் இராணுவ கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** புதூர், சிலாவத்தை, உடுப்புக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, கொக்கிளாய், கிளிநொச்சி நகரம், திருநகர், இரணைமடுவிலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்தியவங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், North Cargill's Agrifoods, 651ஆவது படைப்பிரிவு முகாம், 652ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவ பாசறை II, இராணுவ பாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம், மக்கள் வங்கி, கிளிநொச்சி மாவட்ட செயலகம் (கச்சேரி), கிளிநொச்சி லங்காசதோச, கார்கில்ஸ் பி.எல்.சி, கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களம், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிளளை ஐஸ் தொழிற் சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆதி விநாயகர் கோவில் பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** பள்ளமடுவிலிருந்து கணேசபுரம் வரை, வெள்ளாங்குளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# கிளிநொச்சியில் ஆத்மஞானம் பரப்பிய தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

20ஆம்நூற்றாண்டில்நம்மிடைய வாழ்ந்த ஞானச்செம்மல்வடிவேல் சுவாமிகள் உள உறுதியும் உடல் உறுதியும் கொண்ட இப்பெரியார் சென்ற இடமெல்லாம் சிவமணம் கமழும் ஈழத்தமிழ் மண்ணின் புதுக்குடியேற்றப் பிரதேசமான கிளிநொச்சியில் சைவம் தழைக்க 1950களில் ஆச்சிரமம் அமைத்த சமயசாதகர். கிளிநொச்சி மகா தேவா ஆச்சிரமஸ்தாபகரான சுவாமிகள் அப்பகுதிமக்களுக்குஆத்ம ஞானம் பரப்பிய ஓர் அறிவு ஞானச்சுடராக விளங்கினார்.

யாழ்ப்பாணத்தில் தெய்வீகப் பண்பு வாய்ந்த இணுவில் பதியில் பெருஞ்சித்தரான சற்றி யாசியார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புப் பெற்றவர் காசிநாதர் என்பவராவார். இவர் சின்னக்குட்டி என்ற நல்லாளுடன் இல்லறத்தில் இணைந்து இல்லறத்தை நல்லறமாக ஆற்றிவரும் வேளை இவர்களுக்கு அடுத்தடுத்து ஐந்து பெண் குழந்தைகள் அவதரித்தனர். இதனால் இவர்கள் தம் குலம் காக்க ஆண்மகன் இல்லையென மனம் வருந்தி பல விரதங்களை அனுஷ்டித்து வந்தனர். மனம் வருந்திய காசிநாதரின் உள்ளமறிந்த பெரியவர், அவரை நோக்கி "*கந்தரே கவலையை விடு, உனக்கொரு மகன் பிறப்பான், அவன் உலகுக்கே சொத்தாவான்*" என திருவாய் மலர்ந்தருளினார். இணுவைக் கந்தன் அருளும் பெரியாரின் வாக்கும் பலிதமாகி சின்னக்குட்டி அம்மையார் 24.05.1906 இல் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். இந்நற்செய் தியைப் பெரியாரிடம் சொல்வதற்கு கந்தர் சென்றார். இவரின் வரவைக் கண்ட பெரியார், கந்தர் நற்செய்தியைக் கூறுமுன்பே "*கந்தரே முருகன் வந்துவிட்டான், குழந்தைக்கு வடிவேல்எனபெயரிடு*" என உரைத்தார்.

யோகசுவாமிகளின் கட்டளையை ஏற்று கிளிநொச்சி சென்று தனது குருநாதர் பெயரினால் ஆச்சிரமம் அமைக்கச் சித்தங்கொண்டார். அவரிடம் பல அன்பர்களும் ஒன்றுகூடி சமய சாஸ்திரங்களுக்கு தெளிவுபெறத் தொடங்கி அவருக்குச் சீடராயினர். இவ்வகையில் த.நல்லதம்பி என்ற அன்பர் தனது காணியை மகாதேவா ஆச்சிரமம் அமைக்க அர்ப்பணித்தார். இவ்வகையில் கிளிநொச்சியில் ஜெயந்தி நகரில் 1952 ஆம் ஆண்டு தவக்குடில் அமைத்து ஆன்மீகப் பணியை ஆரம்பித்தார். கிளிநொச்சியில் மதமாற்றம் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை வடிவேல் சுவாமிகள் எல்லாப் பிரதேசங்களுக்கும் சென்று கல்விச்சாலைகளை அமைப்பதிலும் ஆலயங்களை அமைத்து புனருத்தாரணம் செய்யும் பணிகளிலும் ஈடுபட்டபோது



பல அன்பர்களும் சுவாமிக்குச் சீடராகி தமது ஞானக் கண்ணைப் பெற்றனர். சுவாமி அவர்களின் இனிய குரல், தெளிவான வார்த்தை, தமிழ் அறிவு ஆகியவை இணைந்த சமய கதாப்பிரசங்கங்களினால் பலரும் சமய விழிப் புணர்வு ஏற்பட்டு தமது சமய நெறியில் வாழும் தகைமை பெற்றனர். தான்தோன்றித்தனத்துடன் வாழ்ந்த இளைஞர்கள் பலர் சுவாமியின் தரிசனத்தால் பக்குவம் பெற்றனர். பகவத்கீதை, கைவல்ய நவநீதம், வைராக்கிய சதகம் போன்ற ஞான நூல்களைக் கற்று மண்ணில் மனிதராக வாழும் தகைமை பெற்றனர்.

சுவாமிகளின் ஆச்சிரமப் பணியில் பரமா னந்த வல்லி அம்மையாரின் அருட்பணி, சீர்களாக சுவாமிகளிடம் வருவோரின் தாகம், பசி தீர்த்து ஆச்சிரமப் பணி செவ்வனே நடை பெற வழிவகுத்தது. சுவாமிகளின் பணியி னால் ஆலயங்கள், கல்விச்சாலைகள் எழுச்சி பெற்றன. மாணவர்கள்நல்லொழுக்கம் உள்ளவர்களாகத் திகழ வழிவகுத்தது. இத்தகைய அற, ஆன்மீக சமயப்பணி ஆற்றிய வடிவேல் சுவாமிகள் 1990 ஆம் ஆண்டு ஆனித்திங் கள் 26 ஆம் திகதி ஆயிலிய திதியன்று மகா சமாதியடைந்தார்.

அவரது பணி அவரது தலைமாணாக்கரான ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவா சுவாமிகளால் தொடரப்படுகின்றது.

ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சமாதியடைந்து 26 ஆம் வருட நிறைவு நன் நாளாகிய இன்று அவர் பாதம் பணிந்து போற்றுவோமாக.

ஆ.சிவநாதன்
அதிபர்
யா/புற்றளை
மகா வித்தியாலயம்.

# றொஷான் சகல துறையிலும் அசத்தல் ரேவடி அணி அசத்தல் வெற்றி



அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் வி.கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் ரேவடியை எதிர்த்து நேதாஜி அணி மோதியது.

நேதாஜி 18 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களை பெற்றது.நேதாஜி சார்பில் ஜிவிந்தன் 24, நரேன் 14 ஓட்டங்கள். ரேவடி சார்பில் றொஷான்,பிரேம்ராஜ் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரேவடி அணி 17 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்கள் பெற்றது.ரேவடி சார்பில் றொஷான் 33,சஞ்சீவன் 18 ஓட்டங்கள். நேதாஜி சார்பில் பிரகாஸ் 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.ரேவடி அணி 5விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.(கு)

# சென்றல் வி.கழகம் நடத்தும் Battle of the Blues





Battle of the Blues கிரிக்கெட் சுற்றுத்தொடரை யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ்.நகரில் யாழ்ப்பாண துடுப்பாட்ட வரலாற்றில் முதல் முறையாக அறிமுகம் செய்யவுள்ளது.

இத்தொடரில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகமும் ஹாட்லியைற்ஸ் விளை யாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளன.

இத்தொடர் 3 ஒருநாள் போட்டியாகவும் ஒவ்வொரு போட்டியும் 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியாகவும் வர்ண ஆடை வெள்ளை பந்து கொண்ட போட்டியாகவும் நடைபெறும்.அத்துடன் ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த வீரருக்கான பரிசிலும் தொடரின் போட்டி நாயகனுக்கும் (MAN OF THE SERIES) பரிசிலும் தொடரை கைப்பற்றும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பரிசில்களாக வழங்கப்படவுள்ளன.மேற்கூறிய 3 போட்டிகளும் ஹாட்லிகல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி வடமராட்சி துடுப்பாட்ட வீரர்களுக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த துடுப்பாட்ட வீரர்களுக்கும் இடை யில் (BATTLE OF THE BLUES) நடைபெறும் போட்டியாகும்.

இரு அணிகளிலும் மிக சிறந்த வீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.அத்துடன் யாழ் நகரில் துடுப்பாட்டத்தின் தரத்தை உயர்த்துவதற்கும் இது ஓர் முக்கியமான போட்டியாகவுள்ளது.போட்டி நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது. (கு)

# முல்லை கல்வி வலயத்திற்குட்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி





முல்லைத்தீவு இரணைப்பாலை றோ.க மகா வித்தியாலயத்தின் வைர விழாவினை முன்னிட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 19 வயது பிரிவினருக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற 5 ஆவது போட்டியில் அளம்பில் றோ. க.ம.வி 1:0 என்ற கோல் கணக்கில் வித்தியானந்தா கல்லூரியினை வெற்றி கொண்டுள்ளது. (கு)


## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டிக்கு விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 6பேர் 8ஓவர்கள் கொண்ட போட்டியா னது ஊல்லாகம் மகா வித்தி யாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும்.விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 806 8249, 077 039 1487,077 284 3157 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (கு)

# J.P.L.வெற்றிக்கிண்ணம்-2016; சென்றலைட்ஸ் முதலாவது வெற்றி



J.P.L வெற்றிக்கிண்ணத்திற்காக UR பவுண்டேசன் 4வது வருடமாக நடத்திவரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றில் சென்றலைட்ஸ் அணி பற்றீசியன்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 19.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களை பெற்றது.சேர்ச்சில்-10,டானியல்-20,முரளி-10, நோபேட்-28 ஓட்டங்களை பெற்றனர்.களத்தடுப்பில் வதுஸன்-02,மயூரன்-02,கோகுலன்-03,கிருபா-02 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 12.3 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களை பெற்றனது.வதூசனன்-22, யூலியஸ்-24,யனோஸன்-34, நிரோஸன்-11ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் மொறீஸ்- 03, அஜித், நோபேட் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு பற்றீசியன்ஸ் அணி 1.5 புள்ளிகளையும் சென்றலைட்ஸ் அணி 4.53 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.(கு)

# விறுவிறுப்பான ஆட்டத்தில் தீருவில் அணி வெற்றி

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி ,பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் வி.கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் தீருவிரல எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது.

தீருவில் 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்கள் பெற்றது. தீருவில் சார்பில் M.மயூரன் 27 ஓட்டங்கள், இளங்கதிர் சார்பில் கனி 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இளங்கதிர் அணி 16 ஓவர்களில் சகல விக்கெட் டுகளையும் இழந்து 71 ஓட்டங்கள் பெற்றது.

இளங்கதிர் சார்பில் பிரசாந் 26 ஓட்டங்கள், தீருவில் சார்பில் M.மயூரன், B.மயூரன் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர். தீருவில் அணி 3ஓட்டங் களால் வெற்றி.(கு)

## துடுப்பாட்டத்திற்கு விண்ணப்பிக்குக

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் வைர விழாவினை முன்னிட்டு எதிர்வரும் சனி,ஞாயிறு தினங்களில் அணிக்கு 8 வீரர்கள் பங்குபற்றும் 06 பந்து பரிமாற்றங்களை கொண்ட யாழ். மாவட்ட ரீதியிலான துடுப்பாட்ட தொடரினை நடத்தவுள்ளது .பங்குபற்றவிரும்பும் கழகங்கள் 0750700534 தொடர்பு கொள்ளவும். பரிசில் பணமாக வழங்கப்படும். (கு)

# இன்றைய போட்டிகள்

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும் போட்டியில் ரேவடி விளையாட்டுக்கழத்தை எதிர்த்து தீருவில் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖

பருத்தித்துறை உதைபந்தாட்ட சுங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறும் போட்டியில் சென். ஜோசப் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனிஸ் விளை யாட்டுக்கழகம் மோதவுள்ளது.(கு)

## இராணுவம்...

ள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை கீரிமலை, ஒட்டகப்புலம், மற்றும் ஏனைய இடங்களிலும் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. வலிகாமம் வடக்கு வயாவிளான் பிரதேசம் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்ற போதிலும் இங்குள்ள ஒட்டகப்புலம் என்ற இடத்தில் படையினர் நிரந்தரமாக இராணுவ முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

நூற்றி ஐந்து குடும்பங்களுக்கு சொந்தமான மேற்படி 169 ஏக்கர் காணியை படையினர் சுவீகரிக்கும் நோக்கில் நிரந்தரமாக முட்கம்பி வேலிகளை அமைத்துள்ளதுடன் பாரிய வாயிற் தூண்களையும் நிறுவி வருகின்றனர்.

கடந்த 26 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த வசாவிளான், கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் பகுதியளவில் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒட்டகப்புலம் பகுதி முழுமையாக இராணுவத்தின் வசம் இருந்து வருகின்றது.

இங்கு நிலை கொண்டுள்ள குறித்த இரு இராணுவ முகாம்களும் வீதியின் இருபக்கத்திலும் காணப்படுகின்றன. வீதி மக்களின் பாவனைக்கு விடுபட்டுள்ளது. வசாவிளான் பகுதியில் பொதுமக்களின் பாவனைக்கு விடுபட்டிருந்தாலும் முழுமையாக விடுபடாமல் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. ஒட்டகப்புலத்தில் வீதிக்கு முன்புறமாக தற்காலிக வீடு ஒன்று அமைக்கப்பட்டு, தமது காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் சில குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன. இந்த இடத்திக்கு மிக அருகாமையில் நிலை கொண்டுள்ள 511 ஆவது படையணி மற்றும் 07 ஆவது விஜயபாகு படையணிகள் வழமை போன்று தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதிகரித்த இராணுவ நடமாட்டம் காரணமாக ஏற்கெனவே அங்கு தங்கியிருந்து தமது காணிகளை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட குடும்பம் ஒன்று நேற்றைய தினம் அங்கிருந்து வெளியேறியுள்ளது. வெளியேற்றத்திற்கான காரணம் குறித்து வினவிய போது, இராணுவத்தோடு அங்கிருப்பது அச்சத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மற்றும் சில குடும்பங்களும் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்கப்பட்டது.

விடுவித்த பகுதிகளில் மக்கள் மீள்குடியேறினால்தான் ஏனைய இடங்களையும் விடுவிக்குமாறு இராணுவத்திடம் கோர முடியும் எனவும், விடுவித்த பகுதிகளில் மக்கள் மீள்குடியேற தயங்கினால் ஏனைய இடங்கள் எதற்கு என இராணுவம் கேட்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்கெனவே கூறியுள்ள நிலையில், இராணுவம் இவ்வாறு இருந்தால் யார் தான் அங்கு மீள்குடியேறுவார்கள் என மீள்குடியேறிய மக்கள் கேட்கின்றனர்.

மேலும் இங்கு இராணுவம் நிலை கொண்டுள்ளதனால் வெளியே சொல்ல முடியாத பல பிரச்சினைகளை தாம் எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர்கள் வருத்தத்துடன் கூறுகின்றனர். (செ-4)

## ஜனாதிபதியாக...

திபதி மகிந்த ராஜபக்ஷவை அமரவைப்பதே எமது ஒரே இலிக்காகும் என்றும் கூறினார்.

ஒன்றிணைந்த எமது பயணத்தில் பசில் ராஜபக்ஷவையும் இணைத்து கொண்டே செயற்படுகின்றோம். எனவே, ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்குள் குழப்பங்கள், பிரிவினைகள் நிகழ்வதாக இனி ஒருவராலும் வதந்திகளை பரப்ப முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களில் மிகவும் பழமையானவன் நான். கடந்த 35 வருடங்களாக அக்கட்சியின் அமைப்பாளராக பதவி வகித்து வருகின்றேன். முன்னாள் பிரதமர் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் அகலவத்தைக்கு அமைப்பாளராக 1981 ஆம் ஆண்டு நான் நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து இன்று வரை சு.கவில் அங்கம்வகித்து வருகின்றேன்.

கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர் என்ற முறையில் கட்சியின் அடுத்த தலைவராக நானே செயற்படுவேன். ஆனால், நான் ஜனாதிபதியாக வருவேன் என்றோ அல்லது பிரதமராக போட்டியிடுவேன் என்றோ கூறப்போவதில்லை. ஏனெனில், அந்த இடத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீளவும் கொண்டு வரவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

"சுதந்திரக் கட்சி என்ற ஒன்று தற்போது இல்லை. ஏனெனில் சு.கவிலுள்ள உறுப்பினர்களில் பலர், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் உள்ள 51 உறுப்பினர்களும் வேறுபட்டு நிற்கவில்லை. ஒன்றிணைந்தே செயற்படுகின்றோம்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலிருந்து ஏழுபேரை எடுக்கப்போவதாக அரசாங்கம் சூளுரைத்தது. முடிந்தால் பிரித்துக்காட்டு மாறு சவால் விட்டோம். ஆனால், ஒருவரைக் கூட அரசாங்கத்தினால் பிரித்தெடுக்க முடியவில்லை. அதன் பின்னரே பசில் ராஜபக்ஷவினால் கட்சி இரண்டாக பிளவுபடும் எனக் கூறினர்.

இந்தப் பயணத்தில் ஒற்றுமையாக செயற்பட்டால் மட்டுமே வெற்றியை அடைய முடியும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதற்கமைவாக பசிலையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

"எம்மை பொறுத்த வரையில், ஜனாதிபதி இருக்கையில் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அமர வைப்பதே எமது இலக்கு என அவர் மேலும் கூறினார். (செ-11)

# திருகோணமலை-மதவாச்சி இடையே புகையிரதப் பாதை அமைக்கும் திட்டம்

## இந்தியா ஆர்வம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து மதவாச்சிக்கு புதிய புகையிரத வழித்தடம் ஒன்றை உருவாக்குவதில், இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதாக, பிரிஜ ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின் அனைத்துலக வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம நேற்றுமுன்தினம் இலங்கையின் புகையிரத வலையமைப்பை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தியாவின் தொடருந்து துறை இணை அமைச்சர் மனோஜ் சின்ஹாவுடன் நடத்திய பேச்சுக்களின் போது, இலங்கையின் புகையிரத பாதைகளின் சமிக்ஞை மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் இந்திய வெளிவிவகார அமைச்சு மற்றும் புகையிரத துறை மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, 318 மில்லியன் டொலர் பெறுமதியான புகையிரத கடன்திட்டம் ஒன்றை அறிவித்திருந்தார்.

இந்த கடன்திட்டத்தை, ஆறு டீசல் அலகுகளையும், ஒவ்வொன்றும் இரண்டு கார்களை உள்ளடக்கிய 12 பெட்டிகள், 160 பயணிகள் பெட்டிகள், 160 கி.மீ புகையிரத பாதை புனரமைப்பு என்பனவற்றுக்குப் பயன்படுத்த இலங்கை திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, 300 மில்லியன் டொலர் செலவில், திருகோணமலை- மதவாச்சி இடையே புதிய புகையிரத வழித்தடம் ஒன்றை உருவாக்க இந்தியா விருப்பம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களின் போது ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் இலங்கையில் பல்வேறு புகையிரத திட்டங்களுக்காக இந்தியா ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான கடனுதவியை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# விடுவிக்கப்பட்ட வீட்டில் குடியமர இராணுவம் தடை போடுகிறது

## விதவைப் பெண்கள் கவலை

கிளிநொச்சி உதயநகரில் 2010ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட வீட்டினுள் பதுங்கு குழிஇருப்பதனைக் காரணம் காட்டி இன்றுவரை எம்மைக் குடியமர இராணுவம் தடைபோடுவதாக காணி உரிமையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் காணி உரிமையாளரான 3 பிள்ளைகளின் தாயாரான திருமதி திரேஸ் தனேஸ்குமார் கூறுகையில்,

உதயநகர் மேற்கில் வசிக்கும் நான் இறுதி யுத்தத்தில் கணவரை இழந்து 3 பிள்ளைகளுடன் வாழ்வாதாரத்திற்காக சந்தையில் கடை நடத்தியே வாழ்ந்து வருகின்றேன்.

இந்த நிலையில் எனது பூர்வீக காணியில் இருந்த வீட்டினில் முன்னர் விடுதலைப்புலிகளின் நிறுவனம் ஒன்று இயங்கியது. இதன் போது அவர்கள் ஓர் பதுங்கு குழியினை அமைத்திருந்தனர்.

மீள் குடியமர்வின்போது 2010ம் ஆண்டு எனது வீட்டில் குடியிருந்த வேளையில் வீட்டிற்கு வந்த இராணுவத்தினர் பதுங்கு குழியினை அழிக்க வேண்டும் அதுவரை இங்கு குடியிருக்க வேண்டாம் எனத் தெரிவித்தனர.

அதன் பிரகாரம் நான் மீண்டும் இடம்பெயர்ந்து தாயாரின் வீட்டில் சிரமத்தின் மத்தியில் 6 ஆண்டுகளாக வாழ்கின்றேன்.

குறித்த பதுங்கு குழியினை உடைத்து என்னை குடியமர அனுமதிக்குமாறு கோரி இராணுவத் தலைமையகம் , மனித உரிமை ஆணைக்குழு அனைத்திலும் முறையிட்டேன்.

காலம் கடத்தப்படுகின்றதே அன்றி இன்று வரை எந்த தீர்வும் இல்லை. இதனால். நானும் பிள்ளைகளும் மன உளைச்சலுடனேயே வாழ்கின்றோம்.

தற்போது இதனை கூறி அடிக்கடி வரும் இராணுவத்தினர் ஏதாவது காரணம் கூறுகின்றனரே தவிர பதுங்கு குழியினை இன்று வரை அழிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

இது தொடர்பில் கடந்த மாதம் வந்த இராணுவத்தினர் தாம் விரைவில் பதுங்கு குழியினை அழிக்கவுள்ளதாகவும் அதன்போது வீடும் இணைந்தே அழிக்கப்படும் எனத் தெரிவிக்கின்றனர்.

3 பிள்ளைகளுடன் கணவர் இன்றி , இருப்பிடமும் இல்லாமல் வாழும் எனது வீட்டையும் அழித்து வெறும் கற் குவியலை வழங்கினால் நான் எவ்வாறு வாழ்வது என கோரி நிற்கின்றார்.

இது குறித்து கரைச்சிப் பிரதேச செயலாளர் நாகேஸ்வரன் கருத்துரைக்கையில்,

அப்பிரதேசங்கள் முழுமையாக மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்டு விட்டது. இருப்பினும் குறித்த வீடு தொடர்பில் எனது கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது .

இது தொடர்பில் இராணுவத்தினருடன் பேசியபோது அவர்கள் இதனை அகற்றுவதற்கு பெரும் தொகைப்பணம் தேவைப்படுவத னால் பிரதேச செயலக ஒதுக்கீட்டில் வழங்க முடியுமா எனக் கோரினர்.

அவ்வாறான செயல்களிற்கு பிரதேச செயலக ஒதுக்கீட்டில் இடமில்லை என்பதனைச் சுட்டிக்காட்டினேன்.

தாம் அந்தப் பணியை மேற்கொள்வதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். இருப்பினும் இதுவரை அப் பணி இடம் பெறவில்லை என்றார். (செ-11)

## வெளிநாடுகளிலிருந்து...

எனினும் வெளிநாடுகளில் இருந்து சாட்சியங்களை வழங்கும் கோரிக்கைக்கு அமைய இந்த சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி இலங்கையின் நீதிமன்றம் ஒன்றுக்கு காணொலி ஊடகம் ஒன்றின் மூலம் வெளிநாட்டில் உள்ள ஒருவர் சாட்சியத்தை வழங்க முடியும்.

எனினும் இந்த சாட்சியங்கள் பக்கசார்பாக இருக்கக்கூடாது என்பதற்காக சாட்சியமளிப்பவர் அந்த நாட்டிலுள்ள இலங்கையின் தூதரகம் அல்லது உயர்ஸ்தானிகரகம் ஊடாகவே தமது சாட்சியங்களை வழங்க முடியும்.

இதற்கான யோசனையை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த நிலையில் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (செ-11)

## வெட்டுக்காயத்துடன்...

பகுதியைச் சேர்ந்த 65 வயது மதிக்கத்தக்க அறுக்காஞ்சி ராசன் என்ற குடும்பஸ்தர் என உறவினர்களால் அடையாளம் காண்பிக்கப்பட்டுள்ளது.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

## அமைச்சரவை...

சேனவுக்கும் பஸ் உரிமையாளர் சங்கங்களுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டண மாற்றம் தொடர்பில், நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவிடம், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகளுக்கும் தமது கருத்தினை முன்வைப்பதற்கான வாய்பினை பெற்றுத்தருவதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

அந்த கருத்துக்களுடன், கிடைக்கப்பெற்றுள்ள ஏனைய கருத்துக்கள் முன்மொழிவுகள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு அக்குழுவினால் முன்மொழியப்படுகின்ற ஆலோசனைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்படி பஸ் கட்டண மாற்றங்கள் தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்படுகின்ற முடிவுகளை போக்குவரத்து அமைச்சர் வெளியிடுவார்.

அத்தோடு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினாலோ அல்லது ஏனைய மாகாண, வீதி மற்றும் மக்கள் போக்குவரத்து அதிகார சபைகளினாலோ மறு அறிவித்தல்வரை தனியார் பஸ்களுக்கான புதிய போக்குவரத்து உரிமைப்பத்திரம் வழங்கப்பட மாட்டாதெனவும் இக்கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மாகாணங்களின் போக்குவரத்து அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர். (செ-11)

## குற்றத்தை...

பான ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம கொத்தணிக் குண்டுகள் தொடர்பாக விடுத்த அறிக்கை தொடர்பில் அமைச்சர் கண்டனம் வெளியிட்டார்.

பரணகம வெளியிட்ட இவ்வாறான அறிக்கை நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு உதவப்போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இராணுவம் 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் கொத்தணிக்குண்டுகளை போரின்போது பயன்படுத்தியிருந்தால் அது சட்டவிரோதமான நடவடிக்கையாக கருதப்படாது என மக்ஸ் வெல் பரணகம தெரிவித்த கருத்து தொடர்பிலேயே மங்கள சமரவீரவின் கண்டனம் வெளியிடப்பட்டது.

இதேவேளை, இலங்கையை பொறுத்த வரையில், ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இல்லையென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.(செ-11)

## தாய்ப்பால்...

குழந்தைக்கு தாயாரும் பால் கொடுத்துவிட்டு குழந்தையை வளர்த்திவிட்டுள்ளார். பின்னர் காலை குழந்தையை தூக்கும் போது குழந்தை அசைவற்று காணப்பட்டுள்ளது.

இதனால் அச்சமடைந்த தாயார் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு குழந்தையை எடுத்து சென்றுள்ளார். எனினும் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்களால் கூறப்பட்டது. இறப்புக்கான காரணம் தாய்ப்பால் புரையேறியதே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி என்.பிரேம்குமார் மேற்கொண்டார். மேலும் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டும் போது அவதானமாக இருக்குமாறும், தாய்ப்பால் ஊட்டியவுடன் குழந்தையை சிறிது நேரம் கைகளிலேயே வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-4)

## முன்னாள்...

க்கை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த கேதீஸ்வரனும் அவரது மனைவியான வட்டக்கச்சியைச் சேர்ந்த சாவித்திரி ஆகியோரே ஒட்டுசுட்டான், சிவநகர்ப் பகுதியில் வசித்து வந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கேதீஸ்வரன் ஒட்டுசுட்டான் நகர்ப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ள அதேவேளை, மனைவி வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கைதுக்கான காரணம் இதுவரைத் தெரியவரவில்லை. எனினும், முன்னாள் போராளி கேதீஸ்வரனின் தொலைபேசியில் சர்ச்சைக்குரிய காணொளி இருந்ததாலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அண்மைக்காலமாக முன்னாள் போராளிகள் திடீர் திடீரென கைது செய்யப்பட்டு வருவதோடு, இந்த கைதுகள் சட்டரீதியற்றவையாகவும் இடம்பெற்று வருகின்றது. இவை தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவிலும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4,281)

## பொருளாதார...

மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் இல.128இல் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் துறைசார் நிபுணர்களை கலந்து கொண்டு தமிழ் மக்களின் எதிர்கால நலன் கருதி ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு தமிழ் மக்கள் பேரவையின் பொருளாதார வலுவூட்டலுக்கான உபகுழு கேட்டுள்ளது. (செ)

## பஷிலின் இரு...

வகையில் 7 பாதுகாப்பு அதிகாரிகள் சட்டரீதியாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் தவிர மேலதிகமாக, 148 இராணுவ மற்றும் கடற்படையினரை உள்ளடக்கிய பாதுகாப்பு அணி ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இவர்களில் பலர், நாய்க்கூண்டைப் பராமரிப்பது போன்ற பஷில் ராஜபக்ஷ குடும்பத்தின் தனிப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தப் பணிகளுக்காக இவர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பிரதம பொலிஸ் ஆய்வாளர் ரஞ்சித் ராஜபக்ஷவும், உதவி ஆய்வாளர் ஹேரத்தும் மேற்கொண்ட விசாரணைகளில் இந்த தகவல்கள் தெரியவந்துள்ளதாக, மூத்த அரச சட்டவாளர் ஜனக பண்டார, ஆணைக்குழு விசாரணைகளின் போது தெரிவித்தார். (செ-11)

## குற்றத்தை...

வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்று கொழும்பில் செய்தியாளர்கள் சந்திப்பின்போது இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இலங்கை இராணுவம் வடக்குக் கிழக்கு பகுதிகளில் மாத்திரம் அல்லாமல் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

இது 2018ஆம் ஆண்டளவில் நிறைவுறுத்தப்பட்டு இராணுவ சூன்ய நடைமுறைகள் அங்கு மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கில் அதிக இராணுவ பிரசன்னத்தை குறைக்குமாறும் பொது மக்களின் நடவடிக்கைகளில் இராணுவ தலையீட்டை அகற்றுமாறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கோரிக்கை விடுத்து வருகிறது.

இதனை அடுத்து இலங்கை அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஏற்கெனவே இராணுவத்தினர் பல வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளார்கள் என மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்த நிலையில் படையினர் வசமிருந்த நிலங்கள் பொதுமக்களிடம் மீளவும் கையளிக்கப்பட்டுவருகின்றன.

அத்துடன் போரின்போது காணாமல் போனோரின் உறவினர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை, முன்னாள் அரசாங்கத்தை போன்று தகவல் கொண்டு வருவோரை சுட்டுக்கொல்லும் கொள்கையை அரசாங்கம் பின் பற்றாது என்றும் மங்கள சமரவீர தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டுக்குத் திரும்பி எந்தவொரு பகுதியிலும் மனிதவுரிமை தொடர்பான விடயங்களை நேரில கண்காணிக்கு மாறு அமைச்சர் இதன் போது அழைப்பு விடுத்தார்.

முன்னைய அரசாங்கம் போர் தொடர்பான கொள்கையை தொடர்ந்தும் கடைபிடித்துவந்தது.

எனினும் தற்போதைய அரசாங்கம் வித்தியா சமான கொள்கையை கடைபிடிப்பதாக மங்கள சமரவீர தெரிவித்தார்.

இராணுவத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

இராணுவத்தை தண்டிக்கவிருப்பதாகவும், காட்டிக் கொடுத்திருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அவ்வாறான உறுதிமொழிகள் எவையும் வழங்கப்படவில்லை.

ஆனால் குற்றமிழைத்தவர்கள் மற்றும் அதற்கான உத்தரவுகளை விடுத்தவர்கள் இராணுவத்திலானாலும், அரசாங்கத்திலானாலும் தண்டிக்கப்படுவது புதிய விடயம் ஒன்று இல்லை.

இராணுவத்தின் நற்பெயரை பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

எனவே குற்றமிழைத்தவர்களை விசாரணை செய்து அடையாளம் காண வேண்டும்.

அதேநேரம் இந்த குற்றங்களுக்கான உத்தரவுகளை பிறப்பித்தவர்கள் அடையாளம் காணப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் காணாமல் போனோர் தொடர்

23ஆம் பக்கம் பார்க்க....

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
விசேட செயலமர்வு
A/L 2016 தொழில் நுட்ப பிரிவு
08,09.10 திகதிகளில் { பொறியியல் தொழில்நுட்பம் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
15,16 திகதிகளில் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
17,18 திகதிகளில் I.C.T விவசாயம், புவியியல்
• கையேடுகள் வழங்கப்படும்
நேரம் காலை 8.30 - 1.30
முற்பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
தொடர்புகளுக்கு 0772487774
கட்டணம் அறவிடப்படும்
(5148)

யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
JULY 12 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி முதல் 12, 13, 14, 15 ஆகிய நான்கு தினங்களில்
Smart Phone கள் உற்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.
2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியழித்த முதல்தர ஆசிரியர்
Ganesh Sir
பெறுமதியான Certificate வழங்கப்படும்
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலாருக்கும் வயதெல்லை இல்லை ஆரம்ப அறிவு ஆங்கிலம் தேவையற்றது
ஆசன முன் பதிவுக் கட்டணம் 2500/-
பாடநெறி கட்டணம் 10,000/-
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.
SOFTVIEW IT & COMPUTER ACADEMY
No. 221, Kandy Road, Jaffna.
(சிலோன் பெந்தகொஸ்டல் மிஷன் அருகில்)
0777 475 783 (5140)

வட இந்திய காசி யாத்திரை
ஆரம்பம்: 06.08.2016 நாள்கள்: 19 யாத்திரீகர்: 15 பேர்
செல்லுமிடங்கள்: டெல்லி அட்ஷயதாம் நாராயணர் கோயில் உட்பட சுற்றிப் பார்த்தல், ஆக்ரா தாஜமஹால் செங்கோட்டை பார்த்தல். அலகாபாத் திருவேணி சங்கமம், புனித நீராடல். ஹரித்துவார் சுற்றிப் பார்த்தல், கங்காபூசை தரிசனம். ரிஷிகேஸ் தொங்குபாலம் உட்பட சுற்றிப் பார்த்தல் சிவானந்த ஆச்சிரமம் உட்பட குருச்சேத்திரம் பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம். வேறு இடங்களும் பார்த்தல், சீத்தாமடி காசியில் 3 நாள்கள் 15 இடங்கள் பார்த்தல். கங்காபூசை, காசிவிஸ்வநாதர், அன்னபூரணி உட்பட மதுரா கிருஷ்ணஜென்ம பூமி இராமேஸ்வரம், மதுரை, திருப்புலானி, நவபாஷாணம், உத்திரகோச மங்கை, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்காபுரம், காளகஸ்திரி உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.
பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை
பயணம் 5 விமானம் வரும் மற்றைய பயணம் A.C பஸ், உணவு மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைத்த மூன்றுவேளை உணவு, ஒரு நாளைக்கு ஒரு லீற்றர் குடிநீர், சுகாதாரமான 2 பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள், காலை, மாலை காப்பி, ரீ உட்பட விருப்பமுடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். மடப்பள்ளி சமையல் ஆட்கள் சமைப்பதால் கோயில்களில் பணிபுரிவோரும் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம். விபரம் கேட்டறிந்து பதிவு செய்யவும். வயதானவர்கள் பாதுகாப்புடன் அழைத்துச் சென்று அழைத்து வரப்படுவார்கள்.
மேலதிக விபரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் (மகன் ராஜன்)
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே: 077 768 0102, 077 736 2154
Facebook:sridevisriranganathan.thuraiappa
(C-5120)

A/L பொருளியல்
MCQ BOOK-5 ரூபா 130
அரச பொருளியல் $ சர்வதேசப் பொருளியல்-புதிய சென்மதி நிலுவை, புதிய தரவுகள், தகவல்கள், புதிய வடிவமைப்புடன் மூன்றாம் பதிப்பு.
(5147)
முழுப்பாடத்திட்டமும் அடங்கிய 2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறவழிவகுத்த 11 கட்டமைப்பு வினாவிடைகள் & 6 MCQ BOOKS
ஆசிரியர் வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

வேலைவாய்ப்பு
நியூ நகுலா ஜுவல்லறி, நியூ லலிதாஸ் ஜுவல்லறிக்கு
■ விற்பனையாளர்
■ கணக்கு பதிவாளர்
போன்ற பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. O/L, A/L படித்தவர்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும் (ஆண்கள் மட்டும்)
நியூ நகுலா ஜுவல்லறி
இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4101
(5146)

Dutch, Deutsch, French
தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.
French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன
Vivekananda Academy
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0213216928 077 4842 464
(Gov. Reg: W/A 76795)
(C-5111)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(கி-5126)

G.C.E. A/L - 2016
இலங்கையின் முதற்தர வணிக ஆசிரியர் யாழ் மண்ணில் !!!
Business Studies
Final Seminar
S.Mayuran (BBA,Hons,PGDE,MBS,MED SLPS)
(இலங்கையின் பிரபல வணிக நூல், வணிக ஆசிரியர் )
காலம் :- July 11th நேரம் :- 8.30 A.m - 5.30 Pm
முதலீடு :- Rs 500/- (Tutes Refreshment உட்பட)
Veerasingam Hall
No.12, KKS Road, Jaffna.
Tel : 077 8446254 / 077 6027167

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-19

**பகுதி-II**

ஆசிரியர்:-திரு.வே.அன்பழகன்

நேரம்:- ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள்

| | |
|---|---|
| வினாத்தாள் I | |
| வினாத்தாள் II | |
| மொத்தம் | |

**01.** பின்வரும் பகுதியை வாசித்து 1 - 7 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

இருள் சூழ்ந்த வானத்தில் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து மிகப் பிரகாசமான வெள்ளை நிற ஒளி வீசியது. இடையிடையே மலர்களைத் தூவியது போல் சிறிய நட்சத்திரங்கள் பிரகாசித்தன. சந்திர ஒளியினால் சுற்றுப்புறச் சூழல் எமக்குத் தெளிவாகப் புலப்பட்டது. எனினும் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் வீடுவாசல்களோ, விளக்கொளியோ தென்படாததனால் எமக்குப் பயம் ஏற்பட்டது. இரவு நேரங்களில் மாத்திரம் உணவு தேடி உலவும் பட்சியான ஆந்தை அலறும் சத்தம் கேட்டது. அவ்வொலியினால் சுற்றாடலில் நிலவிய நிசப்தம் கலைந்தது. இடையிடையே பெரிய வௌவால்கள் வானில் வேகமாகப் பறந்தன. பகற்பொழுதில் பார்க்கக்கூடிய கிளிகள், மைனாக்கள் போன்ற பட்சிகளை இரவு நேரத்தில் நாம் காணமுடியாமல் உள்ளது.

01. பிரகாசமான வெள்ளை நிற ஒளி எங்கிருந்து வீசியது? ..............................
02. சுற்றாடலில் இருந்த நிசப்தம் எதனால் கலைந்தது? ..............................
03. **நட்சத்திரம்** என்பதன் பன்மைச் சொல் - ..............................
04. **"ஒளியினால்"** என்பதன் ஒத்தகருத்துச் சொல் ..............................
05. **"வேகமாக"** என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ..............................
06. பந்தியிலுள்ள உவமைத் தொடர் ஒன்றை எழுதுக. ..............................
07. **பறந்தன** என்பதன் எதிர்கால வடிவம் ..............................

**02. பின்வரும் தொடர்களின் கருத்தை எழுதுக.**

1. கண்மலர்தல் - ..............................
2. சூரியனைக்கண்ட பனி போல - ..............................

**03. எழுத்துப்பிழையற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. தொழிலாழி, தொளிலாளி, தொலிளாளி, தொழிலாளி
2. மாதுலம்பலம், மாதுளம்பலம், மாதுளம்பழம், மாதுழம்பழம்

**04. "யாருக்கும் இல்லையென்று கூறாது வழங்குபவன்"** என்பதைக் குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக.

..............................

**05. ஒழுங்குபடுத்தி எழுதுக.**

என்பது / களஞ்சியம் / நூலகம் / ஆகும் / அறிவுக் / ஓர்

..............................

**06.** "அம்மா அதிகாலையில் எழுந்து உணவு சமைப்பார்." **இதைத் தனித்தனி இரு வாக்கியங்களாக எழுதுக.**

..............................

..............................

**07. சரியான விடை எழுதுக.**

1) மயில் கூவும் அது போல **ஆந்தை**

..............................

2) 75 ஆண்டு நிறைவு விழா பவளவிழா என்பது போல 60 ஆண்டு நிறைவு விழா

..............................

3) குரங்கின் பெண் மந்தி அதுபோல **யானையின் பெண்**

..............................

4) பனையின் இளமைப்பெயர் வடலி என்பது போல நெல்லின் இளமைப்பெயர்

..............................

5) **சரியான குறியீடுகளை இடுக.**

அம்மா அவனைப் பார்த்து எங்கே சென்றாய் என்று கேட்டார்

**08. பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1) வானவில் - ............................................................ 2) தொலைபேசி - ............................................................


3) காலை வணக்கம் - ...............................................

**09. பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கான தமிழ்ச் சொல்லை எழுதுக.**

1) I want to play - ............................................ 2) Rabbit - ............................................................

3) Take the book - ............................................

**10. பின்வரும் பிராணிகளின் ஆங்கிலச்சொல், சிங்களச் சொல்லின் தமிழ் உச்சரிப்பு என்பவற்றை எழுதுக.**

| | | ஆங்கிலச்சொல் | சிங்களச் சொல்லின் தமிழ் உச்சரிப்பு |
|---|---|---|---|
| 1) |  | ........................................ | ........................................ |
| 2) |  | ........................................ | ........................................ |

**11. பின்வரும் சிங்களச் சொல்லின் தமிழ்க்கருத்தை எழுதுக.**

1) மேயா மகே அய்யா - ............................................................................................................

**12. பின்வரும் தமிழ்ச் சொல்லுக்கான சிங்களக் கருத்தை எழுதுக.**

எனக்கு நீர் தாருங்கள் - ............................................................................................................

**13. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. நீருள்ள கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் பனிக்கட்டி ஒன்று இடப்பட்டுப் பாத்திரம் மூடிவைக்கப்பட்டது. இதன்போது பெறப்பட்ட பின்வரும் அவதானங்களில் பிழையானது எது?
   1) பனிக்கட்டி நீரில் மிதந்தது
   2) நீர் குளிர்ச்சியடைந்தது.
   3) கண்ணாடிப் பத்திரத்தின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் காணப்பட்டன.
   4) பனிக்கட்டி நீருக்குள் அமிழ்ந்தது.

2. இலங்கை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
   1) இலங்கையில் 25 மாவட்டங்கள் உள்ளன.
   2) இலங்கை இந்தியாவிற்கு தெற்கில் அமைந்துள்ளது.
   3) இலங்கையில் எட்டு மாகாணங்கள் உள்ளன.
   4) இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு 1948 இல் ஆகும்.

3. அவரை வித்து ஒன்று முளைக்கும்போது வித்தில் முதலில் தோன்றுவது எது?
   1) இலை 2) கிளை 3) முளைவேர் 4) பூ

4. நாளொன்றில் இரவுப் பொழுது தொடங்கும் போது அதிகம் நடமாடும் பிராணி எது?
   1) இலையான் 2) நுளம்பு 3) தும்பி 4) ஈசல்

5. முட்கள் காணப்படும் தாவரம் எது?
   1) தூதுவளை 2) மரவள்ளி 3) சூரியகாந்தி 4) ஈரப்பலா

6. "விகாரை" என்பது எச்சமயத்துடன் தொடர்புபட்ட புனிதத் தலமாகும்.
   1) இந்து 2) இஸ்லாம் 3) பௌத்தம் 4) கத்தோலிக்கம்

7.  இந்தப் பிராணியின் முட்டையின் நிறம் யாது?
   1) வெள்ளை 2) மஞ்சள் 3) கறுப்பு 4) சிவப்பு

8. கூட்டிலைகள் இல்லாத தாவரம் பின்வருவனவற்றுள் எது?
   1) வெற்றிலை 2) புளி 3) நெல்லி 4) சீமைக்கிளுவை



9. நாக்கை வெளியே நீட்டி உணவைப் பெற்றுக் கொள்ளும் விலங்கு
   1) பூனை 2) முயல் 3) குரங்கு 4) ஓணான்

10. முட்டையின் மூலம் இனப்பெருக்கம் செய்யாத பிராணி எது?
    1) பல்லி 2) எலி 3) ஆமை 4) ஓணான்

11. ஜின் கங்கை கடலில் கலக்கும் இடம் எது?
    1) திருகோணமலை 2) காலி 3) மாத்தறை 4) கொழும்பு

12.  மேற்குறித்த உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர் யாது?
    1) தென் சிலுவை 2) சப்தரிசி மண்டலம்
    3) தேள் 4) கலப்பை

13. பூச்சிகளைக் கவரும் தாவரத்தின் பகுதி எது?

1)  2)  3)  4) 

14. பின்வரும் எந்நிகழ்வு வரட்சியான வானிலைக்குரிய அறிகுறி என எமது முன்னோர்கள் கூறுவர்?
1) ஆக்காட்டிக்குருவிகள் வானில் தாழ்வாகப் பறத்தல்.
2) எறும்புகள் கூட்டம் கூட்டமாக நிலத்திலிருந்து மேலே ஏறுதல்
3) மாலை நேரத்தில் வானம் செந்நிறமாகத் தோன்றுதல்
4) ஈசல்கள் புற்றிலிருந்து வெளிவருதல்

15. சிலந்திக்கு எத்தனை கால்கள் உள்ளன?
1) நான்கு 2) ஆறு 3) எட்டு 4) பத்து

16. பறக்க மாட்டாத பறவை எது?
1) கோழி 2) காகம் 3) குயில் 4) பென்குயின்

17. சிங்கள அகராதியின் ஆசிரியர் யார்?
1) டி.பி.ஜயதிலக்க 2) பி.பி.ஜாயா 3) அறிஞர் சித்திலெப்பை 4) கலாநிதி ஆனந்த குமாரசாமி

18. எலுமிச்சம்பழச்சாற்றில் அதிகளவில் இருக்கும் போசணைப் பதார்த்தம் யாது?
1) கொழுப்பு 2) புரதம் 3) விற்றமின் C 4) கல்சியம்



19. தரப்பட்டுள்ள மரங்களுள் ஆணிவேருள்ள மரம் எது?
1) தென்னை 2) கித்துள் 3) பனை 4) பப்பாசி

20. பின்வரும் தாவர இலைகளில் மூன்று ஒத்த வடிவத்தை உடையன. வேறுபட்ட வடிவத்தை உடைய தாவர இலை எது?
1) வெற்றிலை 2) மிளகு 3) வட்டக்கண்ணி 4) திப்பிலி

21. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம் எது?
1) புன்னை 2) இருவேரி 3) சீதேவியார் செங்கழுநீர் 4) திப்பிலி

22. விவசாயிகள் 'ஏர்' கொண்டு வயலை உழுதனர். இதில் ஏர் என்பது,
1) மாடு 2) இயந்திரம் 3) கலப்பை 4) துடுப்பு


**17. பின்வரும் தையல் வகையின் பெயரை எழுதுக.**

1)  2) 

(................................) (................................)


**18. பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.**

**(முக்குத்திப்பூண்டு, முடக்கொத்தான், அவரி, ஆடுதீண்டாப்பாளை)**

1)  2) 

(................................) (................................)


**14. சரியான விடைகளைக் கணித்து எழுதுக.**



1.தரப்பட்டுள்ள ஆணியின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?


2.வெற்றிடமாக உள்ள இடத்தில் வரவேண்டிய இலக்கத்தைக் கூட்டுக்குள் எழுதுக.

```
  7 8 4
- □ □ 5
  3 4 9
```

3. 


பாடசாலையில் 5ஆம் வகுப்பில் மாணவர் தொகை 3 பிரிவாக (A,B,C) படத்தில் காட்டியபடி இருந்தது. 5A வகுப்பில் 30 பேர்கள் இருந்தால், 5B வகுப்பில் எத்தனை பேர் இருப்பார்கள்?

(..........................................)

4. 


இந்தக் கோட்டுப் படத்தில் சிறிய சதுரத்தின் 1 பக்க நீளம் 1 cm. நிறந்தீட்டப்படாத பகுதியின் பரப்பளவு யாது?

(..........................................)

5. 

இவ்வுருவில் நிறந்தீட்டப்படாத பகுதி என்ன பின்னம்? (..........................................)

6. ஒரு டசின் பென்சில் ரூபா **96.00** ஆயின், 7 பென்சில்களின் விலை யாது? (........................ரூபா ........................சதம்)


7. 


இந்தக் கடிகாரத்தில் காட்டப்படுவது பிற்பகல் (மாலை) நேரமாகும். இதனை டிஜிற்றல் நேரப்படி எழுதுக.(........................................................................................................)

8. சுருக்குக. $\frac{7}{8} - \frac{1}{2}$ (........................................................................................................)

9. ஒரு முட்டையின் விலை ரூபா **8. 50** ஆயின் **12** முட்டைகள் வாங்கி **200** ரூபா கொடுத்தால் மீதுதிப்பணம் எவ்வளவு? (........................ ரூபா ...........சதம்)

10. நிறந்தீட்டப்படாத பகுதியின் பரப்பளவு எவ்வளவு?





(........................................................)

11. 


சிறிய பாத்திரத்தினால் 6 தரம் நீரைப் பெரிய பாத்திரத்தில் ஊற்றியபோது அது நிரம்பிவிடும். ஆகவே பெரிய பாத்திரத்தின் கொள்ளளவு எவ்வளவு?

(........................................................)

12. சுகந்தனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் **18 km** ஆகும். அவன் பாடசாலைக்கு அத்தூரத்தின் $\frac{1}{6}$ இனைச் சைக்கிளில் சென்றான். மீதித்தூரத்தைப் புகையிரதத்தில் சென்றான். அவன் புகையிரதத்தில் சென்ற தூரம் எவ்வளவு?

13. 


**A, B, C, D** ஆகிய நகரங்களுக்கிடையேயுள்ள தூரங்கள் கீழேயுள்ள கோட்டுப்படத்தில் காணப்படுகின்றன.

A யிலிருந்து B, C ஆகிய நகரங்களுக்கூடாக D நகருக்குள்ள தூரத்தைக் காண்க.
(........................................................)

14. 1 கிலோகிராம் தேயிலையின் விலை ரூபாய் 280 உம் 1 கிலோகிராம் சீனியின் விலை ரூபாய் 64 உம் ஆகும். 250 கிராம் தேயிலையையும் 500 கிராம் சீனியையும் வாங்கும்போது கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் யாது?

(.................. ரூபா .................... சதம்)

**15. கீழேயுள்ள ஆறு உருக்களும் மாலாவின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வை ஒழுங்கு முறையாகக் காட்டுகின்றன. அந்நிகழ்வின்படி, சரியாக நான்கு வாக்கியங்களில் ஒரு கதை எழுதுக.**

(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இருப்பதுடன் அவ் வாக்கியங்களின் எழுவாய், பயனிலைகள் திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.)



1.........................................................................................................................
.........................................................................................................................

2.........................................................................................................................
.........................................................................................................................

3.........................................................................................................................
.........................................................................................................................

4.........................................................................................................................
.........................................................................................................................

**இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை (08.07.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.**